இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 227 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 27 செவ்வாய்க்கிழமை 11.07.2017

## சகல தரப்பினரும் ஏற்கும் அரசமைப்பே உருவாகும்

அதற்குரிய சூழல் வந்துள்ளது என்கிறார் அமைச்சர் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 11
நீண்டகாலத்துக்குப் பின்னர் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பொன்றை உருவாக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. >> 06



மீனவர்கள் போராட்டம்

## சட்டவிரோத மீன்பிடியை தடை செய்யக் கோரி

முல்லைத்தீவு, ஜூலை 11
சட்ட விரோத மீன்பிடி உபகரணங்களைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் >> 04

## தையிட்டியில் நேற்று 7 வீடுகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
வலி. வடக்கு, தையிட்டி வடக்கு ஊறணிப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த பொதுமக்களுக்குச் சொந்தமான 7 வீடுகள் நேற்று >> 25

## ராஜபக்ச குடும்பத்துக்கு மன்னிப்பு தேவையில்லை

நியாயம் மட்டும் வழங்கினால் போதும் என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஜூலை 11
ராஜபக்ச குடும்பத்துக்குத் தேவையற்ற விதத்தில் மன்னிப்பு வழங்கத் தேவையில்லை. நியாயத்தை மாத்திரம் வழங்கினால் போதும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச நேற்றுத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். >> 25

சிறப்புரிமையைக் காரணமாகக் குறிப்பிட்டு

## விசாரணை அறிக்கையை வழங்காது விடுவது தவறு

முதலமைச்சர் அமைச்சுக்கு ஆணைக்குழு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 11
வல்வெட்டித்துறை நகர சபை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைக் குழுவின் முழுமையான அறிக் >> 25

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் உதவியாளர் விவரம்:

## கோரிய தகவலை 14 நாள்களுள் வழங்க ஆணைக்குழு பணிப்பு

இவை சிறப்புரிமைக்குள் உள்ளடங்காது எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 33 பேரினதும், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர்களின் விவரங்களை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தமைக்கு எதிராக, தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு, கோரிய >> 06

காணி, பொலிஸ் அதிகாரங்களுக்கு மேலதிகமாக

# தமிழர்களுக்கு நிதி, சட்டவாக்க அதிகாரங்கள்

பன்னாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அரசு திட்டம் என்கிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூலை 11
வடக்குகிழக்குத் தமிழர்களுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் சேர்த்து நிதி, சட்டவாக்க அதிகாரங்களையும் அரசு மேலதிகமாக வழங்கவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். >> 04



## குடும்பத்தலைவர் மீது கைக்கோடரியால் சரமாரியாக வெட்டு

யாழ்ப்பாண நகரில் நேற்றிரவு பயங்கரம் >> 04

காணாமற்போனோர் சட்டவரைவு;

## வெள்ளை வான் கடத்தல்களை அறிமுகம் செய்தோரே எதிர்ப்பு

சாடுகின்றார் அமைச்சர் மங்கள



கொழும்பு, ஜூலை 11
வெள்ளை வான் கடத்தல் கலாசாரத்தை நாட்டுக்கு அறிமுகம் செய்தவர்கள் காணாமற்போனோர் குறித்த சட்டத்தைத் தடுக்கி >> 04

## காணாமற்போனோர் சட்டவரைவு நாட்டை பேராபத்தில் தள்ளும்

அரசை எச்சரிக்கிறது மகிந்த தரப்பு

கொழும்பு, ஜூலை 11
காணாமற்போனோர் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் அது நாட்டுக்குப் பேராபத்தாக அமையும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் >> 24



மக்கள் கொதிப்படைந்ததால் துன்னாலையில் நேற்றுப் பதற்றம்

## வடமராட்சிச் சூட்டுச் சம்பவம்: இரு பொலிஸாருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 11
வடமராட்சி கிழக்கில் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் உத்தியோத்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஸ் (வயது - 24) என்ற இளைஞர் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந் >> 25

### ஊடகவியலாளர்களை வெளியேற்றிய பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 11
துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களி >> 06

மேலதிக படங்கள், காணொலிகள்: newuthayan.com

## இடைக்கால அறிக்கை வந்த பின் பௌத்த பீடாதிபதிகளை கூட்டமைப்பு சந்திக்கும்

கொழும்பு, ஜூலை 11
இடைக்கால அறிக்கை வெளியான பின்னரே பௌத்த பீடாதிபதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்துப் பேசும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் >> 04

## வீதியில் சென்ற ஆசிரியையிடம் தாலிக்கொடி கொள்ளை

சுண்டுக்குளியில் பட்டப்பகலில் துணிகரம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியையின் >> 04

காணி வழங்குவதில் எழுந்தது சர்ச்சை

## கூட்டத்திலிருந்து இடைநடுவில் வெளியேறினார் முதல்வர் விக்கி

கிளிநொச்சி, ஜூலை 11
முல்லைத்தீவு, கூழாமுறிப்பில் முஸ்லிம் மக்களுக்குக் காணி வழங்குவது தொடர்பாக எழுந்த சர்ச்சையால் மாவட்ட அபிவிருத்திக் குழுக் >> 25

## விகிதாசார அடிப்படையில் இரு இனங்களுக்கும் காணி

முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜூலை 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்குக் காணி வழங்குவதா >> 25

## கோத்தாவிடம் விசாரணை

கொழும்பு, ஜூலை 11
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் பெரும் நிதிமோசடி குறித்து விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழு நேற்று விசாரணை நடத்தியது. கடந்த >> 04

newuthayan.com புதுப் பொலிவுடன் உதயன் இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலாவெளிப் படகோட்டிகள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

திருமலை, ஜூலை 11

புறாமலை தேசிய பூங்காவுக்கான நுழைவுக்கட்டணக் காரியாலயத்தைகும்புறுப்பிட்டிக்குமாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை நிலாவெளிக் கடற்பகுதியில் உல்லாச மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான படகுச் சேவையில் ஈடுபடும் படகோட்டிகள் மற்றும் அதன் உரிமையாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில்ஈடுபட்டனர். பூங்காவின்நுழைவுக் கட்டணக் காரியாலயத்தை வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிலையில் காரியாலய இடமாற்றத்தால் சுற்றுலாப் பயணிகளுக்கானபடகுச்சேவைகளில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளநேரிடும்என்றுபடகோட்டிகள்தெரிவித்தனர். போராட்ட இடத்துக்கு வருகை தந்த வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களப் பொறுப்பதிகாரி, தற்போதைஇடத்திலேயேநுழைவுக்கட்டணக்காரியாலயம் இயங்கும் என்று உறுதி மொழிஅளித்தார். அதனையடுத்து படகோட்டிகளின் போராட்டம் கைவிடப்பட்டது. (ஐ-10)

# ஊழல்வாதிகளைவெளியேற்றக்கோரி மட்டக்களப்பில் மாபெரும் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 11

"ஊழலுக்கு எதிரான மக்கள் பேரணியும்நியாயமானஅதிகாரிகளின் இடமாற்றத்தை நிறுத்துவதற்கான வேண்டுகோள்" எனும்தலைப்பில் மட்டக்களப்புகாந்திபூங்காமுன்பாக நேற்று மாபெரும் பேராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பில் ஊழல்களில்ஈடுபடுவோரைமாவட்டத்திலிருந்துவெளியேற்றவேண்டும்என்பதுடன், தகுந்ததண்டனைகளும் வழங்கப்பட வேண்டும். அதற்காகஅனைவரும்இணைந்து போராடமுன்வரவேண்டும்என்று பொது அமைப்புக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டச்செயலாளரை இடமாற்றக்கோரியும், இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இரு பிரதேச செயலாளர்களின் இடமாற்றங்களை ரத்துசெய்யக்கோரியும் பேராட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் வாகரை மற்றும் செங்கலடி பிரதேச மக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், எஸ்.வியாழேந்திரன், ஞா.சிறீநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது அரச தலைவருக்கு வழங்குவதற்கான மனுக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து மட்டக்களப்புமாவட்டசெயலகம்வரை கவனயீர்ப்புப் பேரணி இடம் பெற்றது. இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பிரதான வாயில் பூட்டப்பட்டதுடன் பெருமளவான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# மூதூர் சிறுமிகள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு

மூதூர், ஜூலை 11

மூதூர் பெரியவெளி சிறுமிகள் மூவர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு மூதூர் நிதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில்தேசியசிறுவர்பாதுகாப்பு அதிகார சபையால் விண்ணப்பிக்கப்பட்ட வீடியோ ஆதாரம் பெறல்தொடர்பான விண்ணப்பத்துக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

சம்பவத்துடன் தொடர்புடைய வழக்குகள் மூன்றும் மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி றிஸ்வான் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

இதன் போது சந்தேக நபர்கள் 6 பேரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட சிறுமிகள் சார்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தவிசாளர் மற்றும் இரண்டு சட்டத்தரணிகள்மேலும்6சட்டத்தரணிகள்உட்பட9பேரும், சந்தேக நபர்கள் சார்பாக 6 சட்டத்தரணிகளும் முன்னிலையாகினர்.

இந்த நிலையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர்மற்றும்சட்டஅலுவலகர்கள், பாதிக்கப்பட்ட சிறுமிகளைக் கொழும்பில் உள்ள தமது தலைமை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று அவர்களிடம் வீடியோ ஆதாரம் ஒன்றைத் தயாரிக்கவேண்டும்என்றுகோரிக்கை விடுத்தனர். அதற்குப் பொலிஸ் பாதுகாப்புடன்அழைத்துச்சென்று அந்தஆதாரத்தைத்தயாரிப்பதற்கு நீதிமன்றம்அனுமதிவழங்கியது. மேலும் இந்த வழக்கு இன்னும் குற்றத் தடுப்பு பிரிவுக்கு மாற்றப்படாது உள்ளதால் இந்தப் பணியை துரிதப்படுத்துமாறு மூதூர் பொலிசாருக்கு வலியுறுத்தப்பட்டது. வழக்குக்கு த்தேவையான ஆதாரங்களான மருத்து அறிக்கை மற்றும்அரசபகுப்பாய்வுதிணைக்கள அறிக்கை முதலியன கிடைக்கப் பெறாததால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-10)

# சலுகைவிலையில் மக்களுக்கு அரிசி

## அரசதலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 11

அரிசியை இறக்குமதி செய்துசலுகைவிலையில் மக்களுக்கு வழங்குவதற்குநடவடிக்கைஎடுக்கப் படும்என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவை, பலுகஸ்தமன அரசதலைவர் மாதிரி ஆரம்பப்பாடசாலைமாணவர்களிடம்ஒப்படைக்கும் நிகழ்வு பொலன்னறுவையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் அரிசியின் விலை உயர்வடைந்து உள்ளது. சந்தையில் உள்நாட்டு அரிசியின்விலைமேலும்அதிகரிப்பதால் அரசுக்கு நட்டம் ஏற்படும் நிலை வந்தாலும் மக்களுக்கு சலுகைவிலையில்அரிசிவழங்கப்படும்.

அரிசி விலை எவ்வளவுதான் அதிகரித்தாலும், அரசிலுள்ள பெரியவர்களுக்கு அது தெரிவதில்லை என தேசியபத்திரிகைஒன்றில்வெளியானசெய்தியை நான்படித்தேன். சாதாரண குடும்பத்திலிருந்து வந்த மக்களின் கவலை, வேதனைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய தலைவர் என்ற வகையில்அனைத்துநடவடிக்கைகளையும் அந்த அனுபவத்துடனே மேற்கொள்கின்றேன். நாட்டு மக்களை ஒருபோதும் பட்டினி போட நான் தயாரில்லை.

தற்போதைய அரசின் கீழ் சமூக, பொருளாதார, அரசியல் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன், எந்தசவால்வந்தாலும்சம்பந்தப்பட்டசெயற்றிட்டங்கள் குறிக்கோளுடன் முன்னெடுக்கப்படும். பாடசாலை உரிமையை வட மத்திய மாகாணம்உள்ளிட்டஏனையபிரதேசங்களுக்கும்வழங்கிமாணவர்களுக்குச்சமமானகல்விச்செயற்பாட்டை வழங்குவது இன்று நாட்டில் இடம் பெறும் முக்கியமான நடவடிக்கையாகும். - என்றார். (ஐ-10)

# ஆஸி. போர்க்கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தது

கொழும்புஜூலை 11



ஆஸ்திரேலியக் கடற்படைக்குச் சொந்தமான அன்சாக் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது.


இந்தக் கப்பலில் வந்தடைந்த அதிகாரிகளை இலங்கைக் கடற்படையினர் வரவேற்றனர்.

இந்தக் கப்பல் கிளாஸ் பிறிகேற் ரகத்தைசேர்ந்தஅருண்ராபோர்க் கப்பலாகும்.118மீற்றர்நீளத்தையும் 14.8 மீற்றர் அகலத்தையும் கொண்டது இந்தக் கப்பலில் 24 அதிகாரிகள் உள்ளிட்ட 190 பேர் பணியாற்றுகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தில் 4 நாள்கள்தங்கியிருந்துஇலங்கைக்கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# சம்பந்தர் சர்வாதிகாரியெனக் கூற எவருக்கும் அருகதையில்லை

## அமைச்சர் சத்தியலிங்கம் காட்டம்



வவுனியா, ஜூலை 11

நாடாளுமன்ற உறுப்பினர்ஒருவர்சம்பந்தன்ஐயாவின் 16 வருட சர்வதிகாரத்தினுள் தாங்கள் இருக்கின்றோம் என்று கூறியிருந்தார். அவர்களுடைய சர்வதிகாரத்தை நாங்கள் மறந்து விடவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்ப.சத்தியலிங்கம்தெரிவித்தார்.

வவுனியாகணேசபுரத்தில்மாகாயண குறித்தொருக்கப்பட்ட நன்கொடை நிதியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்பசுகாதாரவைத்தியநிலையம், வைத்திய அதிகாரி விடுதி என்பவற்றைதிறக்கும்நிகழ்வுநேற்றுநடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்த சமயத்தில் எவ்வாறு சர்வதிகாரிகளாக நடந்து கொண்டார்கள் என்பதுஎமக்குத்தெரியும். அவர்கள் அடித்த வலி இன்னும் எனக்கு மாறவில்லை. அவர்களுக்கு பயந்து நான் நான்நான்கரைமாதம்காட்டில்வசித்தேன். நான்கரை மாதம் சிராம்பி போட்டுமரத்தில்படுத்துதூங்கினேன். வவுனியாவிலிருந்து பட்டப்படிப்புக்காககொழும்புசெல்லவேண்டியிருந்தது. இப்போது சர்வதிகாரத்தை பற்றி கதைப்பவர்களுக்கு பயந்து நான் லொறியில் மணல் ஏற்றும் தொழிலாளியாக சரத்தோடு அனுராதபுரத்தில் இறங்கி அங்கு தான் குளித்து உடைகளை மாற்றி விட்டு கொழும்பு சென்றேன். இவை அனைத்து எமது வாழ்வில் திரும்பி வரக்கூடாது. நாங்கள் இன்னும்இறக்கவில்லை. எல்லோருடைய சர்வதிகாரத்தினையும் அனுபவித்தவர்கள் இன்றும் இருக்கின்றோம் சம்பந்தன் ஐயா 16 வருடங்களாக சர்வதியாக நடந்து கொண்டார் என்றறு கூறுவதற்கு எந்த தகுதியும் அவர்களுக்கு இல்லை. எங்களை எவ்வாறு நடத்தினார்கள் என்று எனக்கு தெரியும். அதை நான் மீண்டும் கிளற விரும்பவில்லை இங்கு எத்தனை பேர் காணாமல் போனார்கள்?, காணாமல்ஆக்கப்பட்டார்கள்?, கொலை செய்யப்பட்டார்கள்?, சுட்டுச் சுட்டுவீதியில்வீசப்பட்டார்கள்?, கொள்ளையடித்தார்கள்?. இவ்வாறுநிறைய விடயங்களைசெய்தார்கள். அவர்கள் இன்று சம்பந்தனை சர்வதிகாரி என கூறுவதற்கு தகுதியற்றவர்கள். என்றார். (ற-10,101)

# ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையம் வவுனியாவில் நேற்றுத் திறந்து வைப்பு



வவுனியா, ஜூலை 11

வவுனியாவில்புதிதாகநிர்மாணிக்கப்பட்டஆரம்பசுகாதாரமருத்துவ நிலையம், மருத்துவ அதிகாரி விடுதி என்பன வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்ப.சத்தியலிங்கத்தால்நேற்றுத்திறந்துவைக்கப்பட்டன.

வவுனியா கணேசபுரத்தில் வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் சிறுவர் நன்னடத்தை அமைச்சினால் சுதந்திர சுகாதாரசேவையைவலுப்படுத்தும் நோக்கில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியின் கீழ் இந்த இரு நிலையங்களும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன.

கணேசபுரம் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வடக்கு [illegible] நாதன் மயூரன், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்வினோநோதாரலிங்கம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்மருத்துவர்பவானிபசுபதிராஜா, பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன், செட்டிக்குளம் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சுதர்சன், கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலய அதிபர் எஸ்.நந்தசேனா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் செயலாளர் பத்மநாதன் சத்தியசீலன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பு செயலாளர்களானஇ.சஜீவன், பா.சிந்துஜன், பாடசாலைமாணவர்கள், பொதுமக்கள், சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 9 மில்லியன் ரூபா செலவில் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையமும், 5.84மில்லியன் ரூபா செலவில் மருத்து அதிகாரி விடுதியும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இராணுவத்தளபதியின் இடமாற்றத்தால் கேப்பாபிலவுக் காணி விடுவிப்பு தாமதம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த இராணுவத் தளபதி இடமாற்றம் பெற்றுச் சென்றதால், காணி விடுவிப்புத் தொடர்பாக உரிய தரப்புகளிடம் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. உங்களது காணிகளுக்கு விரைவில் செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு உறுதியளித்தார்.

கேப்பாபிலவில் நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். தமது மண்ணைப் படையினரிடம் இருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கையில், கேப்பாபிலவு இராணுவ முகாமுக்கு முன்பாக அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுடன் அவர்களின் போராட்டம் 132 நாள்களைக் கடந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அங்கு அமைச்சர், நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் மாவட்டச் செயலகம் முன்பாக தமது கவனவீர்ப்புப் போராட்டத்தைத் திடீரென முன்னெடுத்தனர்.

"போராட்டத்துக்கு இதுவரை தீர்வு கிடைக்காத நிலையில் காணி விடுவிப்புத் தொடர்பாக அரச தலைவருடன் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

" சர்வதேசமே திரும்பிப்பார், எங்கள் நிலமையை எண்ணிப்பார், மக்கள் பிரதிநிதிகளே எங்கள் வாழ்வின் உரிமையின் முடிவு என்ன, கேப்பாபிலவு பூர்வீக மக்கள் நடுத்தெரு நாய்களா?" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-10)

# டெங்கால் பெண் சாவு

பதுளை, ஜூலை 11

பதுளை அரசினர் மருத்துவமனையில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த 53 வயதுடைய பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இவரது இறப்புடன் பதுளை மாவட்டத்தில் டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

பதுளை அரசினர் மருத்துவமனையில் 85 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு, தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 360 பேர் டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். பதுளைப் பகுதியில் டெங்கு நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது. டெங்கு நுளம்பை ஒழிக்கும் வேலைத்திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று பதுளை மாநகர ஆணையாளர் எஸ்.ஏ. உடோவிட்ட தெரிவித்தார். (ஐ-10)

# மத்திய மாகாண பதில் ஆளுநர் பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 11

மத்திய மாகாண ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க, ஊவா மாகாண பதில் ஆளுநராக நேற்றுப் பதவியேற்றார். ஊவா மாகாண ஆளுநர் எம்.பி. ஜயசிங்க வெளிநாட்டுக்குச் சென்றிருப்பதால், ஏற்பட்டுள்ள தற்காலிக வெற்றிடத்துக்குப் பதில் ஆளுநராக நிலூக்கா ஏக்கநாய்க்க பதவியேற்றார். இவர் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை வரை, பதில் ஆளுநர் பதவியிலிருப்பார். ஊவா மாகாண ஆளுநர் எம்.பி. ஜயசிங்க எதிர்வரும் 19 ஆம் திகதி நாடு திரும்பி, 20 ஆம் திகதி ஊவா மாகாண சபையைப் பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# மகிந்தானந்த, வாஸ் குணவர்த்தன வழக்குகள் நேற்று விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 11

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு எதிரான வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

27 மில்லியன் ரூபா செலவில் பொரளை, கிங்ஸிலி வீதியில் வீடொன்றை கொள்வனவு செய்தமை தொடர்பில் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் விசாரணை செய்வதாக நீதிபதி உத்தரவிட்டார். குறித்த வழக்கை ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை ஒத்திவைப்பதாகவும் அவர் உத்தரவிட்டுள்ளார். அதேவேளை, பம்பலபிட்டியவில் கோடீஸ்வர வர்த்தகர் மொஹட் ஷியாம் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பொலி ஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-10)

# எனக்காக நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டாம்

## கார்லோ பொன்சேகா வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 11

எனக்காகவோ அல்லது என்னுடைய பதவியின் காரணமாகவோ, நோயாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வேலை நிறுத்தத்தில் எவரும் ஈடுபட வேண்டாம் என்று அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்திடம் பேராசிரியர் கார்லோ பொன்சேகா நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார். "இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய மற்றும் உதவிச்செயலாளர் மருத்துவர் ஹரித ஆகியோர் நாவலயிலுள்ள எனது வீட்டுக்கு வருகைதந்து என்னைப் பதவியிலிருந்து நீங்க வேண்டாம் என்றர்.

அரசு உங்களைப் பலாத்காரமாகப் பதவியிலிருந்து நீங்கச் சொன்னால் அதற்காகப் போராட்டத்தை முன்னெடுக்க நாம் தயாராக இருப்பதாகவும் அவர் கள் கூறினர் - என்றார். (ஐ-10)

# மீன்பிடிக்கற்கைகளுக்கானவளாக பணிகளை முன்னெடுக்க அனுமதி

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடிக் கற்கைகளுக்கான வளாகம் அமைக்கவென ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 ஏக்கர் காணியில் உடனடியாக அதன் பணிகளை மேற்கொள்ள யாழ். பல்கலைக் கழகத்தைக் கோரும் தீர்மானம் நேற்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வட மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட இணைத் தலைவர்கள் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மீன்பிடியியல் பீடம் அமைக்கவென நீண்ட காலத்துக்கு முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 ஏக்கர் காணி [illegible] அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணியில் எந்தவிதமான அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறானதோர் வளாகம் அமைக்கப்பட்டால் மாவட்ட மக்களும் நன்மை அடைவார்கள். இந்த மாவட்டத்தில் இன்றுவரை ஓர் தொழில் நுட்பக்கல்லூரிகூடக் கிடையாது. எனவே உடனடியாகக் காணியில் வளாகத்துக்கான பணிகளை மேற்கொள்ள யாழ். பல்கலைக் கழகத்தை கோரும் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும்" என்று கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கு கொண்டோர் அதனைத் தீர்மானமாக நிறைவேற்றி அதனை மாவட்டச் செயலாளர் ஊடாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக துணை வேந்தருக்கு அனுப்பி வைப்பதாக ஏகமனதாகத் தீர்மானித்தனர். (ஐ-01)

# தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு



கொழும்பு, ஜூலை 11

தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அரைநாள் சம்பளத்தை வழங்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கரபத்தனை ஊட்டுவள்ளித் தோட்டத்தின் பிரோமோர் பிரிவுத் தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டனர். மாதாந்த நாள் சம்பளம் வழங்கப்படும் இந்தக் காலப் பகுதியில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பளச் சிட்டையில் தோட்ட நிர்வாகம் அரைநாள் கொடுப்பனவு உள்ளிட்டுள்ளமையை அறிந்ததன் பின்பே தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"தோட்ட நிர்வாகம் வலியுறுத்திய 18 கிலோ தேயிலைக் கொழுந்தை எம்மால் கொய்ய முடியாதுள்ளது. 18 கிலோ தேயிலைக் கொழுந்துக்குக் குறைவாக கொய்தவர்களுக்கு அரைநாள் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை எமக்குத் தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட தொழிலுக்கான நாள்களுக்குரிய முழு நாள் சம்பளம் வேண்டும்" என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

போராட்ட இடத்துக்குச் சென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய தொழிற்சங்க பிரதிநிதிகள் தோட்டத்தில் உள்ள கொழுந்து மடுவத்தில் வைத்து தோட்ட நிர்வாகத்துடன் பேச்சு நடத்தினர். இதன்போது தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனையடுத்து தோட்டத் தொழிலாளர்களுக்கு அரைநாள் சம்பளத்தை வழங்காமல் முழு நாள் சம்பளத்தைத் தோட்ட நிர்வாகம் வழங்கும் என்று உறுதியளிக்கப்பட்ட பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்துக்கு காலம் கனிந்துள்ளது

## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பொது எதிரணியுடன் இரகசியப் பேச்சு என்கிறார் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 11

அரசியல், பொருளாதாரம் என அனைத்து வழிகளிலும் அரசு ஆட்டம் கண்டுள்ளதால் விரைவில் ஆட்சி மாற்றமொன்று ஏற்படுவதற்குரிய சாத்தியம் பிரகாசமாகவே தென்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு அணியான பொது எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

பெரும் நிதிமோசடி குறித்து விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகி வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபிள்ளைபோல் செயற்படும் அரசு, நாட்டில் எந்தவொரு தரப்புக் கூறுவதையும் கேட்பதாகத் தெரியவில்லை. தவறான முகாமைத் துவத்தால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. ஜனநாயக வழியிலான போராட்டங்கள் ஒடுக்கப்படுகின்றன. இதனால், அரசு மீது அதிருப்தியில் இருக்கும் மக்கள் ஆட்சிமாற்றமொன்றை விரும்புகின்றனர். அதற்கான காலம் விரைவில் உதயமாகும்.

ஆட்சியை மாற்றுவதற்குத் தேர்தல் வரை காத்திருக்கவேண்டியதில்லை. ஆளுந்தரப்பிலுள்ள சிலர் பொது எதிரணியுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். அவர்கள் இந்தப் பக்கம் வந்தாலேயே மாற்றத்தை ஏற்படுத்திவிடலாம். நாடாளுமன்ற நடைமுறை தெரிந்தவர்களுக்கு அது எப்படி நடக்கும் என்பது தெளிவாகப் புரியும். சில விடயங்களை இரகசியமாக வைத்துள்ளோம். காலம் வரும்போது அவை என்னவென்று தெரியவரும் என்றார்.

தினேஷ் குணவர்த்தன மகிந்த ஆட்சியில் அமைச்சராக இருந்தபோது அம்பாறை மாவட்டத்தில் நீர் விநியோகத் திட்டமொன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி பற்றியே அவரிடம் நேற்று முற்பகல் முதல் மதியம் வரை அரச தலைவர் ஆணைக்குழு உறுப்பினர்கள் விசாரணை நடத்தியுள்ளனர்.

அவருடன் வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, சிறிர ஜயக்கொடி, காமினி லொக்குகே, முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஆகியோர் விசாரணை முடிவடைந்து தினேஷ் குணவர்த்தன வெளியில்வரும்வரை வெளியில் காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## புதிய மருத்துவர் சங்கமொன்றை உருவாக்க முயற்சி

தற்போதைய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் செயலிழக்கச் செய்வதற்காகப் புதிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமொன்றை உருவாக்கும் முயற் >> 25

## பிரிகேடியர் ஜயந்த ரத்னாயக்கவை கைது செய்ய உதவி கோரல்

அமெரிக்காவின் வொசிங்டன் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராககடமையாற்றிய பிரிகேடியர் ஜயந்த ரத்னாயக்கவை கைது செய்யுமாறு தூதரகம் பன்னாட்டுப் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அவரது பதவிக்காலம் நிறைவடைந்தபின்னரும் நாட்டுக்குத் திரும்பாமல் தலைமறைவாகியிருப்பதனால் இலங்கைத் தூதரகத்தால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கைஇராணுவத்தின் கஜபாபடைப்பிரிவில் பிரிகேடியர் தரத்தில் அவர் பணியாற்றியிருந்தார். (வ)

## பிரதேச செயலர்கள் இடமாற்ற விவகாரம் கூட்டமைப்புக்கு எந்தத் தொடர்புமில்லை

### வியாழேந்திரன் எம்.பி. விளக்கம்

மட்டக்களப்பு, ஜூலை 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலர்களின் இடமாற்ற விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தத் தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை. எவரையும் இடம் மாற்றுங்கள் என்றோ அல்லது இடமாற்றவேண்டாம் என்றோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தத் தருணத்திலும் கூறவில்லை.

இதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்களின் இடமாற்ற விவகாரம் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலர் இடமாற்றத்தில் இந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவராகிய நான் முக்கிய பங்கு வகிப்பதாகப் பரப்புரைகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு ஆளும்கட்சி அமைச்சர்கள் ஒரு ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கிழக்கு முதலமைச்சர், மாகாண அமைச்சர் உறுப்பினர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

இவர்களை விட நாட்டின் தலைமை அமைச்சர் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் அதிக செல்வாக்கு உள்ளது. இவர்களுடைய கருத்துக்களைக் கேட்காமல் என்னுடைய கருத்தை மாத்திரம் கேட்டு பிரதேச செயலர்களை இடமாற்ற முடியாது. மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள் இடமாற்றம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளுமாறு என்னிடம் கூறவில்லை - என்றார். (ஜ-10, 47)

### தமிழர்களுக்கு...

பன்னாட்டு நிகழ்ச்சி நிரலில் நடக்கும் இந்தத் தேசவிரோத அரசமைப்பால் நாட்டுக்குப் பேராபத்து ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்புக்கு எதிராக இன்று பௌத்த பீடங்கள் களமிறங்கியுள்ளன. பௌத்த தேரர்கள் எல்லாவற்றையும் எதிர்ப்பவர்கள் அல்லர். பாரதூரமான விடயங்களை மாத்திரமே எதிர்ப்பர். அந்த அடிப்படையில்தான் இந்தத் தேசவிரோத அரசமைப்பை அவர்கள் எதிர்க்கின்றனர். இதன்மூலம் அரசமைப்பின் ஆபத்தை உணர முடிகிறது.

13ஆம் திருத்தச் சட்டத்தில் மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளபோதிலும் இந்த நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவோ, பிரேமதாஸாவோ, சந்திரிகாவோ, மகிந்தவோ அந்த அதிகாரங்களை வழங்கவில்லை. ஆனால் ரணில்தான் அதை வடக்குகிழக்குக்குக் கொடுப்பதற்குத் திட்டமிட் டுள்ளார்.

இந்த அதிகாரங்கள் மாத்திரமன்றி அவற்றுடன் சேர்த்து இன்னும் பல அதிகாரங்கள் கொடுக்கப்படவுள்ளன. அவற்றுள் முக்கியமாகத் தனியாகச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரமும் நிதி அதிகாரமும் வழங்கப்படவுள்ளன. வடக்குகிழக்கு இணைக்கப்பட்டே இந்த அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்படும்.

நாட்டை இரண்டாகப் பிரித்து அதில் ஒரு பகுதியை வடக்குகிழக்குத் தமிழர்களுக்கான தனிநாடாக உருவாக்கும் பன்னாட்டு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் இது நடக்கின்றது. இந்த நிகழ்ச்சி நிரலை இலகுபடுத்துவதற்காகவே புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவுள்ளது.

இந்தத் தேசவிரோத அரசமைப்பைத் தடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். மக்கள் போராட்டத்தின் ஊடாக அரசின் இந்தச் சதியை நாம் முறியடிப்போம். பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டெடுத்த நாட்டை மீண்டும் பயங்கரவாதிகளிடம் ஒப்படைப்பதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம் - என்றார். (த-3)

### பௌத்த...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு மாற்றம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு, பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கவுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

"புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை வெளிவரும் முன்னர், மகா சங்கத்தினரைச் சந்திப்பதில் அர்த்தமில்லை. எனவே, இடைக்கால அறிக்கை வெளிவந்ததும், அதிலுள்ள சரத்துகளைத் தெளிவுபடுத்தும் நோக்கில் மகாநாயக்கர்களைச் சந்திக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்திருக்கிறது" எனத் தெரிவித்தார். (த)

### சட்ட விரோத...

நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அபிவிருத்திக் குழு கூட்டம் நடைபெற்றுவரும் நிலையில் மாவட்டச் செயலகம் முன்பாக இவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் பாவிப்பதைத் தடுத்தால் மாத்திரமே முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும். முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் அத்துமீறிய செயற்பாட்டுக்கு அரசு ஆதரவு வழங்குகின்றது. தடைசெய்யப்பட்ட தொழில்களுக்கு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மறைமுகமாக ஆதரவு வழங்குகின்றது. அவர்கள் கையூட்டு பெற்றா அனுமதி வழங்குகின்றார்கள்?" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினர். (ற-ஜ-10)

### கோத்தாவிடம்...

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் இரும்புகள் விற்கப்பட்டமை தொடர்பான விசாரணைக்காகவே அவர் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டார்.

குறித்த இரும்புகளை விற்பனை செய்ய பாதுகாப்பு அமைச்சின் ஊடாக அனுமதி கொடுக்கப்பட்டமை குறித்து கோத்தபாயவிடம் விசாரணை நடத்தப்பட்டது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் பெருமளவான இரும்புகளை அகற்றி விற்பனை செய்தமை மூலம், அரசுக்கு கோடிக்கணக்கான நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

### வெள்ளை...

றார்கள் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

பலவந்தமாகக் காணாமற் போதல்கள் தொடர்பிலான பன்னாட்டுப் பிரகடனத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரட்டை நிலைப்பாடுடைய அரசியல் பேய்கள் இன்று காணாமற் போதல்கள் குறித்த சட்டத்தை எதிர்க்கின்றனர்.

காணாமற்போதல்களைத் தடுக்கும் புதிய சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வாறான சட்டவரைவு நாகரீகமான உலகில் சமூகத்தின் அனைத்து மனிதர்களுக்கும் கிடைக்க வேண்டிய உரிமைகளை வலியுறுத்தி நிற்கின்றது.

இந்தச் சட்டத்தின் முதன்மை அடிப்படை நாட்டில் பிறக்கும் அனைத்து இலங்கையர்களும் பலவந்தமான அடிப்படையில் காணாமற் போவதைத் தடுக்க வேண்டியதாகும்.

காணாமற்போதல்களைத் தடுக்கும் புதிய சட்டம் கடந்த காலச் சம்பவங்களைப் பாதிக்காது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்கவே சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

கடந்த காலங்களில் வெள்ளை வான் கலாசாரத்தை அறிமுகம் செய்த தரப்பினர் இந்த உத்தேசச் சட்டம் தொடர்பில் பொய்யான பீதியை கிளப்பி மக்களைப் பிழையாக வழிநடத்த முயற்சிக்கின்றனர் என்றுள்ளது. (த)

### குடும்பத்தலைவர்...

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம், கச்சேரியடியில் வாள்வெட்டுக் கும்பல் மேற்கொண்ட கொலைவெறித் தாக்குதலில் குடும்பத்தலைவர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முகத்தை துணியால் மறைத்தவாறு 5 மோட்டார் சைக்கிள்களில் வந்த வாள்வெட்டுக் கும்பல் குடும்பத் தலைவரின் தலையில் கோடரியால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பித்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண, தபால் பெட்டிச் சந்தியில் நேற்றிரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அரியாலையைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான சோ.ஜெசிந்தன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

"மணல் ஏற்றிகொண்டு சென்ற அவர் அதனைப் பறித்துவிட்டு தனது மகனுடன் வீடு நோக்கி உழவு இயந்திரத்தில் வந்து கொண்டிருந்தார். அவர் தபால் பெட்டிச் சந்திப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் தேனீர் அருந்திவிட்டு உழவு இயந்திரத்தில் புறப்பட்டுள்ளார். இதன் போது அங்கு 5 மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மறைத்து துணியால் கட்டிக்கொண்டு வந்த கும்பல் குடும்பத் தலைவர் மீது கைக் கோடரியால் சரமாரியாக வெட்டடிவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளது. தலை மற்றும் கால் பகுதிகளில் வெட்டு காயங்களுக்குள்ளான அவர், அங்கிருந்தவர்களால் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்" என்று விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் உள்ள கடை ஒன்றில் சிசிரிவி கமரா பொருத்தப்பட்டிருந்தது. அதன் காணொலிப் பதிவை வைத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடையாளம் காணமுடியும் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (வ-21)

### வீதியில் சென்ற...

10 பவுண் தாலிக்கொடியை பட்டப்பகலில் கொள்ளையர்கள் அறுத்துச் சென்றுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி விதான்ஸ் லேன் பகுதியில் நேற்று திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியை பாடசாலை முடிவடைந்ததும் தனது வீட்டுக்கு துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்துள்ளார். அவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இரு இளைஞர்கள் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை அறுத்துள்ளனர். ஆசிரியை அபயக் குரல் எழுப்பியும் அந்தப்பகுதியில் இருந்தவர்கள் எவரும் வீதிக்கு வராத நிலையில், கொள்ளையர்கள் தாலிக்கொடியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஆசிரியர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றையதினம் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுரத்தில் இன்று மணவாளக் கோலம்

வடமராட்சி, ஜூலை 11
வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மணவாளக் கோல உற்சவம் நடைபெறவுள்ளது.
காலை 8 மணிமுதல் 1008 சங்காபிசேகம் இடம்பெறும். பி.ப.3.45 மணிக்கு வசந்த மண்டபத்தில் சிறப்புப் பூசையுடன் மகாவிஷ்ணுவுக்கும்பூமாதேவிக்கும் திருக்கல்யாணம் நடைபெறும்.
திருக்கல்யாணத்தைத் தொடர்ந்து மகாவிஷ்ணுவும் பூமாதேவி சமேத சக்கரத்தாழ்வாரும் வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்கள். (173)

## மருதங்கேணி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று

வடமராட்சி, ஜூலை 11
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.9மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் புற்றி இந்தக் கூட்டத்தில் ஆராயப்படுவதுடன் இந்த ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கான அனுமதியும் ஒருங்கிணைப்புக் குழுவிடமிருந்து பெறப்படும். (173)

### ரூ. 80 மில்லியன் செலவில் அமைக்கப்படும்

## சங்கானைச் சந்தைக்கான அடிக்கல் நாளை நடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 11
80 மில்லியன் ரூபா செலவில் சங்கானை மரக்கறிச் சந்தைக்கென அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாளை புதன்கிழமை மதியம் 12 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 80 மில்லியன் ரூபா நிதியைப் பெற நடவடிக்கை எடுத்திருந்தார். மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அடிக்கல் நடவுள்ளார்.
மேலும் இந்த வருட ஒதுக்கீட்டில்40மில்லியன்ரூபாவிலும், அடுத்த வருட ஒதுக்கீட்டில் 40 மில்லியன் ரூபாவிலும் இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதிநிர்மாணிக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4.29)

# நிலுவைப் பணத்தை மகேஸ்வரி நிதியத்தினர் உடன் வழங்கவேண்டும்

### யாழ். மாநகர ஆணையாளர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிய மகேஸ்வரி நிலையத்தினரின் ஒளிபரப்பு நிலையத்துக்கு வாடகைப் பண நிலுவையைச் செலுத்துமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் ஆணையாளர் மேலும் விவரம் தெரிவித்ததாவது:
குறித்த கட்டடத்தின் முதலாம் உரிமையாளர் பிறிதொருவராக உள்ளபோதும் இரண்டாம் உரிமையாளர் ஊடாகவே குறித்த கட்டடத்தை மகேஸ்வரி நிதியத்தினர் உபயோகித்தனர். இவ்வாறு உபயோகித்த காலத்தில் ஆரம்பத்தில் வாடகைப் பணம் செலுத்தப்பட்டபோதிலும் இறுதிக் கால வாடகைப் பணங்களே செலுத்தப்படவில்லை. இதன் காரணமாகவே மகேஸ்வரி நிதியத்தினரின் பெயரில் குறித்த நிலுவையுள்ளது. இந்த வகையில் நிலுவையாகவுள்ள பணத்தினைச் செலுத்துமாறு குறித்த நிறுவனத்துக்குப் பல தடவைகள் கடிதம் எழுதியுள்ளோம். இருப்பினும் இதுவரையில் குறித்த பணம்செலுத்தப்படவில்லை. இதனால் மேற்படி பணத்தினை அறவீடு செய்வதற்காக அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் சபை ஆராயப்படுகிறது - என்றார். (4.101)

## இ.போ.ச. சாரதியைத் தாக்கிய தனியார் பேருந்து நடத்துநரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

சாவகச்சேரி, ஜூலை 11
கடமையிலிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதியைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தனியார் பேருந்தின் நடத்துநரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
காரைநகரிலிருந்து வவுனியா சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்தின் சாரதியையே தனியார் பேருந்தின் நடத்துநர் கொடிகாமத்தில் வைத்து நேற்றுமுன்தினம் தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
தாக்குதலால் பாதிப்புக்குஉள்ளான சாரதி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பின்னர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அதன்பின்னர் கொடிகாமம் பொலிஸார் சுழிபுரம் பொன்னாலையைச் சேர்ந்த தனியார் பேருந்தின் நடத்துநரைக் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் நடத்துநரை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-9)

## பொது இடத்தில் புகைப் பிடித்தோருக்கு ரூ. 7 ஆயிரம் தண்டம்

பொது இடங்களில் புகை பிடித்த 7 பேருக்கு 7 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் அளவுக்கு அதிகமாக கள் வைத்திருந்த 9 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்று தண்டம் விதித்தது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் பிரதேசத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் அகப்பட்டவர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, பொது இடங்களில் பீடி புகைத்த 7 பேரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா தண்டமும் அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் அதிகளவு கள் வைத்திருந்த 9 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் தண்டமும் விதிக்கப்பட்டது. (4-9)

## கஞ்சாவுடன் கைதானவர் மறியலில் வைக்கப்பட்டார்

ஆயிரத்து 500 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலையடுத்து கைதடி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் நின்ற நபரைச் சோதனையிட்டபோது அவரிடம் ஆயிரத்து 500 மில்லிகிராம் கஞ்சா மீட்டதாகப் பொலிஸார் கூறினர்.
அந்தக் குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் அவர் நேற்று முன்தினம்மாலை சாவகச்சேரி நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். அதன்போதே அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4- 9)

## தூய கார்மேல் அன்னையின் திருவிழா ஞாயிறன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
குருநகர் பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள தூய கார்மேல் அன்னை ஆலயத் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளன. ஆயத்த வழிபாடுகள் தினமும் மாலை 5.30மணிக்கு திருச்செபமாலை வழிபாட்டுடன் நடைபெற்று நற்கருணை வழிபாடு எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.
இவ்வாலயத்தின் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கும், திருச்சுருபப் பவனியும் அன்னையின் திருச் சுருப ஆசீர்வாதமும் அன்றுமாலை 5.30மணிக்கு ஆரம்பமாகிநடைபெறும்என்று ஆலயப் பங்குத்தந்தை அறியத் தந்துள்ளார். (4-51)

## இராமலிங்க சுவாமியின் குருபூசைதினம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 11
ஸ்ரீமத் இராமலிங்கம் சுவா மிகளின் குருபூசை தினம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்பாணம் ஸ்ரீ சிவகுரு நாத குரு பீடத்தில் நடை பெறும் என்று குருபீடாதி தெரிவித்தார். இதில் பஜனை, சமாதி அபிசேகம், பூஜை வழிபாடுகள், மகேஸ்வர பூஜை என்பன இடம்பெறும் என மேலும் தெரிவித்தார். (ரி)

## குருநாத சுவாமிக்கு இன்று அலங்கார உற்சவம்

தெல்லிப்பழை, ஜூலை 11
தெல்லிப்பழை கிழக்கு திருவருள்மிகு குருநாத சுவாமி ஆலய கும்பாபிசேக தினத்தை முன்னிட்ட அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 22ஆம் திகதி மாலை வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளது. (4)

## சமகால அரசியல் கருத்தரங்கும் கேள்வி பதில் நிகழ்வும் இன்று

அச்சுவேலி, ஜூலை 11
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதி கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமகால அரசியல் கருத்தரங்கும் கேள்விபதில் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோயில் வடக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுருகன் மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.
வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.பரஞ்சோதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ.சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.
மக்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு பதில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# ஆணையாளரின் வாக்குறுதியை அடுத்து கூட்டுறவாளர்களின் போராட்டம் நிறுத்தம்

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க உறுப் பினர்கள் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர்அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று நண்பகல்வரை போராட்டத்தில் ஈடுபட்டனர். கூட்டுறவாளர்களின்கோரிக்கைக்கு ஒரு மாத காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டுறவு ஆணையாளர் வழங்கிய வாக்குறுதியை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.
"எமது கோரிக்கைகள்தொடர்பாகஏற்கனவேபல்வேறு பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் தீர்வு இதுவரை கிடைக்காத நிலையில்



இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்'' என்று பனை மற்றும் தென்னைஅபிவிருத்திகூட்டுறவுசங்கப் பொதுமுகாமையாளர்சீ.துரைசிங்கம் தெரிவித்தார்.
கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.நல்லதம்பிக்கும் பனை மற்றும் தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதனையடுத்துகிளிநொச்சிபனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,வடமாகாணபனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்பேரிணையத்தில்இருந்துவிடுபடுவதற்கு ஒரு மாத காலத்தில் நடவடிக்கைஎடுக்கப்படும்என்றுகிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்வாக்குறுதி அளித்தார். ஆணையாளரின் உறுதி மொழியை அடுத்து கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர் போராட்டத்தைக் கைவிட்டனர். (ஐ-10.6.35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோரிய...

தகவல்களை வழங்குமாறு வடக்கு மாகாணப் பேரவைச் செயலாளருக்கு ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.
வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 33 பேரினதும், முகாமைத்துவ உதவியாளர் இருவரினதும் பெயர் மற்றும் முகவரி, அலுவலக உதவியாளரது பெயர் மற்றும் முகவரியைத் தருமாறு, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.
மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமையைக் காரணம் காண்பித்துத் தகவலை வழங்கமுடியாது என்று வடக்கு மாகாண சபையின் தகவல் அலுவலர் தெரிவித்திருந்தார்.
தகவல் அலுவலரின் இந்த முடிவுக்கு எதிராக, மாகாண பேரவைச் செயலகத்தின் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பேரவைச் செயலரிடம் மேன்முறையீடு செய்யப்பட்டது. பேரவைச் செயலரும், மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமை காரணமாக தகவல் வழங்க முடியாது என்று பதிலளித்திருந்தார்.
இந்தப் பதிலுக்கு எதிராக தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. முறைப்பாடு மீதான விசாரணை, பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் உள்ள ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
பேரவைச் செயலகத்தின் செயலாளரும் குறித்தளிக்கப்பட்ட அலுவலருமானகே.தெய்வேந்திரன் மற்றும்தகவல் அலுவலர் இருவரும் ஆணைக்குழு முன்பாகத் தோன்றியிருந்தனர்.
சிறப்புரிமையின் கீழ் இந்தத் தகவலை மறுக்கமுடியாது என்று ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். ஆணைக்குழு பணிப்புரை விடுத்தால், தகவலை வழங்கத் தயாராக இருப்பதாக, பேரவைச் செயலகத்தின் செயலாளரும் குறித்தளிக்கப்பட்ட அலுவலருமான கே.தெய்வேந்திரன் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.
தகவலுக்கான உரிமைக் கோரிக்கைப் படிவம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில், உறுப்பினர்களின் உதவியாளர்களாகக் கடமையாற்றியவர்களின் விவரங்களே வழங்கப்படவேண்டும் என்று ஆணைக்குழுவிடம் முறைப் பாட்டாளர் கோரிக்கை விடுத்தார். ஆணைக்குழு அதனை ஏற்றுக் கொண்டது.
முறைப்பாட்டாளர் கோரிய தகவலை, 14 நாள்களுக்குள் வழங்குமாறு, பேரவைச் செயலாளரும் குறித்தளிக்கப்பட்ட அலுவலருமான கே.தெய்வேந்திரனுக்கு ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது. (த-5)

## 30ஆவது அகவை நினைவும் 6ஆம் மாத நினைவஞ்சலியும்



லயன்
**இராஜகோபால் சாருஜன் (KK)**

தோற்றம் 11.07.1987 | மறைவு 08.01.2017

வார்த்தைகளுக்குள்
அடங்காது
எம் நட்பு
என்றும் உன்
நினைவுடன்
**நண்பர்கள்.**
நாச்சிமார் கோவிலடி.

## மரண அறிவித்தல்

### திருமதி கோகிலாதேவி குலேந்திரன்



கலட்டி வீதி, வட்டு தென் மேற்கைச் சேர்ந்த திருமதி கோகிலாதேவி குலேந்திரன் (10.07.2017) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற திரு.திருமதி செல்வரத்தினம் - யோகேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகளும் செ. குலேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கு.சுஜேந்திரன், திருமதி சர்மிளா ஜெயசர்ஜன் (பிரான்ஸ்), கு. சதீசன், திருமதி அஜந்தினி துஷ்யந்தன் (பிரான்ஸ்), கு.பகீரதன் (நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு, கிளிநொச்சி தலைவர் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்) ஆகியோரின் அன்புத்தாயும் தி.ஜெயசர்ஜன் (பிரான்ஸ்), யோ. துஷ்யந்தன் (பிரான்ஸ்), திருமதி ச.சாளினி ஆகியோரின் அன்புமாமியும் ஜெ.யஷ்மிஜன் (பிரான்ஸ்), ச.சர்ஜனா, ச.சந்தோஷ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுக்கோட்டை இல்லத்தில் இன்று (11.07.2017) மு.ப. 9 மணிக்கு நடைபெற்று வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலட்டி வீதி,**
**வட்டுத்தென் மேற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ஊடகவியலா...

டம் வாக்குமூலம் பெறப்பட்டபோது, நீதிமன்ற வளாகத்துக்குள் நின்றிருந்த ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.
வடமராட்சி கிழக்கில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இரு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று வாக்குமூலம் பெறப்பட்டது. தனியறை ஒன்றுக்குள்ளேயே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. நீதிமன்றுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர். அதன் பின்னர் நீதிமன்ற வாயில் மூடப்பட்டது.
வளாகத்துக்குள் நின்றிருந்த ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர். வாயில் கதவுகளும் மூடப்பட்டன.
இந்தச் சம்பவத்தைப் பின்னர் ஊடகவியலாளர்கள் நீதிமன்ற பதிவாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். (ற-109)

## கண்ணீர் அஞ்சலி

எமது வட்டுக்கோட்டை
இந்து வாலிபர் சங்க
தலைவர்
கு. பகீரதன் அவர்களின்
அன்புத்தாயார்

**திருமதி**
**கோகிலாதேவி**
**குலேந்திரன்**



மலர்வு 20.08.1959 | மறைவு 10.07.2017

சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை,**
**இந்துவாலிபர் சங்கம் கொழும்புக்கிளை,**
**இந்து வாலிபர்சங்கம் கனடாக்கிளை.**

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் வைரமுத்து



தோற்றம் 23.04.1924 | மறைவு 10.07.2017

யாழ்ப்பாணம், நீர்வேலியைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் வைரமுத்து நேற்று (10.07.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராக்காச்சியின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்துவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்க ஒளி சேதுராசா மற்றும் பலராமன் (லண்டன்), நாகேஸ்வரி, காலஞ்சென்ற விஜயரங்கன் மற்றும் விஷ்ணு (டென்மார்க்), காலஞ்சென்ற வாசுதேவன், விஜய குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கணணாதன் - லதா; கிஸ்ணபிள்ளை குகனேசன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் இந்துராணி, ரஞ்சினி, தவமலர், நாகேஸ்வரி, குகவதனி (டென்மார்க்), உமாதேவி, காலஞ்சென்றகாராளசிங்கம்ஆகியோரின்அன்புமாமியும்அனுசா (சுவிஸ்), நவவித்தியா, தவரஞ்சித் (லண்டன்), காலஞ்சென்ற வரதன், ராதிகா, கௌரீசன் (முல்லைத்தீவு நீதிமன்ற உதவி கணக்கீட்டாளர்), பிரகாஷ் (ஆசிரியர் இரணைதீவு றோ.க.த.க. வித்தியாலயம்) வினோபா, கோபிராஜ், அபிஷா (டென்மார்க்), அனோஜா (டென்மார்க்), திஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சேதுவர்மன், ராஜவர்மன், சிவவர்மன், அனுவர்மன், மயூரன், சஞ்சினா, நவீனா, நிகிதா, சேயானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2017) செவ்வாய்க் கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாசிவன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி,**
**077 967 2136**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி லோகேஸ்வரி துரைசிங்கம்



தோற்றம் 29.04.1948 | மறைவு 06.07.2017

யாழ். அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Ratingen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி துரைசிங்கம் கடந்த (06.07.2017) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் துரைசிங்கம் (சீமான் - ஜேர்மனி) இன் அன்பு மனைவியும் சுதர்சன் (சூட்டி - ஜேர்மனி), தீபா (ஜேர்மனி), பிரகாஷ் (டொக்கா - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர் - அச்சுவேலி மத்திய கல்லூரி), காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, பரஞ்சோதி, ஜெயரட்ணம், விமலேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, நாகேஸ்வரி (பிரான்ஸ்),சிவேஸ்வரி, சந்திரகுமார் (தவம் றூபன்ஸ் லொறி, அச்சுவேலி), ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜிதா (ஜேர்மனி), ரூபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவராஜா, புஸ்பவதி, வனஸ்வதி, கிருஷ்ணதாசி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சயானா, நவீன், றியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2017) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும். அதேதினம் மு.ப.10 மணியளவில் அன்னாரின் அச்சுவேலி இல்லத்திலும் துயர்பகிர்வு நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"தீபா அகம்"**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சகல...

இவ்வாறு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பில் ஒரு சரத்துக்கூட இதுவரை உருவாக்கப்படவில்லை. ஆனால், பௌத்த மதத்துக்கான முன்னுரிமை இல்லாதொழிக்கப்படுகின்றது எனப்பல்வேறு பொய்ப் பிரசாரங்களை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். அரசமைப்பு தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். பின்னர் மகாநாயக்க தேரர்களின் கருத்துகள் கோரப்படும். வடக்கு, கிழக்கு இணைப்பு கைவிடுதல், ஒற்றையாட்சி மற்றும்பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளித்தல் போன்றவிடயங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியுள்ளது. எனவே நீண்ட காலத்துக்குப் பின்னர் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசமைப்பொன்றை உருவாக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வடக்கில் நேரக் கட்டுப்பாடு

## விரைவில் நடைமுறைக்கு வரும் என்கிறார் மாகாண கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 11
வடக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்களின் கற்றல் செயற்பாடுகளின் நேரக் கட்டுப்பாட்டை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படுகின்றமை என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்த விரைவில் நியதிச் திட்டம் அல்லது சுற்றறிக்கை ஒன்றை நடைமுறைப் படுத்த வேண்டிய தேவை எமக்கு உள்ளது. தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக பெற்றோர்களிடமிருந்துஎமக்குமுறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.
ஆகவே இதனை ஒழுங்கமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
இது தொடர்பான முன்மொழிவுகள் வடக்கு மாகாண சபையின் 93 ஆவது அமர்வில் சபையில் முன்வைக்கப்பட்டு ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன.
இதுதொடர்பான நியதிச்சட்டம்அல்லது சுற்றறிக்கை ஒன்றை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தயாரித்து முன்வைக்கவேண்டும். இதன் மூலமாகத் தனியார் கல்வி நிறுவனங்களின் கற்றல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படும்.
எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய வாரத்தின் ஒரு நாள் தனியார் வகுப்புகளை முழுமையாக நிறுத்தவும் மற்றும் மாலை நேர வகுப்புக்களை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கள் நடத்தி முடிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
காலை 6 மணிக்கு முன்னர் எந்த வகுப்புகளும் நடைபெறக் கூடாது. மாலை 6 மணிக்கு பிறகு எந்த வகுப்புகளும் நடைபெறக் கூடாது என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன-என்றார். (4-ரி)

# போதிய வருமானம் இன்றி வடக்குசுகாதாரத் தொண்டர்கள் கூலிவேலைக்குச் செல்கின்றனர்

## வட்டு .மருத்துவ அதிகாரி கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 11
வடக்குமாகாணத்தில்உள்ளவைத்தியசாலையில்பணியாற்றும்சுகாதாரத்தொண்டர்களில் சிலர்போதியவருமானம்இன்மையால்விடுப்பில்சென்றுகூலித்தொழிலுக்குசெல்கின்றனர் என்று வட்டுக்கோட்டை பிரதேச வைத்திய சாலை மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.
சங்கானைப்பிரதேசசெயலகஒருங்கிணைப் புக்குழு கூட்டம் சங்கானை பிரதேச செயலர் மற்றும் ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
இந்தக்கூட்டத்தில்சுகாதாரத்துறைசார்ந்தவிடயங்கள்ஆராயப்படும்போது கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்
அவர்மேலும்தெரிவித்ததாவது,"வடக்குமாகாணத்தில் உள்ள வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதாரத்தொண்டர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்காமையினால் சிலசுகாதாரதொண்டர்கள்அடிக்கடிவிடுப்பில் செல்கின்றனர்.
அவ்வாறு செல்பவர்கள் தமது வருமானத்துக்காகக் கூலி (மேசன்,பெயிண்டின்க்) வேலைகளுக்குச் செல்கின்றனர். சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றும்போது கிடைக்கும் வருமானத்தை விட அவர்கள் வெளியில் வேலை செய்யும்போது அதிகமான வருமானத்தை ஈட்டுகின்றனர்.
எமதுவைத்தியசாலைக்குச்சுகாதாரத்தொண்டர்கள், மற்றும்சிற்றூழியர்கள்போன்றபதவிகளுக்குவெற்றிடங்கள்காணப்படுகின்றதுன.
முன்னையகாலத்தில் இருந்து இன்றுவரை எமது வைத்தியசாலைக்கான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாதநிலைமையேகாணப்படுகின்றது-என்றார். (21-8)

# வடக்கு மாகாணத்தில் 349 ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குப் பாடத்துறை ரீதியாக 349 பட்டதாரி ஆசிரியர்களைநியமிப்பதற்குவடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பங்கள் எதிர்வரும் 4ஆம் திகதி பிந்தாமல் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.ஏ.மோகன்ராஜ் அறிவித்தார்.
நியமனங்கள் போட்டிப் பரீட்சை நேர்முகத் தேர்வு மூலமாக நடைபெறவுள்ளன. வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்கள்தோறும்நிலவும்ஆசிரியஆளணிகுறிப்பிடப்பட்டு தமிழ், வரலாறு, குடியியல், தகவல் தொழில் நுட்பம், விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும், ஆலோசனையும் வழிகாட்டலும், இரண்டாம் மொழி ஆகிய பாடத்துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (4-11)

# குடத்தனை இளைஞன் கொலை: கூட்டமைப்புக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
குடத்தனையில் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர்கொல்லப்பட்டமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கடும் கண்டனம் தெரிவித்தது.
பொலிஸார் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்படும் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழந்தமை கடும் கண்டனதுக்கு உரியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
குடத்தனைப் பிரதேசத்தில் மணல் கடத்தல் இடம்பெறுவதாக முறையிடப்பட்ட போதும், அதனைத் தடுக்கவேண்டியது பொலிஸாரின் கடமை. அதற்காகச் சட்டத்தைக் கையில்எடுக்கும்அதிகாரம்பொலிஸாருக்குக் கிடையாது.
மணல் கடத்தலில் குறித்த இளைஞன்ஈடுபட்டிருந்தால்சட்டப்படிசட்ட வரையறைகளுக்குள் தண்டிக்கப் பட்டிருக்கவேண்டுமேதவிர, இளைஞனின் உயிரைக் குடிக்கும் அளவுக்குத்துப்பாக்கிச்சூடுசெய்யவேண்டியதேவை கிடையாது; அவ்வாறு நடக்கவும் கூடாது. இந்த விடயத்தில் பொலிஸார் தமது அதிகார வரம்மைமீறிச்செயல்பட்டதாகவே கருத முடிகின்றது.
இந்தச்சம்பவம்இடம்பெற்றஉடனடியாகவேசகலதரப்புடனும்தொடர்பு கொண்டு நீதி நியாயமான நடவடிக்கையை வலியுறுத்தினோம். அதன் விளைவாக குறித்த துப்பாக்கிச் சூட்டுடன்தொடர்புபட்டதாகபொலிஸார் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் உரிய சட்ட முறைமையின் கீழ்நீதியான விசாரணை இடம்பெறும் என்றும் பொலிஸார் உறுதியளித்தனர் - என்றார். (4-101)

# நீர் நிலைகள் வற்றியதால் கால்நடைகளுக்கு பாதிப்பு

## கால்நடை வளர்ப்போர் கவலை



கிளிநொச்சி, ஜூலை 11
கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள குளங்களில் நீர் வற்றிவிட்டன. இதனால் கால்நடைகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாகக் கால்நடை வளர்ப்பவர்கள் கவலை தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
"கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய மாதங்களாக நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் சிறிய குளங்கள் மாத்திரமின்றி பெரிய குளங்களும் நீர் வற்றிக் காணப்படுகின்றன. சில குளங்களில் உள்ள சிறு சிறு பள்ளங்களில் மாத்திரம் தண்ணீர் காணப்படுகின்றது.
இதனால் கால்நடைகளுக்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் கால்நடைகளுக்கு நோய்த் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.
உணவு, போதுமான நீர் இன்றிக் கால்நடைகளில் இருந்து பெறப்படும் பாலின் அளவு குறைந்துள்ளதுடன் எமது வாழ்வாதாரமும்பாதிக்கும்நிலை காணப்படுகிறது. குறித்த குளங்களில் உள்ள ஆபத்தை விளைவிக்கக் கூடிய முதலை போன்ற விலங்குகள் குளங்களில் நீர் இல்லாத காரணத்தால் ஊர்மனைக்குள் வர ஆரம்பித்துள்ளன. கால்நடைகளை வீட்டில் வைத்து வளர்ப்பதற்கு முடியாத நிலைமை உள்ளது. காரணம் அதற்கு தேவையான புற்களை வீடுகளில் வைத்திருப்பதில்லை. ஒன்று இரண்டு கால்நடைகள் வைத்திருப்பவர்கள் அதனை வீட்டில் வைத்து பராமரித்தாலும் பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வறட்சி கொடுமையானால் போதிய [illegible] பாலை எம்மால் கொடுக்க முடியாது போகும் நிலை ஏற்படும். எமது வாழ்வாதாரமும் [illegible]டும் - என்றனர். (21-6)

# கால்நடைத் திணைக்களத்தில் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் பிரதிப் பணிப்பாளர்களாக பதவி உயர்வு

யாழ்ப்பாணம் ஜூலை 11
வடக்கு மாகாண கால்நடை உற்பத்திகள் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் 5 மாவட்டங்களிலும் கடமையாற்றிய உதவிப்பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.
இது தொடர்பில் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர்எஸ்.வசீகரன்மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண விவசாயம் கால்நடைவளர்ப்புஅமைச்சின்ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இவர்கள் 5 பேருக்கும்பதவி உயர்வுவழங்கப்பட்டுள்ளது. கடமையாற்றிய மாவட்டத் தலைவர்களைப் பிரதிப் பணிப்பாளர்களாகமாற்றம்செய்வதுதொடர்பாக வடக்கு மாகாண தலைமைச் செயலருக்கு அனுமதி கோரப்பட்டு கடிதம்அனுப்பப்பட்டிருந்தது. தலைமைச் செயலரின் அனுமதிக்கு இணங்க மாவட்டத் தலைவர்கள் பிரதிப்பணிப்பாளர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றார்.
வடக்கு மாகாண கால்நடை அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களில் மட்டும்உதவிப்பணிப்பாளர்களாக மாவட்டத்தலைவர்கள்உள்ளனர்.
இதனால் பிரதிப் பணிப்பாளருக்கு கிடைக்கும்சலுகைஅவர்களுக்குக் கிடைப்பதில்லை என்று அப்போதைய விவசாய அமைச்சர் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.
இதன்போது கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களப் பணிப்பாளர்பதவியைமாற்றுதல்தொடர்பாகக்கோரிக்கைக்கடிதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கானஅனுமதிகிடைக்கப்பெறவில்லைஎனவும்வடக்குமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் தெரிவித்திருந்தார்.. (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுவால் ஏற்படும் தாக்கங்கள்



★இளைஞர்களின் வாழ்வைசிதைக்கின்றது.
★உடல் நலத்தைக் கெடுத்து நோயாளியாக்குகின்றது.
★பொறுப்பற்றவர்களாக்குகின்றது.
★குடும்பத்தில் சமூகத்தில் விரசனைகளை ஏற்படுத்துகின்றது.
★பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கிறது.
★வீதி விபத்துக்களை ஏற்படுத்துகின்றது.
★ வழி நடந்திடத் தூண்டுகின்றது.



*மது விரைவில் நோயாளியாக்கி உயிரிழப்பை வரவழைக்கும்*

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை*

# சாதாரண தர பரீட்சையில் சித்தியடையாதோருக்கு தொழிற் பயிற்சிகள்

## வடக்கில் 5 மாவட்டங்களிலும் உள்ள தேசிய பாடசாலைகளில் இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கான தொழிற் பயிற்சிகள் கொழும்பு கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேசிய பாடசாலையில் இந்தப் பயிற்சிகள் முன்னெடுக்கப் படவுள்ளனஎன்றுஅறிவிக்கப்பட்டது.

அதன்படி வடக்கு மாகாணத்தில் உள்ள5மாவட்டங்களில்உள்ளதேசியப் பாடசாலைகளில் தெரிவு செய்யப் பட்ட 5பாடசாலைகளில்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி, மன்னார் மாவட்டத்தில் சித்திவிநாயகர் கல்லூரி, வவுனியா மாவட்டடத்தில் வவுனியா தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தேசிய தொழிற் தகமைச் சான்றிதழுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் கடந்த வருடம் ஜீ.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். கொழும்பு கல்வி அமைச்சின் கல்வி மறுசீரமைப்பு, புதிய கல்விச் சீர்திருத்தம் என்னும் கட்டாயக் கல்வித் திட்டத்தில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன




என்று தெரிவிக்கப்பட்டது.

1. மாணவர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை கல்வி கற்றல்
2. ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் தரம் 13 வரை கற்றல்
3. இந்தத் திட்டத்துக்குத் தொழில் நுட்பப் பாடங்கள் 26 பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.
4. இந்தத் திட்டத்தில் தரம் 12 இல் 3 பாடங்களையும் தரம் 13 இல் அந்த 3 பாடங்களில் ஒரு பாடத்தையும் தேர்வு செய்து கற்கலாம் .
5. தரம் 13இல் கற்கும் காலத்தில் தெரிவு செய்த பாடத்தில் 6 மாத காலப் பயிற்சியும் வழங்கப்படும்.
6. கற்றல் முடிவில் தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
7. இந்த நிலையில் மேலும் தேசிய தொழிற்றகைமைச்சான்றிதழ்நிலை 7 வரையும் கற்று பட்டத்தைப் பெறலாம். அத்துடன் தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழ் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-9)

*உடுவில் கொலை;*

## சந்தேகநபருக்கு 2 வருடங்களின் பின் நிபந்தனைகளுடன் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 11

கொலையுடன் தொடர்புபட்டவர்களுள் நான்காவது சந்தேகநபருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நிபந்தனைகளுடன் பிணை வழங்கியது.

2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் நடைபெற்ற ஒருவரைக் கொலை செய்த தொடர்பில் நான்கு இளைஞர்கள் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நீதிபதி மா.இளஞ்செழியன் பிணை மனுவை ஆராய்ந்து 50ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 5இலட்சம் ரூபா பெறு மதியான ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார். மாதத்தில் ஒரு நாள் 9மணிக்கும் 2 மணிக்கும் இடையே சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்று மேல் நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

சந்தேகநபரான வடிவேல் சசிக்குமார் 23மாதங்களாகச் சிறையில் இருந்து வருகின்றார். இதனு டன் சம்பந்தப்பட்ட ஏனைய மூன்று இளைஞர்களும் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப் பட்டனர். (4-12)

## கூட்டுத் தலைமையிலேயே எந்தப் பிரச்சினையும் தீரும்

*இப்படிக் கூறுகிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்*

"எந்த ஒரு பிரச்சினைக்கும் தனி ஒரு தலைமையால் தீர்வு காணமுடியாது. இதற்குக் கூட்டுத் தலைமையே சரியானதாக அமையும் என்று நம்புகின்றேன். கூட்டுத் தலைமை என்பது பல பொது அமைப்புக்கள் நபர்கள் ஒன்றிணைய வேண்டும்."

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தடுமாறாத தமிழர்களுக்கு தலைமை ஏற்பது யார்? என்ற கருத்தாடல் நிகழ்வு யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் தனியாக இருந்து ஒன்றையும் சாதிக்க முடியாது. கூட்டுச்சேரவேண்டும் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். கூட்டமைப்பு பல்வேறு கோரிக்கைகளுடன் தேர்தலில் போட்டியிட்டது. பின்னர் அவர்கள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றத் தவறி விட்டார்கள். மக்களின் மீள் குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுவிப்பு ஆகிய பல பிரச்சினைகள் இன்னமும் உள்ளன.

மக்களுக்கு என்ன தேவை எதை நோக்கி போகவேண்டும். என்பது தொடர்பாக வடக்கு மாகாண சபை அறிக்கை ஒன்றை முன்வைத்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ் மக்கள் பேரவையாலும் அவ்வாறானதொரு அறிக்கை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பொழுது உள்ள கூட்டமைப்பு சமரசமாக இல்லை. அரசுடன் ஒத்துப் போகின்ற வேலையைச் செய்கின்றார்கள். அரசு டன் இணைந்து போகின்ற வேலையைச் செய்தால்தான் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். அதில் தோற்றும் போய் விட்டார்கள். ஆகவே இந்த நிலைமையில் மாற்றுத் தலைமை வேண்டுமா? இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது. வடக்கு மாகாண சபை தனது கொள்கையை வெளியிட்டது என்பது இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. கொள்கை இல்லாமல் எப்படி ஒரு நிர்வாகம் செயற்படுவது என்று. ஒவ்வொரு கட்சியும் தலைமையும் பொறுப்பேற்கும் முன்னர் தனது கொள்கைப் பிரகடனத்தை வாசிக்கும். ஆனால் அப்படி ஒரு ஆவணம் இல்லை. வடக்கு மாகாண சபையில் இதனைச் செய்திருக்க வேண்டும். கூட்டமைப்பினரே இதனை செய்திருக்கலாம். அதனை நிர்வகித்து இருக்கலாம். கூட்டமைப்பு இன்னமும் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்று இப்போதும் கேட்கிறார்கள். தமிழ் அரசுக் கட்சிக்கு அவ்வாறு ஒரு தேவை இல்லை. மூன்று கட்சிகள் ஒருமித்த கருத்துக்கு வந்தால் தமிழ் அரசுக் கட்சியை வெளி யேற்றலாம். ஆனால் அப்படி அவர்கள் ஒருமித்த கருத்தை இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மக்களின் தேவை கருதித்தான் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. நாம் நாடாளுமன்றம் போவோம் என்பதற்காக இயக்கத்தில் சேரவில்லை. எமக்கு தீர்வு கிடைக்கும் என்று தான் நாம் அங்கே போனோம். இது தான் மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்க வேண்டிய நேரம் என்று நான் நினைக்கின்றேன் - என்றார். (4-ரி)

## கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில்

# 100 குடும்பங்கள் வெளியேறிய வீடுகளில் சட்டவிரோத செயல்கள்

## அதிகரித்துள்ள அச்சுறுத்தல்களைத் தடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி ஜூலை 11

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள கல்லாறுகுடியேற்றக்கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி விட்டன. அங்கு தற்போது ஆள்கள் இல்லாததனால் கைவிடப் பட்டள்ள வீடுகளில்சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவை எமக்கு அச்சுறுத்தலாக உள்ளன. அதனால்பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளததகப் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் அந்த மக்கள் மேலும் தெரிவித்ததாவதுப:

2004ஆம்ஆண்டுஏற்பட்டசுனாமியின்பின் கல்லாறுபகுதியில்140குடும்பங்கள்மீளகுடியமர்தப்பட்டனர்.

போர்முடிவடைந்து 2010ஆம் மீண்டும் மக்கள் மீளக்குடியமர்ந்தபோது அவர்களுடன் மேலும் 100 குடும்பங்கள் அந்தப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

ஆனால்அங்குகுடிதண்ணீர்,போக்குவரத்து உள்ளிட்டஅடிப்படைத்தேவைகள்ஏற்படுத்தி வழங்காததால் இதுவரை சுமார் 100 மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். அவர்கள் வெளியேறிய வீடுகளில் பல்வற்றிலேயே சட்டவிரோத செயல்கள் இடம்பெறுகின்றன.மர்மநபர்களின்நடமாட்டம்,போதைப் பொருள் பாவனை போன்ற பல பிரச்சினைகள்இடம்பெறுகின்றன.



இதேவேளை, கண்டாவளைப் பிரதேசசெயலாளர் பிரிவில் பல குடும்பங்கள் நிரந்தர காணிகள் இல்லாது வீடுகளை பெறமுடியாதுள்ளனர். இந்த நிலையில் கல்லாறில்வீடுகளை விட்டு வெளியேறியமைவருத்தத்துக்குரியது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும்"என்றனர்.

"அங்குபலவீடுகளில் மக்கள் இல்லை. குடிதண்ணீர், தொழில் இல்லாதமைகாரணமாகஅவர்கள்வெளியேறிவிட்டனர். அதற்குக் காரணம் என்று காரணம் கூறப்படுகிறது. அவ்வாறு வெளியேறிவர்களின் வீடுகள் தொடர்பாக தகவல்கள்திரட்டப்பட்டுள்ளன. ஆள்கள் இல்லாத வீடுகளில் சில சம்பவங்கள் இடம்பெறுவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அது தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார்நடவடிக்கைஎடுத்துவருகின்றனர்" என்று குறித்த பகுதி கிராம அலுவலர் தெரிவித்தார். (21-6)

## வடக்கு – கிழக்கு மாகாண முன்னாள்கல்விப் பணிப்பாளருடன் அனுபவப் பகிர்வு நாளை

கனடாவிலிருந்து வருகை தந்திருக்கும் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமியுடனான கல்வி அனுபவப் பகிர்வும் கலந்துரையாடலும் நாளை புதன் கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பி.ப 4 மணிக்கு இல 249 கே.கே. எஸ் சாலையில் அமைந்துள்ள வடக்கு மாகாண மூத்த பள்ளிக் கல்வியாளர் ஒன்றிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்வியாளர்களும் ஆர்வலர்களும் கலந்து பயன்பெறுமாறு மேற்படி ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. வடக்கு மாகாண மூத்த பள்ளிக் கல்வியாளர் ஒன்றியத்தின் செயலாளர் ச.சிவனேஸ்வரன் இதனைத் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐ.தே.க. அமைப்பாளர்களுக்கு

# நெருக்கடி கொடுக்கும் ரணில்

கொழும்பு, ஜூலை11
நாடெங்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை அதிகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுமாறு கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.
ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் இருக்க வேண்டிய குறைந்தபட்ச எண்ணிக்கையை நிர்ணயித்திருக்கும் தலைமை அமைச்சர், எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமோக வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தொகுதி அமைப்பாளர்கள் செயலாற்றவேண்டுமெனவும் அறிவுரை வழங்கியுள்ளார்.
அத்துடன், ஐக்கிய தேசியக் கடசியின் இளைஞர் அணி, மகளிர் அணி மற்றும் லக்வினிதா அமைப்பு உட்பட சகல பிரிவுகளையும் பலப்படுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ய)

# புதிய அரசமைப்புக்கு மக்கள் ஆணையில்லை

### கூறுகிறார் விமல் வீரவன்ச



கொழும்பு, ஜூலை11
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான மக்கள ஆணை இதுவரை அரசுக்குக் கிடைக்கவில்லை எனத் தேசிய சுதந்திர முன்னணியின்தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் ஒழுங்கான ஆட்சியை நடத்தத் தெரியாதவர்களால் எவ்வாறு புதிய அரசமைப்பை உருவாக்கமுடியும். எந்தவொரு சட்டத்திருத்தமும் மக்களது ஆதரவைப் பெற்றே நிறைவேற்றப்படவேண்டும்.
அவர்களது பலத்துடனேயே அரசு ஆட்சியமைக்க வேண்டும். இந்த அரசுக்கு மக்கள் ஆதரவு கொஞ்சமும் இல்லை. அரசமைப்பை உருவாக்குவதாயின் நாட்டில் அமைதியான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனையே மகாநாயக்க சங்கத்தினரும் தெரிவித்துள்ளனர் - என்றார். (த-ய)

# மோ.சைக்கிள் விபத்தில் ராணுவச் சிப்பாய் சாவு

நுவரெலியா, ஜூலை11
வெலிமடை பொரலந்த நகரத்தை அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டர் சைக்கிள் விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
றாகம இராணுவ முகாமில் கடமையாற்றிய வெலிமடை வங்கியகும்புர பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தார். விபத்து இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. எனினும் விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-ய-43)

# கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து).

பதிவு இலக்கமும் பதிவு திகதியும் PA/50 - 08.03.1972

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல். - 15.07.2017

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.உ.சுபசிங்க ஆகியநான் 2015-10-12ஆம் திகதிய 1936/6ம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 20(2) இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின் படி நடாத்துவதற்கு அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக் கூட்டங்களிற் சமுமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் குறைந்தது இருவராவது (2) 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்வவ் தொகைகளுக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளர்கள் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப் படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.
- தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை அங்கத்தவர்களிற்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்களை தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொண்டு இக்கிளை பொதுச்சபை நடைபெறும் திகதியில் தங்களிற்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

## கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் தொடர்பான விவரங்கள்.

கிளை பொதுச்சபை கூட்டங்கள் நடைபெறும் காலம் - 15.07.2017ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணி

| இல | கி.இல | கிளைபெயர் | தவிசாளர்பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | 1 | கரடிப்போக்கு | திருமதி.அ.றஞ்சினி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 02. | 2 | கணேசபுரம் | திருமதி.மு.புஸ்பலக்ஸ்மி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 03. | 3 | D-08 | திருமதி.கே.கலைவாணி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 04. | 4 | பாம்புக்கமம் | திருமதி.த.செல்வகேந்தினி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 05. | 5 | பரந்தன் | திருமதி.பு.தர்சினி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 06. | 6 | சேவியர்சந்தி | திருமதி.சு.தயாதேவி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 07. | 7 | திருநகர் - B | திரு.அ.ஜேம்சன் | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 08. | 8 | 155-A | திரு.ச.குமாரதாஸ் | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 09. | 9 | முரசுமோட்டை | திரு.உ.ஜெயந்தப்பிரகாஸ் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 10. | 10 | வன்னேரி | திரு.க.உதயரூபன் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 11. | 11 | ஆணைவிழுந்தான் | திரு.அ.துஸ்யந்தன் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 12. | 12 | ஆரோக்கியபுரம் | திரு.ஜெ.சஞ்சீவ் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 13. | 13 | அக்கராயன் - A | திரு.கு.சஜீபன் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 14. | 14 | ஸ்கந்தபுரம் | திரு.பா.வாகீசன் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 15. | 15 | கண்ணகிபுரம் | திரு.தே.வேணுகோபாலன் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 16. | 16 | 1000 ஏக்கர் -A | திரு.சி.பாலசுந்தரம் | கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 17. | 17 | கட்சன்வீதி | திரு.ம.லெட்டினன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 18. | 19 | வட்டக்கச்சி | திரு.செ.செல்வகுமாரன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 19. | 20 | இராமநாதபுரம் | திரு.சி.ஸ்ரீதரன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 20. | 22 | அக்கராயன் - C | திரு.அ.ஆனந்தன் செந்தூர்செல்வன் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 21. | 23 | புதுமுறிப்பு | திரு.பெ.பவள்ராஜ் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 22. | 24 | புளியம்பொக்கணை-B | திரு.ச.பாலகுமார் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 23. | 25 | பிரமந்தனாறு | திருக.திசாகரன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 24. | 26 | புன்னைநீராவி | திரு.ச.ரதிகுலன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 25. | 27 | D-10 உருத்திரபுரம் | திரு.வை.சரவணன் | கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 26. | 28 | கல்மடுநகர் | திரு.ந.நாவேந்தன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 27. | 29 | கண்டாவளை | திரு.இ.விஜயகுமார் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 28. | 30 | திருநகர் - A | திரு.பெ.கோகிலன் | கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |
| 29. | 31 | ஆணையிறவு | திருமதி ஸ்ரீ.எமெல்டா | கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரிமண்டபம் |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
முல்லைத்தீவு

ஒப்பம் திரு.உ.சுபசிங்க
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

## கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யத் தகுதியற்றவர்கள்.

01. 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்.
02. கடனைத் தீர்க்க வகையற்றவர் என பிரகடனம் செய்தவர். அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
03. அதிகாரமளிக்கப்பட்டவராற் சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர்.
04. இச்சங்கத்திற் பெற்ற கடனை அல்லது வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் அல்லது வேறு சங்க ஒழிப்போனுக்கு மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குள் தவணை தப்பியவராகவுள்ள ஒருவர் அல்லது இச்சங்கத்திற்கு அல்லது வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது ஒழிப்போனுக்கு வேறுவகையான சென்மதியொன்றை செலுத்த தவறிய ஒருவர்.
05. சங்கத்தின் பொதுச் சபையின் அபிப்பிராயப்படி உறுப்பினர் என்ற முறையிற் தவிர, நடைமுறையிலுள்ள அல்லது பேரப் பேச்சளவிலிருக்கும் சங்கத்தின் ஒப்பந்தத்திலோ நிதி அல்லது வேறுவகைக் கொடுக்கல் வாங்கல்களிலோ அல்லது சங்கம் செய்யும் ஒரு விற்பனையிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள ஒருவர்.
06. சங்கத்தின் பொதுச்சபையின் அபிப்பிராயத்தின்படி சங்கத்தின் நலன்களோடு முரண்படுகின்ற ஒரு வியாபாரத்திலோ அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள ஒருவர்.
07. இச்சங்கத்திலோ அல்லது இச்சங்கம் உறுப்பினராகவுள்ள பிறிதொரு சங்கத்திலோ சம்பளம் பெறும் ஒருவர்.
08. சட்டத்திற்குறிப்பிட்ட தகுதியீனங்களையுடைய ஒருவர்.
09. கிளையின் வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தனது பதியை அல்லது வேலையை கடந்த 05 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. நாடாளுமன்ற உறுப்பினர்/மாகாணசபை உறுப்பினர்கள்/மாநகர சபை உறுப்பினர்கள்/பிரதேசசபை உறுப்பினர்கள்.
12. அங்கத்தவராக சேர்ந்து ரூபா - 100.00ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒருவருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.
13. உடன் முன்சென்ற 03 ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயல்களுக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களிற்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப் பட்டவர்கள்.
14. சங்கத்தில் ஆதாயங் கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையை பெறுபவர்.
15. இயக்குனர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாத அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குனர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2)இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
(சங்கத்தின் துணைவிதி பிரிவு 20 (3)க்கமைவானது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாநாயக்கர்களின் அனுமதியுடனேயே புதிய அரசமைப்பு

## கூறுகின்றது ஐ. தே. க.

கொழும்பு, ஜூலை11

புதிய அரசமைப்புக்கு மகாநாயக்கர்களினதும் மக்களதும் அனுமதி தேவை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு அரசியல் கட்சிகள், அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எவ்வாறாயினும் புதிய அரசமைப்புகான இறுதி நாளன்று மகாநாயக்க தேரர் மற்றும் மக்களிடம் அனுமதி கோரப்படும்.

அரசமைப்பின் மூலம், பௌத்த மதத்துக்குக் கொடுக்கப்பட்ட உறுதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளப் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இந்தப் புதிய அரசமைப்புக் குறித்து விளக்கமளிப்பதற்காக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டாக மகாநாயக்க தேரர்களை வெகுவிரைவில் சந்திப்பர் - என்றார். (த-ய)

# இலங்கை – கட்டார் உறவை வலுப்படுத்துவதற்கு பேச்சு

கொழும்பு, ஜூலை11

இலங்கை மற்றும் கட்டாருக்கு இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவது குறித்த முக்கியமான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

கட்டார் தலைமை அமைச்சர் சேக் அப்துல்லா பின் நசீர் கலிபா அல் தானி மற்றும் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

டோகாவில் நேற்றுமுன்தினம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன என அந்த நாட்டு ஊடகங்களை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, கட்டார் அயலுறவு அமைச்சரையும் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியுள்ளார். (த-ய)

# காணாமற்போனோரின் உறவுகள் பிரி. தலைமை அமைச்சருக்கு மனு

கொழும்பு, ஜூலை11

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் பிரிட்டன் வாழ் தமிழ் இளைஞர்கள் அந்த நாட்டுத் தலைமை அமைச்சருக்கு மனு ஒன்றை நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளனர்.

இரத்தினதுரை சோபிதன் என்பவர் இந்த மனுவைக் கையளித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களான தனது தகப்பனாரான வரதலிங்கம் இரத்தினதுரை (புதுவை), செல்லையா விஸ்வநாதன், இரங்கசாமி மகேந்திரராஜ், மகேஸ்வரன் திவாகரன், பேரம்பலம் யேகராசா, மற்றும் இராசு இரவீந்திரன் (திருமாறன்) ஆகியோர் சார்பிலும் குறித்த மனு கையளிக்கப்பட்டுள்ளது. (த-ய)

# ஐ.தே.கவில் போட்டியிட 10,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை11

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் பத்தாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர் எனக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் எதிர்வரும் நாள்களில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

விண்ணப்பப்படிவங்கள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருவதாகவும், தேர்தல்தி[illegible] அறிவிக்கப்படும் வரை அவை ஏற்றுக் கொ[illegible]ளப்படும் எனவும் அவர் கூறினார். (த-ய)

## டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு

# உலக சுகாதார அமைப்பிடம் உதவி கோருகிறது இலங்கை

கொழும்பு, ஜூலை11

நாட்டின் பல பகுதிகளில் டெங்கு நோயினால் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு துரிதகதியில் ஏதேனும் ஒரு வழிமுறையைப் பரிந்துரை செய்யுமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உலக சுகாதார அமைப்பிடம் கோரியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகளிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் டெங்கு ஒழிப்பு நிபுணத்துவ மருத்துவர் மற்றும் தொற்று நோய்த்தடுப்புத் தொடர்பிலான சிறப்பு நிபுணத்துவ மருத்துவரையும் உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் செய்துள்ளது.

டெங்கைக் கட்டுப்படுத்தக் காத்திரமான ஒரு தீர்வுத் திட்டத்தை பரிந்துரை செய்யுமாறு உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகளிடம் சுகாதார அமைச்சர் கோரியுள்ளார்.

மேலும், டெங்கு தொடர்பில் மக்களைத் தெளிவுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோயினால் இதுவரையில் 245 பேர் உயிரிழந்துள்ளதுடன் 80,000 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியரான **திருமதி அமிர்தாசினி சிவேந்திரன்** அவர்களது தந்தை

**சரவணமுத்து சுப்பிரமணியம்**

07.07.2017 அன்று காலமாகிவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**ஆசிரியர் கழகம் ,**
**யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை, புத்தூர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 31 . 03 . 1942

மறைவு 23 . 06 . 2016

**அமரர் பொன்னுத்துரை பரமநாதன்**

திதி : நிருதியை

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே !
உங்கள் பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்.
உங்கள் வாய்மொழி நின்றாலும் மூடிய விழி மலர்ந்திட நின்றாலும்
எங்கள் மூச்சில் கலந்திருப்பீர் அப்பா !
என்றும் எங்கள் பேச்சில் நிறைந்திருப்பீர்கள் அப்பா !
எங்களை விட்டு எங்கே விலகியுள்ளீர் அப்பா !
வாழ்க்கையில் மீண்டும் குழந்தையாய் எங்களிடமே
வருவீர்கள் தானே அப்பா !
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும் மட்டும் அல்ல மீண்டும் ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மறையாது அப்பா !
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாயிராம்

*என்றும் உங்கள் நினைவுடன்*

மகன் – விஷ்ணு
குடும்பத்தினர்.
(விஷ்ணு நகைத் தொழிலகம்)
22 4/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

40, யமுனா வீதி,
நல்லூர்.
077 729 3676

**மரண அறிவித்தல்**



மலர்வு 24 . 08 . 1938

உதிர்வு 06 . 07 . 2017

**வ.ஆ.அதிரூபசிங்கம் (BA)**

**(இளைப்பாறிய பிரதி மேலதிகாரி, இலங்கை போக்குவரத்துச்சபை, பருத்தித்துறைச்சாலை)**

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வ.ஆ.அதிரூபசிங்கம் கடந்த (06.07.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சீதாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - அழகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கவேலாயுதத்தின் சகோதரரும், பத்மலோசனாவின் அன்புக் கணவரும், இளமதி, காலஞ்சென்ற இளவேணி மற்றும் கப்டன் ஆதவன் (வர்த்தகக் கப்பல்), கப்டன் ஆசுகன் (வர்த்தகக் கப்பல்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசேகரன், அமுதா, நிர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணன், ஆகமன், அமிழ்தினி, வாசவி, அச்சுதை, அற்புதை, அநிந்திதை ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்மன் கோயிலடி,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 242 8411, 077 621 4177**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் சார்பான பிரச்சினைகளில் நிதானம் அவசியம்

*அமைச்சர் ஹலீம் வலியுறுத்தல்*

கண்டி, ஜூலை 11

சமூகம் சார்ந்த பிரச்சினை விடயம் தொடர்பாக கையாளும் போது மிகுந்த அவதானத்துடனும் மதிநுட்பத்துடனும் உரிய முறையில் கையாள வேண்டும். ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைளையே நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் என முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால்துறை அமைச்சர் எச். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்

மடவளை கலாபூசணம் நிசார் எழுதிய பாடல்களின் இறுவட்டு வெளியீட்டு விழா மடவளை மதீனா தேசியப் பாடசாலையின் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் எமது சமூகப் பிரச்சினைகளை எமது முஸ்லிம்கள் தலைவர்கள் நிதானமாகச் செயற்பட்டு வெற்றியும் கண்டுள்ளார்கள். அந்த வழியில்தான் நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதனால் தான் இன்று எமது சமுகத்திற்கு எதிராக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிமான முற்றுப்புள்ளியை வைக்க முடிந்துள்ளது.

இது நிரந்தரமான முற்றுப்புள்ளி அல்ல. இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் நிரந்தரமான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் - என்றார். (த-ய)



# போரின்போது நான் காப்பாற்றிய மக்கள் டெங்கினால் சாவது வருத்தமளிக்கிறது

*மகிந்த ராஜபக்ச ஆதங்கம்*

கொழும்பு, ஜூலை 11

போரில் இருந்து பாதுகாக்கப்பட்ட மக்கள் தற்போது டெங்கினால் உயிரிழப்பது கவலையளிக்கின்றது என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கில் மக்களை நான் போரிலிருந்து மீட்டெடுத்தேன். எனினும் டெங்கு நோயினால் அவர்கள் உயிரிழப்பதைத் தடுக்க முடியாமை வருத்தமளிக்கின்றது. டெங்குநோய் நாடு முழுவதிலும் பரவிச் செல்கின்றது.

டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல்பேதம் பாராது அனைத்துமட்ட மக்களும் இணைந்து முயற்சிக்க வேண்டியது அவசியம். நாட்டில் இடம்பெறும் அனைத்து விடயங்களுக்கும் என் மீது குற்றம்சுமத்தும் ஓர் கலாசாரம் உருவாகியுள்ளது.

டெங்குநோய் தொடர்பான குற்றச்சாட்டும் எந்த நேரத்திலும் என் மீது சுமத்தப்படக் கூடும். அரசு தொடர்ந்தும் பழிவாங்கல்களில் ஈடுபட்டுவருகின்றது. இதில் ஓர் முடிவைக் காண முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இனியேனும் அரசு செயற்றிறனுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (த-ய)

# மட்டு. விகாராதிபதியின் மெய்க்காவலர் பணி நீக்கம்

மட்டக்களப்பு, ஜூலை 11

சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு மெய்ப்பாதுகாவலராகக் கடமை புரிந்து வந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தேரரைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை முதல் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். மேற்படி பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தேரருக்கும் இடையில் விகாரையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து பொலிஸ் உத்தியோகத்தர் தேரரைத் தாக்கியதாகவும் தேரர் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தச் சம்பவம்பற்றி விசாரணை மேற்கொண்டுவந்த பொலிஸார், தேரரின் பொலிஸ் உத்தியோகத்தரைப் பணி இடைநிறுத்தம் செய்துள்ளனர்.

மட்டக்களப்பு தேரர் அடிக்கடி பொலிஸாருடன் முரண்பட்டுக் கொள்பவர். கடந்த மாதமும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஒரு பொலிஸாருடனும் அவர் முரண்பட்டிருந்தார். மேலும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தும் போது கடமையிலுள்ள பொலிஸாருடனும் அவர் முரண்பட்டுக் கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய-46)

# நுவரெலியா கல்வி அலுவலகத்தால் குப்பையில் வீசப்பட்ட பாடநூல்கள்

நுவரெலியா, ஜூலை 11

நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தால் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தக் கூடிய ஒரு தொகை பாடநூல்கள் குப்பையில் வீசப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

வலயக் கல்வி அலுவலகத்தின் பின்புறத்தில் வாகனத் தரிப்பிடம் ஒன்றில் இந்தப் புத்தகங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான இந்தப் பாட புத்தகங்கள் மிகவும் பெறுமதியானவையாகும். இவற்றில் ஆசிரியர்களுக்கான பாடக் கைநூல்களும் காணப்படுகின்றன. இந்தப் புத்தகத் தொகுதியில் அனைத்து மொழிமூலமான மாணவர்களும் கல்விகற்கக் கூடிய பாடப் புத்தகங்கள் காணப்படுகின்றன.

தற்பொழுது பெரும்பாலான மலையகப் பாடசாலைகளில் பாடப் புத்தகங்களுக்கு குறைபாடு காணப்படுகின்றது. கல்வி அமைச்சினால் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கபட்டபோதும், வலயக் கல்வி பணிமனைகள் அவற்றை விநியோகிப்பதில்லை என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும் எனப் பலரும் தெரிவிக்கின்றனநர்.

எனவே, அதிகாரிகள் இந்த விடயத்தில் பொறுப்பாக நடந்துக் கொள்ள வேண்டும். பாடப் புத்தகங்களையும், பாட கைநூல்களையும் உரியவர்களிடம் உரிய நேரத்தில் கையளிக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-ய-43)

# முஸ்லிம் சமூகம் ஒற்றுமையுடன் செயற்படவேண்டிய தருணம் இது

*சாய்ந்தமருதில் அமைச்சர் ரிசாத் அழைப்பு*

அம்பாறை, ஜூலை 11

அரசியல் ரீதியான கொள்கை வேறுபாடுகள் மற்றும் தனிப்பட்ட அபிலாசைகளுக்கு அப்பால் முஸ்லிம் சமூகம் ஒன்றுபடவேண்டிய தருணம் வந்துவிட்டது என அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

லங்கா அசோக் லேலண்ட் பி.எல்.சி. கம்பனியின் சாய்ந்தமருது - கல்முனையை மையமாகக்கொண்டு இயங்கவுள்ள கிளையை ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் இறைமைக்குத் துளியளவேனும் பங்கம் விளைவிக்காத ஆயுதத்தில் நாட்டம் காட்டாத ஆயுததாரிகளை ஊக்குவிக்காத - உதவியளிக்காத எந்த ஓர் இனத்துக்கும் அநீதி இழைக்காத முஸ்லிம் சமூகத்தைப் பேராபத்து சூழ்ந்துள்ளது.

யாரை நம்பினோமோ, யாரைக் கொண்டுவர எம்மை அர்ப்பணித்தோமோ அவர்கள் மீது சந்தேகம் வந்துவிட்டது. அவர்களில் நம்பிக்கை இழந்துவிட்டோம்.

முஸ்லிம்களின் இருப்புக்கு ஏற்பட்டிருக்கும் இந்தப் பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்ள நாம் ஒன்றுபட வேண்டியிருக்கின்றது. சமூகத்தில் உள்ள அத்தனை சாராரும் ஒருமித்து பேசவேண்டிய காலகட்டம் உருவாகி இருக்கின்றது. நமது சமூகத்துக்கு எற்பட்டுள்ள ஆபத்துக்களையும் சவால்களையும் தாண்டிச்செல்லக்கூடிய வகையில் இளைஞர்கள், இன்னும் பல்துறை சார்ந்தவர்களைச் சமூக ஒற்றுமைக்காக தயார்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

அரசியல் ரீதியான பிளவுகளைத் தாண்டி இந்த முயற்சியை நாம் முன்னெடுக்க வேண்டும். நமது சமூகத்தைச் சீண்டி வேண்டுமென்றே வம்புக்கிழுக்க இனவாதிகள் தருணம் பார்த்திருக்கின்றனர் - என்றார். (த-ய)

## காணி விற்பனைக்குண்டு

நுணாவில் கல்வயல் வீதியில்
ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலைக்கு
அருகில் வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு. (CS 90161) (14)

077 723 0938 (குகன் மில்)
077 935 2675 / +447989225885

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து
வீட்டு வேலை செய்யக்கூடிய 45
வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண்
தேவை. தனிப்பட்டவர்,
பொறுப்பில்லாதவர விரும்பத்தக்கது.

077 929 8034

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல
வர்த்தக நிலையத்திற்கு வேலை
யாள்கள் தேவை.
Bill Clerk மற்றும் உதவியாளர்
தேவை.

077 386 6250

## தேவை

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக 27 வயதுடைய O+ குருதி வகையைச் சேர்ந்த இளம் பெண்ணொருவருக்கு O+ சிறுநீரகம் உடனடியாகத் தேவைபடுகிறது . வழங்க விரும்பவோர் 25-55 வயதிற்கு இடைப்பட்டோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 287 3264

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டலுக்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✓ காசாளர் - ஆண்/ பெண்
✓ அப்பம், றொட்டி போடத் தெரிந்தவர்கள் ஆண் / பெண்

குறிப்பு :- சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

076 359 9737, 077 798 3933

## வேலைவாய்ப்பு

**உழவு இயந்திர இயக்குநர்**
*(Tractor Operator)*

செல்லுபடியாகும் வாகன சாரதி
அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்
வேண்டும். (கிளிநொச்சி நகரில்
வசிப்பவர் விரும்பத்தக்கது)

கிளீன்வெல் பிறைவேட் லிமிட்டெட்,
இல.154, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
077 220 9565

## வலி கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ.சங்கம்,நீர்வேலி கோப்பாய் தெற்கு (பழைய வீதி) கிளை இல.18 இன் கட்டடம் புனரமைப்பதற்கான கேள்வி கோரல்

கிளை இல.18 இன் கட்டடம் புனரமைப்பதற்கான கூறுவிலை பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது கேள்வி விண்ணப்பங்களை தலைமைக்கந்தோரில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி : 20.07.2017
(04.07.2017 ஆம் திகதிய இயக்குநர் சபை தீர்மானப்படி)

நீர்வேலி
06.07.2017

பொது முகாமையாளர்

## நிரந்தர ஆலய பூசகர் தேவை

**கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயத்துக்கு**

நிரந்தர ஆலய பூசகர் தேவைப்படுவதனால் விரும்பு வோர் ஆலயம் திறந்திருக்கும் நேரங்களில் 15.07.2017 மாலை 5.00 மணிக்கு முன்னதாக விண்ணப்ப ங்களைச் சமர்பிக்குமாறு கேட்டுக் கொள் கின்றோம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

காலை 6.30 - 8.00
மதியம் 11.30 - 1.00
மாலை 4.00 - 5.30

செயலாளர்
பரிபாலன சபை

## இயந்திரம் மூலம் கழிவகற்றும் சேவை

இயந்திரம் மூலம் (Gully Emptyng Service) மலசலகூடங்கள் மற்றும் கழிவுநீர் ஆகியன சுத்திகரிப்பு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

கிளீன்வெல் பிறைவேட் லிமிட்டெட்,
இல.154, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
077 220 9575,021 222 4128,
077 220 9566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை அரச அலுவலகங்களில் முஸ்லிம் அதிகாரிகள் வேண்டும்

## நல்லாட்சிக்கான முன்னணியிடம் கிண்ணியா அமைப்பு கோரிக்கை

திருமலை, ஜூலை11
திருகோணமலை மாவட்ட அரச அலுவலகங்களில் முஸ்லிம் உயர் அதிகாரிகளையும் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கிண்ணியா குரல் ஊடாக அமைப்பு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி புதிய அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட பின்னர் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இரு மாவட்டங்களுள் திருகோணமலை மாவட்டமும் ஒன்று.
ஆனாலும் இந்த மாவட்ட முக்கிய அரச அலுவலகங்களான மாவட்டச் செயலகம் உட்பட ஏனைய அலுவலகங்களில் முஸ்லிம் பொறுப்பதிகாரிகள் இல்லை.
இந்த விடயம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதும் இதுவரை எதுவும் நடக்கவில்லை.
எனவே புதிய முஸ்லிம் கட்சியான நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இது விடயத்தில் எதாவது முன்னெடுப்புகள் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (கு-ய-45)

# போக்குவரத்துக் குற்றத்துக்கு அதியுச்ச அபராதம் 2 லட்சம் ரூபா

கொழும்பு, ஜூலை11
கடுமையான போக்குவரத்துக் குற்றங்களுக்கான அபராதத் தொகையை இரண்டு இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கான பிரேரணையொன்றைப் போக்குவரத்து அமைச்சு அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளது.
விபத்துகளுக்கான முதன்மைக் காரணங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட தீவிர ஆய்வுகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்துகளை ஏற்படுத்துபவர்களுக்கும், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனங்களைச் செலுத்தும் இளம்பராயத்தினருக்கும் இந்த உச்சபட்ச அபராதம் விதிக்கப்படும்.
அடுத்தடுத்து மூன்று மோசமான விபத்துகளை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு இந்த அபராதத்துக்கு மேலதிகமாக அவர்களது ஆயுள்காலம் முழுக்கச் சாரதி அனுமதிப்பத்திரத்துக்குத் தடை விதிக்கப்படும்.
நிதியமைச்சு, போக்குவரத்து அமைச்சு, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த ஐவர் அடங்கிய குழுவொன்றால் இந்த அபராதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.
அத்துடன், தற்போது 500 மற்றும் 1000 ரூபாவாகவுள்ள அபராதங்களும், 2,000 ரூபாவாக அதிகரிக்கப்படும் - என்றார். (த-ய)

# ஒக்ரோபருக்குள் தேர்தலை நடத்தாவிடின் போராட்டம்

## அரசை மிரட்டுகிறார் கம்மன்பில

கொழும்பு, ஜூலை11
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் நடத்தாவிடின் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.



மொரட்டுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
தேர்தலை நடத்துவதில் இந்த அரசு வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறியுள்ளார்.
மேலும் போர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவையையும் இந்த அரசு கைது செய்ய முனைவதாகக் குற்றம் சாட்டிய அவர், அரசின் இவ்வாறான அராஜகச் செயற்பாட்டைக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டார். (த-ய)

## கடந்த 6 மாதங்களில் மட்டும்

# பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 600 முறைப்பாடுகள்

கடந்த 6 மாதங்களுக்குள் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகச் சுமார் 600 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே குறிப்பிட்டார். அதிகார துஸ்பிரயோகம், சட்ட நடவடிக்கை எடுக்காமை, பக்கச்சார்பாகச் செயற்படுகின்றமை ஆகிய குற்றச்சாட்டுகளே அதிகமாக முன்வைக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார். (த-ய)

# தேங்காயையும் இறக்குமதி செய்யும் பரிதாப நிலைமை

கொழும்பு, ஜூலை11
தேங்காய் கொள்கலன் ஒன்றைப் பரீட்சார்த்த அடிப்படையில் இறக்குமதி செய்வதற்குப் பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக் குழு முடிவு செய்துள்ளது.
உள்ளூரில் உற்பத்தியாகும் தேங்காய், தேவைக்குப் போதுமானளவில் இல்லாததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
பரீட்சார்த்த அடிப்படையில் உரிக்காத நாருடன் கூடிய புதிய தேங்காய்களைக் கொண்ட கொள்கலன் இறக்குமதி செய்யப்படும் என்றும், இந்தப் பெறுபேற்றின் அடிப்படையிலேயே இறக்குமதி தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக் குழு தெரிவித்துள்ளது.
தீவு நாடாக இருந்தும் மீன்களை இறக்குமதி செய்யும் இலங்கை தற்போது தேங்காய் இறக்குமதியில் இறங்கியுள்ளதாகவும், தேயிலை இறக்குமதி எப்போது ஆரம்பிக்கும் என்றும் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.
தெங்குப் பொருள் ஏற்றுமதி இலங்கையின் முதன்மை ஏற்றுமதிகளில் ஒன்றாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# உமாஓயா பாதிப்பை ஆராய எதிரணியும் குழு நியமிப்பு

கொழும்பு, ஜூலை11
உமா ஓயாத்திட்டம் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை ஆராய்வதற்காக பொது எதிரணியின் உறுப்பினர்களைக்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவின் தலைமையில் இயங்கவுள்ள இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பத்ம உதயசாந்த குணசேகர, ரஞ்சித் சொய்சா மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவார்கள்.
உமா ஓயா திட்டம் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்பு தொடர்பில் ஒரு சாரார் முன்னைய அரசின் மீது குற்றஞ்சுமத்தி வருவதால் அது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது எனப் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி தெரிவித்தார். (த-ய)

# முஸ்லிம் எம்.பிக்கள் இருவர் சுயாதீனமாக இயங்க முடிவு

கொழும்பு, ஜூலை11
அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதேசங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அரசும், அரச அதிகாரிகளும் முன்வராமை, தங்களது முறைப்பாடுகளுக்குச் செவிசாய்க்காமை உட்பட்ட பல்வேறு குறைபாடுகளால் விரக்தியடைந்திருப்பதாலேயே சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்திருக்கின்றோம் என அவர்கள் கூறியுள்ளனர்.
அதேவேளை, அரசின் உதாசீனத்தால் அதிருப்தியடைந்துள்ள சுமார் இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது அரச கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் புறக்கணித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

# ஐ.தே.கவின் 77ஆவது ஆண்டு நிறைவையொட்டி கண்காட்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த மாதம் 22ஆம் மாபெரும் கண்காட்சியொன்றை நடத்த கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.
1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அன்றுமுதல் இன்றுவரை நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும், கடந்து வந்த பாதையையும் நினைவுகூரும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதியமைச்சர் அஷோக் அபேசிங்க தெரிவித்தார். (த-ய)

# மிருகக் காட்சிச்சாலையை இரவில் திறப்பதற்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை11
தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலையை இரவில் திறப்பதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தைச் சுற்றாடல் பாதுகாப்பு ஆர்வலர்கள் கண்டித்துள்ளனர்.
செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் மிருகக்காட்சிச்சாலையை மக்கள் பார்வைக்காகத் தினமும் இரவு 7.00 மணி முதல் 10.00 மணிவரை திறந்துவைக்கத் தீர்மானித்துள்ளதாக வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்ரமபெரேரா அறிவித்திருந்தார்.
இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை சுற்றாடல் பாதுகாப்பு குழுவின் தலைவர் ரவீந்திரநாத் தாபரே, இந்தத் தீர்மானத்தின் மூலம் அரசு மிருகங்களின் உரிமைகளை மீறியுள்ளதாகக் குற்றஞ்சாட்டினார். இரவில் மக்கள் அதிகளவில் நடமாடுவதன் மூலம் மிருகங்களின் சுதந்திரத்துக்கு இடையூறுகள் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
இரவில் பெரும்பாலான மிருகங்கள் தூங்குவது வழக்கமென்று கூறிய அவர், அரசின் இந்த நடவடிக்கை காரணமாக மிருகங்களின் தூக்கம் பாதிக்கப்பட்டு அவைகளுக்குச் சுகாதார ரீதியான பிரச்சினைகள் ஏற்படச் சாத்தியம் இருப்பதாகவும் எச்சரித்தார்.
தீர்மானங்களை எடுக்கும் முன்னர் மிருகங்களின் உரிமைகள் குறித்தும் கவனம் செலுத்துமாறு அரசிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூதூர் கிழக்குப் படுகொலை நினைவு தினம் அனுஸ்டிப்பு

கொழும்பு, ஜூலை 11
27 ஆண்டுகளுக்கு முன்னர் மூதூர் கிழக்கில் 07071990 அன்று 100 க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் ஆயுதப் படைகளால் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.
இன்று வரை இந்தப் படுகொலைக்கான விசாரணையுமில்லை. நிவாரணமும் இல்லை. இந்த நிலையில் இவர்களின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலி நிகழ்வு நேற்று முன் தினம் மாலை சம்பூரில் இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தின சிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன் உட்பட மாணவர்கள், பெண்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (து-40)

# ஜேர்மனியில் புலிகள்

கொழும்பு, ஜூலை11
இறுதிக்கட்டப் போரின் போது விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும், வெளிநாடுகளில் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
2009ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகள் செயற்பாட்டு ரீதியாக முற்றாக அழிக்கப்பட்ட போதும், தற்போது செயற்படுகின்றனர் என ஜேர்மனி அறிவித்துள்ளது.
ஜேர்மன் தேசியப் புலனாய்வுப் பிரிவு சேவை தனது வருடாந்த அறிக்கையில் இந்த விடயங்களைக்குறிப்பிட்டுள்ளதாகக் குறித்த கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
விடுதலைப் புலி உறுப்பினர்கள் 1000பேர் ஜேர்மனில் தங்கியிருந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஜேர்மன் புலனாய்வுப் பிரிவு பிரதானி பேராசிரியர் ஹான்ஸ் ஜோர்ஜ் மாசேன் என்பவரினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஜேர்மன் அமைச்சரவை அமைச்சர் பேராசிரியர் தோமஸ் டே மிஸ்யேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவினருக்குப் புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் உதவி செய்து வருகின்றனர்.
உலகம் முழுவதும் முன்னெடுக்கப்படும் தமிழர் கலாசாரத் திட்டங்கள் ஊடாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்காக நிதி உதவி வழங்கப்படுவதாக அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளதாக குறித்த சிங்கள ஊடகம் கூறியுள்ளது. (து-ய)

# டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர் மாணவர்

கொழும்பு, ஜூலை11
நாடெங்கும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 25 வீதமானோர் 17 வயதுக்குக் குறைந்த பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக நாடெங்கும் தீவிர சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> நுளம்புகளின் தாக்கத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மாணவர்கள் தங்களது சீருடைகளுக்கு மேலதிகமாக உடலை மூடும் ஆடைகளை அணியவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும்சுகாதார அமைச்சு கூறியுள்ளது.
> இதுவரை நாட்டில் சுமார் 77ஆயிரம் டெங்குநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

முக்கியமாக பாடசாலை வளவுகள் மற்றும் வகுப்பறைகளில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.
நுளம்புகளின் தாக்கத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள மாணவர்கள் தங்களது சீருடைகளுக்கு மேலதிகமாக உடலை மூடும் ஆடைகளை அணியவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.
இதுவரை நாட்டில் சுமார் 77ஆயிரம் டெங்குநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 236 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-ய)

# காரியவசத்துக்கு சேவை நீடிப்பு

கொழும்பு, ஜூலை11
அமெரிக்கா வுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசத்துக்கு வரும் செப்ரெம்பர் மாதம் வரை, சேவை நீடிப்பு அளிக்கப்ப ட்டுள்ளது.
அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க இதற்கான அனுமதியை அளித்துள்ளார்.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தைக் கருத்தில் கொண்டே இந்தச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.
ஐ.நா. விவகாரங்களை நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியே கையாளுகின்றபோதிலும், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுடனான இருதரப்புச் சந்திப்புகளில், பிரசாத் காரியவசம் பங்கேற்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே அவருக்குச் சேவை நீடிப்பு வழங்கப் பட்டுள்ளது. (து-ய)

# தமிழகத்தின் எதிர்ப்பை நிராகரித்தது இலங்கை

கொழும்பு, ஜூலை11
இலங்கை கடற்பரப்பில் அடிமடி வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறையைத் தடை செய்யும் நாடாளுமன்றத் தீர்மானத்துக்குத் தமிழ் நாடுஅரசுதெரிவித்துள்ள எதிர்ப்பை இலங்கை



அரசு அடியோடு நிராகரித்துள்ளது.
இழுவைமடி வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறையைத் தடைசெய்யும் நாடாளுமன்றத் தீர்மானத்துக்குத் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.
இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர, இலங்கையின் கடற்றொழில் துறையின்நலன்களைக்கருத்தில்கொண்டே புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
நாங்கள் எமது நலன்களையே பார்க்கவேண்டியுள்ளது. ஏனைய நாடுகளின் மீனவர்களின் கரிசனைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை. புதிய சட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்தார். (து-ய)

# புதிய அரசமைப்பால் பெரும்பான்மைக்கும் நல்ல தீர்வு கிடைக்கும்

## அமைச்சர் ஹக்கீம் விளக்கம்



கொழும்பு, ஜூலை11
சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக மாத்திரமன்றிப் பெரும்பான்மை இன மக்களின் பிரச்சினைக்கான தீர்வாகவும் புதிய அரசமைப்பு அமையும்.
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம்காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.
மாவனல்லை, ஹெம்மாதகமவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் அரசமைப்பை உருவாக்குவதற்கு முயற்சி செய்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டே வந்துள்ளது. இந்த முறையும் அவ்வாறுதான். நாட்டு மக்கள் அனைவரினதும்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகவே அரசமைப்பு கொண்டுவரப்படவுள்ளது.
இந்த நாட்டில் சிறுபான்மை இன மக்கள் நீண்டகாலமாகப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதை எவராலும் மறுக்க முடியாது. போர் வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கையை எந்தளவு சீரழித்தது என்பதை நாம் அறிவோம். போர் முடிவுக்கு வந்துள்ள இந்த யுகத்தில் அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்றால் அது எதிர்காலத்தில் சிக்கலையே ஏற்படுத்தும்.
சிறுபான்மை இன மக்கள் இந்த அரசை உருவாக்குவதற்கு முழுமையான பங்களிப்பை வழங்கினார்கள். இந்த அரசு தங்களின் பிரச்சினைகள் அனைத்துக்கும் பூரணமான தீர்வைத் தரும் என அவர்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை நாம் வீணாக்கக்கூடாது; வீணாக்கவு மாட்டோம்.
புதிய அரசமைப்பால்தான் இவர்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வை வழங்கமுடியும். சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக மாத்திரமன்றிப் பெரும்பான்மை இன மக்களின்பிரச்சினைக்கான தீர்வாகவும் இந்த அரசமைப்பு அமையும். முழு நாட்டினதும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் உருவாகப்போகும் அரசமைப்பாகவே இது இருக்கும்.
ஆனால் இது பௌத்த மதத்தை அழித்துவிடும் என்று இப்போது சிலர் பிரசாரம் செய்கின்றனர். பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் நீக்கப்பட வேண்டும் என்று அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவுக்கு எவரும் பரிந்துரை செய்யவில்லை. எல்லா மதங்களும்எல்லா இனங்களும் நிம்மதியாகபாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம் - என்றார் (து-ய-3)

# அரசியலில் பெண்கள் பங்கு; இலங்கைக்கு 179 ஆம் இடம்

கொழும்பு, ஜூலை11
அரசியலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான பன்னாட்டுப் பட்டியலில் இலங்கை 179ஆவது இடத்தில் உள்ளது.
பெண்களின் அரசியல் பங்களிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.
2017 ஜனவரி முதலாம்திகதி வரையான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
190 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில், இலங்கை 179ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையில் 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 13 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர்.
இது மொத்த சதவீதத்தில் 5.8 வீதமாகப் பதிவாகியுள்ளது. இதேவேளை, அமைச்சர்களாகப் பதவிவகிக்கும் பெண்கள் தொடர்பானபட்டியலில், இலங்கை 164ஆவது இடத்தில் உள்ளது.
47 அமைச்சர்களைக் கொண்ட இலங்கையில் 2 பெண் அமைச்சர்கள் மட்டுமே உள்ளனர் எனவும், இது மொத்த சதவீதத்தில் 4.3 வீதம் என்றும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இலங்கையின் அரசியலில் பெண்களுக்கு 25 சத வீத பிரதிநிதித்துவத்தை வழங்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகின்றது.
நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான பட்டியலில் ருவாண்டா முதலாம் இடத்தில் உள்ளது. அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் உள்ள 80 பிரதிநிதிகளுள் 49 பிரதிநிதிகள் பெண்களாவர். மொத்த சதவீதத்தில் 61.3 என்ற வீதத்தை இது பதிவு செய்துள்ளது. (து-ய)

ஈர விழிகளுடன் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி
" சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம் "



அமரர் வஸ்தியாம்பிள்ளை சிறில்
(மயிலிட்டி)
(ஓய்வூதியர் மாவட்ட வைத்தியசாலை - தெல்லிப்பழை)
இன்முகத்துடன் எல்லோருடனும் பழகி யாவரையும் கவர்ந்து அனைவரினதும் இதயத்திலும் நிறைந்த அன்பு தந்தையின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவனை இடைவிடாமல் இறைஞ்சுகின்றோம்
மூணாமலை ஒழுங்கை,
மானிப்பாய்.
இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழமை நகரானது அகமதாபாத் நகர்

புதுடெல்லி, ஜூலை 11
யுனெஸ்கோ அமைப்பு இந்தியாவின் அகமதாபாத் நகரை புராதன நகரம் என்று அடையாளமிட்டுள்ளது. இதன்மூலம் இந்தியாவில் இருந்து யுனெஸ்கோ தெரிவுசெய்த முதல் புராதன நகரம் என்ற சிறப்பு அதற்குக் கிடைக்கிறது.
ஐக்கிய நாடுகள் சபைக்கான கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ உலகின் மிகவும் பழமையான நகரங்கள் மற்றும் பாரம்பரிய சின்னங்களையும் புராதன பட்டியலில் இணைத்து வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பட்டியல் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.
அதில் குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் புராதன சிறப்பு மிக்க நகராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் யுனெஸ்கோ சார்பில் இந்தியாவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் புராதன நகரம் என்ற அந்தஸ்தை அகமதாபாத் பெறுகிறது. அகமதாபாத்தை விட பரிஸ், வியன்னா, பிரசல்ஸ், உரோம், எடின்பேர்க் ஆகிய பிரபல நகரங்களும் இந்தப் பட்டியலில் இணைந்தன.
600 ஆண்டுகள் பழமை வாய்ந்த அகமதாபாத் நகரம் சுல்தான் அகமதுவால் உருவாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# மக்களை மீட்கும் பணி

பக்தாத், ஜூலை 11
மோசூல் நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து முழுவதுமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள மக்கள் மிகவும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இது தொடர்பான ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த நகர்களில் ஈராக்கின் மோசூல் நகரம் மிகவும் முக்கியமானது. அந்த நகரமே ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் தலைமையகமாக விளங்கியது. மோசூலின் அல் நூரி மசூதியில் நின்று கொண்டே ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளை இணைத்து அந்த இடங்களுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) என்று பெயரிட்டார் அல் பக்தாதி. இந்த நகர் நேற்றுமுன்தினம் அதிகாலை ஈராக் படையின் கட்டுப்பாட்டின் கீழ் முழுமையாக வந்தது.
சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் மீண்டும் மோசூலுக்குள் ஊடுருவலாம் என்ற காரணத்தால் மோசூலில் பாதுகாப்புப் பலப்ப( ப்பட்டுள்ளது. மக்களுடன் மக்களாக ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் சென்றிருக்கலாம் என்ற காரணத்தால் உடல், உடமைச் சோதனைகள் தீவிரமாக நடைபெறுகின்றன. பொது மக்கள் மிகவும் பாதுகாப்பாக அரச பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

> “ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த நகர்களில் ஈராக்கின் மோசூல் நகரம் மிகவும் முக்கியமானது. அந்த நகரமே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைமையகமாக விளங்கியது. மோசூலின் அல் நூரி மசூதியில் நின்றுகொண்டே ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளை இணைத்து அந்த இடங்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) என்று பெயரிட்டார் அல் பக்தாதி.”





# வங்காள விரிகுடாவில் பெரும் போர் ஒத்திகை

## ஞாயிறன்று ஆரம்பம்

சென்னை, ஜூலை 11
மலபார் பயிற்சி எனப்படும், இந்திய, அமெரிக்க, ஜப்பானிய கடற்படைகளின் மிகப்பெரும் கூட்டுப் போர் ஒத்திகை, வங்காள விரிகுடாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.
சென்னை துறைமுகம் மற்றும் அதனை அண்டிய கடற்பகுதியில் தரித்து நிற்கும் அமெரிக்காவின் பெரிய வானூர்தி தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். நிமிட்ஸ் தலைமையிலான போர்க்கப்பல்களும், இந்தியாவின் பெரிய விமானந்தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ். விக்கிரமாதித்யா தலைமையிலான போர்க்கப்பல்களும், ஜப்பானின் பெரிய உலங்குவானூர்தி தாங்கி கப்பலான ஜே.எஸ். இசுமோ தலைமையிலான போர்க்கப்பல்களும் இணைந்து இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றுள்ளன. 1992ஆம் ஆண்டு தொடக்கம் நடந்து வரும் இந்த கூட்டுப் பயிற்சி முன்னெப்போதும் இல்லாதளவுக்கு இந்த ஆண்டில் கவனத்தை பெற்றுள்ளது.
இந்தியப் பெருங்கடலில் சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், நீர்மூழ்கிகளை கண்டறிந்து வேட்டையாடும் நோக்கில், இந்தக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. சென்னை கடற்பரப்பில் முதற்கட்டமாகவும், வங்காள விரிகுடாவில் இரண்டாவது கட்டமாகவும், இந்த கூட்டுப் பயிற்சி இடம் பெறும். மொத்தம் 20இற்கும் அதிகமான போர்க்கப்பல்கள் இந்த கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றன. இதில் இந்தியக் கடற்படையின் 78 வரையான கப்பல்கள் இடம்பெறுகின்றன. (ம)

# கனடாவில் காட்டுத் தீ


## ஒரே நாளில் 180 இடங்கள் பாதிப்பு



ஒட்டாவா, ஜூலை 11
கன ாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாக ாத்தின் 180 இடங்களில் காட்டுத் தீ பரவி உள்ளது. தீ விபத்தை அடுத்து சுமார் 7ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.
கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் அந்த மாகாணத்தின் 180 இடங்களில் காட்டுத் தீ பரவி உள்ளது. காற்று பலமாக வீசுவதால் தீ காட்டுப்பகுதியையொட்டி உள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு வேகமாக பரவி வருகிறது.
இதையடுத்து, வனப்பகுதியில் உள்ள கிராமங்களில் வசித்து வந்த சுமார் 7 ஆயிரம் பேர் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.
தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைக்கும் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். உலங்கு வானூர்திகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் வெப்பத்தின் தாக்கம் இன்னும் சில நாட்களுக்கு தொடரும் என்று அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட சிரமமாக இருக்கப்போகிறது என்ற மறைமுகச் செய்தியையும் தந்துள்ளதால் அங்கு அவசர நிலைமை அறிவிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசூலில் துரிதகதி



# குழந்தைகள் விரும்பும் பள்ளி

மொஸ்கோ, ஜூலை 11

ரஷ்யாவின் மொஸ்கோவில் இயங்கும் மழலையர் பள்ளிக்கு குழந்தைகள் தினமும் மகிழ்ச்சியாகச் செல்கிறார்கள். கோட்டை வடிவில் பள்ளியின் கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள் விரும்பக்கூடிய வண்ணங்களில் சுவர்களில் ஓவியங்கள், விளையாட்டுக் கருவிகள், கால்பந்து மைதானம், பூந்தோட்டம், ஊஞ்சல்கள், சறுக்கு மரங்கள் என்று ஏராளமான அம்சங்கள் இந்தப் பள்ளியில் இருக்கின்றன.

"குழந்தைகளுக்கு ராஜா, ராணி கதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். தாங்களும் ஓர் இளவரசனாகவோ, இளவரசியாகவோ இருக்க வேண்டும் என்று நினைக்காதவர்கள் உண்டா? அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இந்தப் பள்ளியை வடிவமைத்திருக்கிறோம். இங்கே படிக்கும் 150 குழந்தைகளும் தினமும் தங்களை இளவரசனாகவும் இளவரசியாகவும் நினைத்துக்கொண்டு, கோட்டைக்குள் நுழைகின்றனர். இங்கே எந்தக் குழந்தையும் சும்மா இருந்து பார்த்ததில்லை. அவரவருக்குப் பிடித்த விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்பார்கள். ஜெர்மனிக்கு ஒருமுறை சென்றபோது, இதுபோன்ற ஒரு பள்ளியைப் பார்த்தேன். அதை வைத்துதான் இந்தப் பள்ளியை உருவாக்கியிருக்கிறேன். பெற்றோர் 6ஆயிரம் ரூபாய் மட்டும் கட்டணமாகச் செலுத்தினால் போதும்" என்கிறார் பள்ளியின் இயக்குனர் பவல் க்ருடினின்.

(ம)



# லண்டனை தொடர்ந்தும் மிரட்டும் தீ



லண்டன், ஜூலை 11

லண்டன் நகரில் உள்ள கேம்டன் லாக் பகுதியில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து ஏற்பட்டதும் உடனடியாக தீயணைப்பு படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயை அணைக்கும் முயற்சியில் 70இக்கும் மேற்பட்ட தீயணைப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். குறித்த பகுதியில் உள்ள மூன்று கட்டடங்களில் தீ பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழப்புத் தொடர்பில் நேற்று மதியம் வரை உத்தியோகபூர்வத் தகவல் எதுவும் வரவில்லை. கேம்டன் லாக் பகுதி சுற்றுலா வாசிகள் அதிகம் வந்துசெல்லும் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மீண்டும் ஒரு துப்பாக்கிச் சூடு

ஒரு வருட காலப்பகுதிக்குள் யாழ்ப்பாணத்தில் மீண்டுமொருமுறை பொலிஸாரின் துப்பாக்கிச்சூடு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சட்டவிரோத மணல்கடத்தலில் ஈடுபட்டிருந்த வாகனத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிப்பிரயோகத்தின்போதே இளைஞரொருவர் கொல்லப்பட்டார் என இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

எனினும், பொலிஸார் தெரிவிப்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளமறுப்பதற்கானநியாயமானகாரணங்கள் உள்ளன.

கடந்தகால அனுபவங்களே மக்கள் சந்தேகப்படுவதற்கான காரணமாக உள்ளன. கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவத்தின்போதும்கொல்லப்பட்டயாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் பழிபோட்டதும் பின்னர்உண்மைஅம்பலமானதும் மக்கள்மனதில் ஆழமாகப் பதி வாகியுள்ளன.

உள்நாட்டுப்போரின்போது மக்கள் சந்தித்த அனுபவங்களாலும் இலங்கையின்சட்ட அமுலாக்கல் பிரிவினரை தமிழ் மக்கள் நம்ப மறுக்கின்றனர்.

சட்ட அமுலாக்கல் பிரிவினர் மீதான நம்பிக்கையின்மை என்பது இலங்கை முழுவதற்கும் பொதுவானவிடயமென்றாலும்வடக்கில்இது ஆழமாகக் காணப்படுகின்றது.

இலங்கை அதிகாரிகள் எந்தச் சம்பவம் குறித்தும் நேர்மையான விசாரணைகளை முன்னெடுக்காததும், மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய தீர்ப்புகளை காலதாமதமின்றி வழங்காததும்சந்தேகங்கள்நீடிக்கின்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாணம் போன்றகாயங்களும்அச்சங்களும் சந்தேகங்களும் ஆறாமலிருக்கின்ற ஒரு பிரதேசத்தில், பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு தொடர்வதும் அவை உயிர்களைப் பலிகொள்வதும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம்.

இதன் காரணமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவினர் இது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியது அவ சிய மாகும்.

குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்காக, குற்றங்களைத் தடுத்துநிறுத்துவதற்காக துப்பாக்கிச் சூட்டை மேற்கொள்வதால் வடக்கில் ஏற்பட்டுவிடக்கூடிய ஆபத்தான சூழல் குறித்து இலங்கை அரசு தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

அதேவேளை, இந்தச் சம்பவம் குறித்தாவது உரிய விசாரணைகளை முன்னெடுத்து காலந்தாழ்த்தாமல் உண்மையைத் தெரிவிக்கவேண்டும்.

இதன்மூலம்மாத்திரமேமக்கள் மனதில்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவினர் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.

# நேர்மையற்ற தமிழ் அரசியல்வாதிகளும் ஏமாந்து போகும் தமிழர்களும்

சேரலாதன்

மக்களின் பிரச்சினைகளை மறந்தவர்களாக வடபகுதி அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் ஒருவரையொருவர் விமர்சித்து அறிக்கைவிடுவதிலும், சவால் விடுவதிலும் செலவழிக்கின்ற நேரத்தைத் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் செலவிட்டால் என்ன? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அண்மையநாள்களாகவடக்கு மாகாணசபையை மையப்படுத்திய குழப்பநிலைஉருவாகியுள்ளது. முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் செயலிழக்க வைக்கப்பட்டுவிட்ட போதிலும், அதன் தாக்கம் இன்னமும் உணரப்படுகின்றது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாணசபை நிர்வாகத் தில் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதில் ஈடுபட்டு வருகின்றார். இதற்காக எதைச் செய்வதற்கும் அவர்தயாராகஉள்ளமைதெளிவாகத் தெரிகின்றது. ஆரம்பத்தில் தமிழர் நலன் சார்ந்த ஒரு செயற்பாட்டாளராகத் தம்மைக் காட்டிக் கொண்ட அவர், தற்போது ஒரு மூன்றாந்தர அரசியல்வாதியாகத் தம்மை வெளிக்காட்டி வருகின்றார். ஆரம்பத்தில் தாம் தெரிவித்த கருத்துக்களையே மறந்து அவர் செயற்படுகின்றார்.

> மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எமது அரசியல்வாதிகளுக்கு நேரம் இருக்காது என்றே எண்ணத்தோன்றுகின்றது. பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்பார்கள். ஆனால் அரசியல்வாதிகள் ஈரேழு உலகத்திலும் புகுந்து விளையாட வல்லவர்கள். ஆனால், தம்மை நம்பியிருக்கும் மக்களை மட்டும் எளிதில் கைவிட்டு விடுவார்கள்.

**மகாணசபை ஆளும் தரப்புக்குள் பிளவுகள் விரிவடைகின்றன**

மாகாணசபையின் ஆளும் தரப்புஉறுப்பினர்களிடம்எந்த வகையிலாவது ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டியது முதலமைச்சர் என்ற வகையில் அவரது தலையாய கடமையாகும். ஆனால் முதலமைச்சரின்ஏடாகூடமானசெயற்பாடுகள், ஆளும் கட்சிக்குள் மேன்மேலும்பிளவுகளையே ஏற்படுத்திவருகின்றன.

புதிய அமைச்சர்களின் நியமனத்தில்கூட அவர் நடுநிலையுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன. தற்போது அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கும் திருமதி அனந்தி சசிதரன் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் கூறிக்கட்சியினால்ஒழுக்காற்று நடவடிக்கைக்குஉள்ளாகிவருகின்றார். இது தொடர்பாக ஆளுநருக்கும் தகவல் தரப்பட்டுள்ளது. ஆனால் முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அனந்தி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர் என்ற ஒரே காரணத்துக்காகமுதலமைச்சரால்அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அனந்தியும் தமக்கு ஆதரவளித்த கட்சியை உதறித் தள்ளிவிட்டு அமைச்சர் பதவியுடன் சங்கமமாகிவிட்டார்.

**மக்களால் புறக்கணிக்கப்பட்ட சங்கரியரது குள்ளநரித்தனம்**

கடிதங்கள் எழுதி எழுதியே பெரும் சாதனை படைத்தவர் வயதில் மூத்த அரசியல்வாதியான ஆனந்த சங்கரி. அவர் அரசியலிலும் வாழ்க்கையிலும் இறுதிக் கட்டத்தை எட்டி நிற்கின்றார். கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட அவர் ஒரு மாகாணசபை உறுப்பினராகவாவது தெரிவு செய்யப்பட்டுத் தமது பதவி ஆசைக்கனவை நனவாக்கிக் கொள்ளலாமென எண்ணியிருந்தார். ஆனால் மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. முற்றாகவே புறக்கணித்து விட்டனர். விடுதலைப் புலிகள் காலத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தாம் தோல்வி கண்டதுக்குப் புலிகளே காரணமென இவர் சாடினார். புலிகளின் தலைவர் பிரபாகரனையும் இவர் குறை



கூறத் தவறவில்லை. இதே வேளை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை வரவேற்று உரையாற்றியவரும் இவரேதான். இத்தகைய ஒருவர்தான், இன்றுதம்மிடம் பெயரளவில் மட்டுமே உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பொறுப்பை முதலமைச்சரிடம் ஒப்படைத்துவிடுவதாகவும் முதலமைச்சரைத் தமிழர் தரப்புக்குத் தலைமை தாங்குமாறும் கேட்டுள்ளார். இதுசாத்தான்வேதம் ஓதிய கதையைத்தான் நினைவுபடுத்துகின்றது. தமது இறுதிக் காலத்தில் நல்லவற்றைச் செய்யாதுவிட்டாலும், தீயவற்றையாவது எண்ணிப் பார்க்காது இருப்பதே சங்கரி ஐயாவுக்கு நிம்மதியான ஆறுதலைக் கொடுக்கும்.

**கொதிப்பு அடங்கிப்போன சுரேஸ் பிரேமச்சந்திரன்**

இதேவேளை தமது உடன்பிறப்புக்கு அமைச்சர் பதவி கிடைத்ததில் ஈபிஆர்எல்எப்வின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நிச்சயமாகப் புறகாங்கிதம் அடைந்திருப்பார். அவரது நீண்ட நாள் கனவொன்று முதலமைச்சரின் கருணையால் நனவாகியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டமை அவரைப் பொறுத்தவரையில் பெரும் சோகத்தை ஏற்படுத்திவிட்டது. அதிலிருந்து விடுபடுவதற்குத் தேசியப்பட்டியல் மூலமாவது நாடாளுமன்ற உறுப்பினர்பதவிகிடைக்காதாவெனக் காத்திருந்தார். அதில் கூடஏமாற்றம்தான்கிடைத்தது.

அன்றிலிருந்து கூட்டமைப்புத் தலைமை மீதும், தமிழரசுக் கட்சியின் மீதும் அவர் தீராத வெறுப்பை வெளிக்காட்டி வருகின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்தி ரனை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கைவிட்டு மாகாணசபைத் தேர்தலில்போட்டியிட்டுவென்று காட்டுமாறு சவால் விடுக்கின்றார். முதலமைச்ச ருக்கு ஆதரவாகத்திரண்டவர்களின் எண்ணிக்கையை அளவீடு செய்கின்றார். உண்மையில் மக்களுக்குத் தேவையான விடயங்கள் எவ்வளவோ இருக்க ஒரு கட்சியின் தலைவரான அவர்அனாவசியகாரியங்களில் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தால் 2020 இலும் கூட அவர் மக்களால் நிரா கரிக்கப்பட்டுவிடுவார்என்பதில்சிறிதளவும் ஐயமில்லை.

**புதிதாகக் கிளம்பியுள்ள பூதத்தால் கலக்கம்**


இதேவேளை புதிய பூதம் ஒன்றும் வடக்கு மாகாணசபைக்குள் புகுந்து கலக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. முதலமைச்சருக்கு ஆதரவான ஆளும் தரப்பு உறுப்பினர் ஒருவர் ஊடகவியலாளர் சிவராமின் கொலையுடன் தொடர்பு பட்டிருந்ததாக முதலமைச்சரே தமதுகைப்படக்கடிதம்ஒன்றை எழுதியதாக வெளிவந்த செய்திதான் அந்தப் பூதம். இந்தச் செய்தியில் உண்மைஇருக்குமானால், அது பாரதூரமான எதிர் விளைவை ஏற்படுத்தக் கூடியது. முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற காரணத்துக்காகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவர், மாகாண சபை உறுப்பினராகச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது. முதலமைச்சர் இவர் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை இனியும் தாமதிக்காது மேற்கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எமது அரசியல்வாதிகளுக்கு நேரம்இருக்காது என்றேஎண்ணத்தோன்றுகின்றது. பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்பார்கள். ஆனால் அரசியல்வாதி கள் ஈரேழு உலகத்திலும் புகுந்துவிளையாடவல்லவர்கள். ஆனால், தம்மை நம்பியிருக்கும் மக்களை மட்டும் எளிதில் கைவிட்டுவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கிலிருந்து வெளிப்படும் ஆதரவு சிறுபான்மையினருக்கு உதவுமா?

இந்துமதி



சிறுபான்மையின மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற குரல்கள் தெற்கிலிருந்து மெல்லக் கேட்க ஆரம்பித்துள்ளன. இதற்கான உண்மையான நோக்கம் என்னவென்றுபுரியவில்லை. இருந்த போதிலும், இதையொரு நல்ல சகுனமாகவே கருத வேண்டியுள்ளது. இனங்களுக்கிடையில் ஒற்றுமை தேவையென்ற கருத்தை ஆதரிக்கும் போது தான் இந்த நாட்டின் சுபீட்சத்துக்கு உதவமுடியும். ஆனால் கடந்த காலங்களில் அத்தகைய நிலையைக் காணமுடியவில்லை. இனவாதமும், இனவாதிகளும் பெருமளவில் தலைதூக்கி நின்றமையே இதற்கான பிரதான காரணமாகும்.

**நீண்ட கொடிய போர் ஏற்படுத்திய பாதிப்புக்கள்**

நீண்ட கொடிய போரொன்று இடம் பெற்று இந்த நாட்டின் அத்திபாரத்தையே உலுப்பி விட்டுள்ளது. இதன் பாதகமான விளைவுகளை மக்கள் நீண்ட காலத்துக்கு அனுபவிக்க வேண்டிய தலைவிதிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பல கோடிகள் ரூபா கணக்கான வெளிநாட்டுக் கடன் தற்போது மக்களின் தலைகளை நெரித்து வருகின்றது. போரின்போதும், அதன் பின்னரும் அப்போதைய அரசுகளால் பெற்றுக் கொண்ட இந்தப்பெரும்தொகைக்கடன்களைத் திரும்பச் செலுத்துவதென்பது தற்போதையஅரசுக்குசுலபமானதொரு விடயமாக இருக்கப் போவதில்லை. இதனால் மக்களின் தலைகள் தான் உருளப்போகின்றன.

இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இனங்கள் மத்தியில் இனவாதப் போக்குத்தான்முக்கியஇடத்தைவகித்து வருகின்றது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அரசியல்வாதிகள் தம்மை இனவாதிகளாகவே மாற்றிக்கொண்டுவிட்டனர். பெரும்பான்மையின மக்களும் இனவாதத்தை ஆதரிக்கத் தொடங்கியதால் இறுதியில் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபான்மையின மக்கள் தான்.

அந்நியரின் ஆட்சியின்போது இலங்கையின் பூர்வீகக் குடிமக்களாகிய தமிழர்கள் உச்சக் கட்டச் செல்வாக்குடன் உயர்ந்த நிலையில் வைத்துக் கணிக்கப்பட்டனர். அவர்கள் கல்வியிலும், நிர்வாகத்திலும் சிறந்து விளங்கியதால் அந்நியர்களால் உயர்ந்த பதவிகளில் அமர்த்தி வைக்கப்பட்டனர். பெரும்பான்மையின மக்களால் அவர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கத்தான் முடிந்தது. இதனால் தமிழர்கள் மீது மனவெறுப்பும், தாழ்வு மனப்பான்மையும் அவர்களிடம் இயல்பாகவே காணப்பட்டன. நாடு அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெறுகின்ற நாளுக்காக அவர்கள் காத்திருந்தார்கள். இந்தியாவில்மகாத்மாகாந்தியால் நடத்தப்பட்டு வந்த சுதந்திரப் போராட்டம்வெற்றியைத்தந்து இந்தியா அந்நியரிடமிருந்து சுதந்திரத்தையும் பெற்றது. இதன்பின்னர்அந்நியர் இலங்கைக்கும் சுதந்திரத்தை வழங்கிவிட்டுத் தமது தாயகம் நோக்கிப் பயணப்பட்டனர். ஆனால் அந்நியர்கள் வழங்கிய அந்தச் சுதந்திரம் தமக்கு மட்டும்தான் உருத்தானது என்ற குறுகிய எண்ணம் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் குடியேறியதால் அவர்கள் சிறுபான்மையினத்தவர்களைத் தமது அடிமைகளாக எண்ணத் தலைப்பட்டனர். இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சரான டி.எஸ் சேனநாயக்க, படிப்பறிவு குறைந்த ஒருவராக இருந்த போதிலும் அரசியலில் சிறந்த ஒரு தலைவராக விளங்கினார். ஆனால் அவரது திறமைகள் அவர் சார்ந்திருந்த இனத்துக்கு மட்டுமே பயன்பட்டன. சிறுபான்மையின மக்களுக்குத் துன்பத்தை தந்தது.

> உண்மையான மனமாற்றம் தெற்கிலுள்ள அரசியல்வாதிகளிடையே தான் ஏற்பட வேண்டும். ஏனென்றால் எதையும் தீர்மானிக்கக் கூடியவர்கள் இவர்கள் தான். இவர்கள் மனம் வைத்தால் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதன் மூலமாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியும். உண்மையான அதிகாரப் பகிர்வின் மூலமாகவே நாடு ஒற்றுமையுடனும், பலத்துடனும் விளங்கமுடியும்.

**குடியேற்றங்கள் மூலம் கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கத் திட்டம்**

பரந்தளவு பிரதேசத்தைக் கொண்டிருந்தகிழக்கு மாகாணம் அவரது கண்களில் பட்டமை தமிழர்களின் தலைவிதியையே மாற்றிவிட்டது. பரந்த செழிப்பான பிரதேசமொன்று எமது அடிமைகளாகிய தமிழர்களால் ஆளப்படுவதா? என்ற எண்ணம் அவரது மனதில் உதித்தது. இதன் விளைவாகவே கிழக்கில் சிங்களக் குடும்பங்கள் வகை தொகையின்றிக் குடியேற்றப்பட்டன. அவர்களுக்குரிய வசதிகள் யாவும் அரசினால் தாராளமாக வழங்கப்பட்டன. குடியேற்றவாசிகள் மத்தியில் கரும்புச் செய்கை ஊக்குவிக்கப்பட்டதால் அங்கு பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் தமது நெல் வயல்களுக்குநீர் கிடைக்காது அவதியுற்றனர் தமது வாழ்வாதாரத்தை இழந்த இவர்கள் வேறு இடங்களை நாடி இடம் பெயர்ந்து செல்லவும் தலைப்பட்டனர். சுதந்திரத்துக்கு முன்னர் கிழக்கின் முதற் குடி மக்களாக விளங்கிய தமிழர்கள் இன்று மூன்றாம் தரப் பிரஜைகள் என்ற நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

வடபகுதியிலும் இவ்வாறானதொரு நிலைதான் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றது. காலப்போக்கில் வடக்கும் கிழக்கும் போன்று மாறிவிடும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.


**இன நல்லுறவுக்கான குருதிக் கொடை**

படையினர் வடபகுதியிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று தமது குருதியை கொடையாக வழங்கியுள்ளனர். அண்மையில் வடபகுதிக்கு வருகைதந்த பௌத்த துறவிகள் சிலரும் குருதிக் கொடையில் ஈடுபட்டனர். இவையெல்லாம் போற்றுதற்குரிய காரியங்களாகும். இதை மனதில் வைத்துக் கொண்டு தான் வடக்கு ஆளுநர் ஒரு கருத்தை அண்மையில் வெளியிட்டிருக்கின்றார்.

இன்று தமிழர்களின் குதியோடு படையினர் மற்றும் பௌத்த துறவி களின் குருதியும் கலந்து ஓடுகின்றது என வடக்கு ஆளுநர் தெரிவித்தார். இதில் குறைகாண்பதற்கு எதுவுமே இல்லை. ஆனால் போர் காரணமாகத் தமிழர்கள் மண்ணில் சிந்திய குருதியையும் அவர் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைத் திரும்ப வழங்கவதற்கு எவராலாவது முடியுமா? என்பதை அவர்கூறவேண்டும். ஆற்றுநீர் கடலில் கலக்கும் போது அது தனது சுயத்தை இழந்து விடுகின்றது. பின்னர் கடல் நீர் என்றே அது கருதப்படுகின்றது.

படையினரும், பௌத்த துறவிகளும் வழங்கிய குருதிக்கும் இந்த நிலைதான் ஏற்பட்டுள்ளது. இதை ஆளுநர் புரிந்து கொண்டால் அதுவே போதுமானது.

இதைவிட உண்மையான மனமாற்றம் தெற்கிலுள்ள அரசியல்வாதிகளிடையேதான் ஏற்பட வேண்டும். ஏனென்றால் எதையும் தீர்மானிக்கக் கூடியவர்கள் இவர்கள் தான். இவர்கள் மனம் வைத்தால் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதன் மூலமாக சிறுபான்மை மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வைக் காணமுடியும். உண்மையான அதிகாரப் பகிர்வின் மூலமாகவே நாடு ஒற்றுமையுடனும், பலத்துடனும் விளங்கமுடியும். இத்தகைய சந்தர்ப்பங்களையெல்லாம் இதுவரை தவறவிட்டவர்கள் இனியாவது விழித்துக் கொண்டால் அது நாட்டுக்கு நல்லதாகவே முடியும்



## ஆசிரியருக்கான கடிதம்

### பனை வளம் காப்போம்

தால விருட்சம், கற்பக தரு எனப் பல பெயர்களில் அழைக்கப்படும். பனை வளர்ந்து பயன் தரச் சில ஆண்டுகள் எடுக்கும். ஆயினும், அதனைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய பனை மரம் பல்வேறு தேவைகளுக்காகவும் வகை தொகையின்றி பல்வேறு தரப்பினராலும் அழிக்கப் பட்டு வருவதாக செய்திகள் வருகின்றன. 48 ஆண்டுகளில் 17,500 மரங்கள் நாட்டி பங்களாதேஷில் தனி நபர் ஒருவர் பெரும் சாதனை செய்து பாராட்டுப் பெறுகின்ற இவ்வேளை, நம்மவர்கள், உள்ள மரங்களை அழித்துச் சாதனை நிலை நாட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனரோ என எண்ணத் தோன்றுகின்றது. யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, பல்கலைக்கழகக் கல்லூரி வளாகக் கட்டடப் பின்புறமாகவுள்ள இரண்டு பனை மரங்கள், என்ன காரணத்துக்காகவோ தெரியவில்லை, தலை கொய்யப்பட்டு மூளியாக்கப்பட்டுள்ளன. பதினைந்து அடி உயரம்வரை வளர்ந்து பயன்தரத் தயாராக இருந்து வேளை இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்டுள்ளது. இதேவேளை அந்தப் பகுதியில் பல அரச நிறுவனங்களிலும் சோலையாக பல மரங்கள் பேணப்படுகின்றன. அவற்றைப் பேணுபவர்கள் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்படுகின்ற அதே வேளை, பனைப் படுகொலை செய்பவர்களையும் அது குறித்து விசாரணைக்குட்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*ஊரவன்.*

### திறமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்

வலைப்பந்தாட்ட வீராங்கனை சிவலிங்கம் தர்ஜினியின் உயரத்தை நிமிர்ந்து பார்த்தது போல இன்று அவரது திறமையை, பெருமையை உலகம் வியந்து பார்க்கிறது.

தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கைத் திருநாட்டுக்கும் பெருமை சேர்த்த ஒரு விளையாட்டு வீராங்கனையாகவும் பயிற்சியாளராகவும் பன்னாட்டு ரீதியில் உயர்வு பெற்றுள்ளார்.

வீராங்கனை தர்ஜினி யாழ்ப்பாணத்தில் இருந்த நாள்களில் அவரது உயரத்தை கேலி செய்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அவரது திறமையை இலங்கை அரசின் விளையாட்டுத்துறை பயன்படுத்தத்தவறிவிட்டது. அவர் தமிழர். அதுவும் யாழ்ப்பாணத்தவர் என்பதாலோ என்னவோ இந்தப் புறக்கணிப்பு? ஆனால் ஆஸ்திரேலியா நாடு - பேதம் கடந்து தர்ஜினியை தனது நாட்டின் வலைப்பந்தாட்ட பயிற்சியாளராக ஏற்று அவருக்குச் சிறப்பளித்துள்ளது. இது போல இன்னும் பல விளையாட்டு உட்பட பலதுறை திறமைசாலிகள் எம்மவர்களில் இலைமறை காய்காக மறைந்து வாழ்கிறார்கள். அவர்கள் இனம் கண்டு பயன்படுத்த மாகாண - மத்தி அரசுகள் முன்வர வேண்டும் செய்வார்களா?

*நா. துஷாந், வரணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PEOPLE'S LEASING CO LTD.
A subsidiary of People's Bank

## பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சிக்கு வெள்ளி விருது

### சமூகப்பொறுப்புணர்வு செயற்பாடுகளின் அர்ப்பணிப்புக்குக் கௌரவம்

இலங்கையின் வங்கி சாராத நிதித்துறையின் முன்னோடியாக திகழும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி தனது சமூகப்பொறுப்புணர்வு செயற்பாடுகளின் அர்ப்பணிப்புக்காக 2016 ஆம் ஆண்டுக்கான இயன் டயஸ் அபேசிங்க ஞாபகார்த்த பேண்தகு நிலைக்கான வெள்ளி விருதைப் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, கலதாரி விடுதியில் இடம்பெற்றிருந்த 21ஆவது வருடாந்த யஸ்ரிக்கா விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் மூன்று பிரதான கொள்கைகளான மக்கள், புவி மற்றும் இலாபம் ஆகியவற்றுக்கு நிறுவனம் காண்பித்ததான அர்ப்பணிப்பைக் கௌரவித்தே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 21 வருட காலமாக நிலைபேணியலுமை மற்றும் வினைத்திறனான செயற்பாடுகளைப் பேணி வரும் நிறுவனங்களை இனங்கண்டு கௌரவிக்கும் நடவடிக்கைகளை யஸ்ரிக்கா முன்னெடுத்து வருகிறது. அத்துடன் விருதுகளுக்கான 2016 இன் மூலமாக மூன்று பிரதான பிரிவுகள் இலக்கு வைக்கப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.

# மீண்டெழும் செலவினத்தை செலுத்தும் விதமாக நாட்டின் வருமானம் அதிகரிப்பு



### அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கடந்த இரண்டு வருட காலப்பகுதி என்பது பண ஊழல், மோசடி மற்றும் வீண் விரயம் தொடர்பில் அதிகம் பேசப்பட்ட அவை குறித்தான விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆண்டுகளாக அமைந்திருந்தது என்பதான தகவலளிப்பு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பன்னாட்டு சுங்க தினத்தினை முன்னிட்டு செயற்திறன் மிகு எல்லை நிர்ணய முகாமைத்துவம் எனும் தொனிப்பொருளின் கீழாக அண்மையில் இடம்பெற்ற பன்னாட்டு சுங்கதின நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "கடந்த இரண்டு வருட காலத்தில் இந்த நாட்டு மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து நாட்டை ஒப்படைத்ததன் பின்பாக பண ஊழல், மோசடி மற்றும் வீண் விரயம் போன்ற விடயங்கள் குறித்து அதிகம் பேசப்பட்டது. ஊழல் மோசடி ஒழிப்புத் தொடர்பில் நாம் முக்கியமான ஒரு கட்டத்தில் இருக்கிறோம். இவை நாட்டின் எதிர் காலத்திற்கு சவாலாக அல்லது பெரிய பிரச்சினையாக அமையும். இது குறித்து அனைத்து தரப்பினரும் கலந்துரையாட வேண்டும். நாட்டை நாம் பொறுப்பேற்கும் போது மீண்டெழும் செலவினத்தைக்கூட ஈடு செய்வதற்கு கூட வருமானம் போதாமல் குறைவாக இருந்தது.

எனினும் முதற்தடவையாக மீண்டெழும் செலவினத்தை செலுத்தக்கூடிய அளவிற்கு எமது வருமானம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றைய காலகட்டத்தில எமக்கு ஆயிரத்து 352 பில்லியன் வருமானம் கிடைத்தால் ஆயிரத்து 500 பில்லியன் ரூபாவை கடனாக செலுத்த வேண்டியிருந்தது. தவிர ஆயிரம் ரூபாவை செலவு செய்ய 10 ஆயிரம் ரூபாவை கடன் தொகையாகப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்தக் காரணங்கள் மக்களை பாதித்துள்ளது. அப்பாவி மக்களே தற்போது கடனை செலுத்துகின்றனர்" - என்றார்.



# நவீன 1000 சிசி தர டொயோட்டா விகோ வாகனம் சந்தைக்கு

### டொயோட்டா லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் அறிமுகப்படுத்தியது

இலங்கையில் டொயோட்டா வாகனங்களுக்கான ஏக விநியோகஸ்தர்காளக திகழும் டொயோட்டா லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது தமது நவீன 1000 சிசி தர டொயோட்டா 'விகோ' வாகனத்தை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளதான தகவலை வெளிப்படுத்தியள்ளது.

'விகோ' வாகனமானது இலங்கையில் டொயோட்டா லங்கா நிறுவனத்தின் முதலாவது சந்தை அறிமுகமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவை உயர்தரத்தினை கொண்டமைந்த வகையிலே வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் கட்டுப்படியான, சௌகரியமான மற்றும் பாதுகாப்பான சந்தை தேவைக் குரித்தான வகையிலே நவீன குடும்பம் மற்றும் இளைய நிர்வாக சமுதாயத்தினரை இலக்காக கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

> "இலங்கையில் பிரத்தியேகமாக டொயோட்டா 'விகோ' வாகனமானது 3 வருட காலத்திற்கு ஒரு இலட்சம் கிலோ மீற்றர்கள் பயணப்படல் உத்தரவாதத்துடன் விற்பனை செய்யப்படுகிறது. இவ் வாகனத்தை கொள்வனவுச் செயற்பாட்டில் ஈடுபடும் வாடிக்கையாளர்கள் உலகளாவிய தர நிர்ணயமுடையதான விற்பனைக்கு பிந்திய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்."

இது குறித்து கருத்துரைத்துள்ள டொயோட்டா லங்கா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சுங்கோ யோக்கோ, "இலங்கையில் தங்களது முதலாவது காரைக் கொள்வனவு செய்யும் நபர் ஒருவருக்கு விகோ வாகனமானது பாதுகாப்பு, சௌகரியம் மற்றும் கொள்வனவு செய்யக்கூடியதான விலை நிர்ணயத்தை வழங்கவுள்ளது. அதேவேளை டொயோட்டாவின் உலகளாவிய வாடிக்கையாளர் சேவை தரத்தினுடனான அதி உயர் விற்பனையின் பின்பான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்" - என்றார்.

மேலும் 'விகோ' வாகனமானது நேர்த்தியான வெளிப்புற வடிவமைப்புடன் ஒருங்கிணைந்த உயர் ஏற்ற நிறுத்த விளக்குடனான ஸ்பாய்லா மற்றும் காரிற்கான கவர்ச்சியை வழங்கும் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ் வாகனமானது சிறியதான போதிலும் புதிய அல்லது அனுபவமிக்க சாரதிகளுக்குரித்தான இலகு சாரத்திய வாகனமாக அமையப்பெற்றள்ளது. இவை பின் இருக்கை பயணிகளிற்கு போதுமான அளவு கால்களை நீட்டும் வசதியை வழங்குவதுடன் அதிக பயண பொதிகளை உள்ளடக்கக்கூடிய பின்புறக் களஞ்சியப் பிரிவையும் கொண்டுள்ளது. அதிக எரிபொருள் இயங்குதிறன் உத்தரவாதம் கொண்ட ஒரு லீற்றர் லைன் 3 சிலிண்டர் இன்லைன் டி.ஓ.எச்.சி இயந்திர சக்தியில் இயங்குவதுடன் 4 இன்கு வேகதானியங்கு டிரான்ஸ்மிசனையும் கொண்டுள்ளது.


# வாகனக் கொள்வனவில் புதிய குத்தகை முறைமைகள் நடைமுறைக்கு

### ஆரம்பக் கட்டணச் செலுத்துகை வீதங்களில் அதிக மாற்றங்கள்

2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நடைமுறைப்படுத்தலில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்த வாகனக்கொள்வனவு தொடர்பிலான புதிய குத்தகை நடைமுறைமைகள் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி புதிய வாகன்ங்களின் கொள்வனவுச் செயற்பாட்டின் போது இதுவரைகாலமும் இருந்துவந்த ஆரம்ப கட்டணச் செலுத்துகை வீதங்களில் அதிக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> 2017 ஆம் ஆண்டுக்குரித்தானதாக நிறை வேற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கு அமைவாக குத்தகை முறை மையின் கீழாக மேற்கொள்ளப்படும் வாகன கொள்வனவுக்கான புதிய நடைமுறைகள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன.



குறிப்பாக குத்தகை அடிப்படையிலே முச்சக்கர வண்டியை வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்யும் போது அவர்கள் ஆரம்பக் கட்டணமாக 25 சதவீதத்தை செலுத்த வேண்டிய நடைமுறைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டிகள் தொடர்பிலான ஒழுங்குபடுத்தல் செயன்முறைகளுக்கான நடைமுறையொன்று அவசியம் என்பதான நிபுணர் குழுவின் சுட்டிக்காட்டலுக்கு அமைவாக இதுவரை காலமும் செலுத்த வேண்டிய மொத்த பணச் செலவினத்தின் 10 வீதத்தை முச்சக்கர வண்டியின் கொள்வனவுச் செயற்பாட்டின் போது ஆரம்பக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்ற சந்தர்ப்பம் தற்போது மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவைதவிர கார் மற்றும் வான் போன்றவற்றின் கொள்வனவு செயற்பாட்டின் போது 50 வீதத்தையும் லொறி உள்ளிட்ட கனரக வாகனங்களின் கொள்வனவு செயற்பாட்டின் போது 90 வீதத்தையும் ஆரம்பக் கட்டணமாக செலுத்த வேண்டிய தேவைப்பாடு கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சு வெளிப்படுத்தியுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

10/7/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 20.74 | 6,758.24 | 6,737.50 |
| S&P SL20 | -4.62 | 3,904.32 | 3,908.94 |
| வியாபாரப்புரள்வு | | 427,861,696 | 937,434,620 |
| உள்நாடு:- கொள்வனவு | | 300,410,464 | 383,960,960 |
| விற்பனை | | 401,502,976 | 563,949,060 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 127,451,256 | 553,473,660 |
| விற்பனை | | 26,358,742 | 373,485,568 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| றிச்சட் பிரிஸ் அன் கம்பனி | RICH.N | 13.00 | 6,994,905 | 90,507,132 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 178.10 | 247,203 | 44,077,219 |
| லங்கா செஞ்சறி இன்வெஸ்மென் | GREG.N | 14.30 | 2,216,384 | 31,493,769 |
| டன்கொட்டுவ போசலன் | DPL.N | 10.00 | 2,433,287 | 24,559,377 |
| இலங்கை கொமரஷல் வங்கி - | COMB.N | 139.90 | 132,823 | 18,568,050 |
| சிலோன் இன்வெஸ்மன் | CINV.N | 59.00 | 282,021 | 15,792,251 |
| சிலோன் காடியன் இன்வெஸ்மென் | GUAR.N | 112.50 | 92,401 | 10,699,126 |
| mlk; ,d;nt];nkd; | AINV.N | 0.60 | 16,035,457 | 10,093,329 |
| சிலோன் டுபாக்கோ | CTC.N | 955.10 | 10,019 | 9,568,147 |
| பிறவுன் இன்வெஸ்மென் | BIL.N | 3.40 | 2,443,115 | 8,326,749 |

- பங்குலாபம் -


ஏசியன் அசற் பைனான்ஸ் - ரூபா 0:07 சதம்
பிம்புத்து [illegible] - ரூபா 1:00
டோக்கியோ சிமேன் - ரூபா. 1:87

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| [illegible] | 241 |
| விலை உயர்வு | 11.5 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விலை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவிலூர் கலா

# உணவே மருந்து



எமது சமூகம் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. சீரான உணவுப் பழக்கமும், உடற்பயிற்சியும் நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியத்தைத் தக்கவைத்து நீண்ட ஆயுளை எமக்குத் தருகின்றன. இன்று நாம் பலவித தொற்றும் தொற்றாத நோய்களுக்கு ஆளாகி அல்லற்படுகிறோம் முப்பது வயதானாலே மருந்துகள் நம்மைப் பாதுகாக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம். ஆனாலும் கவர்ச்சிகரமான உணவுகளை உண்டு ஆடம்பரமாக வாழ்வதையே நாம் பெரிதும் விரும்புகிறோம்.

நமக்கு முன் இருக்கின்ற உணவு சரியானதா? ஆரோக்கியமானதா? சமவிகித உணவா? நோய்களை உருவாக்க காரணமாகுமா? இவ்வுணவுகளால் தேவையற்ற அழுக்குகள் நம் உடலில் சேருமா? சமூகத்துக்கு கேடாகுமா? என யாருமே சிந்திப்பதில்லை. நம் முன்னோரின் உணவுப் பழக்கமானது ஆரோக்கியமாக நீண்டகாலம் அவர்களை வாழ வழி சமைத்தது. சாமை குரக்கன், வரகு போன்ற தானியங்களை இன்றைய சிறுவர்களுக்கு தெரியாது. அதே சிறுவர்கள் அவற்றை தாம் வளர்க்கும் புறாக்களுக்கு உணவாக வாங்குகின்றனர். இது காலத்தின் கொடுமையல்லவா?

**முன்னோரின் உணவுகள்**

நம் முன்னோரின் உணவுப்பழக்கங்கள் நம்முன் இருக்க நாகரிக உணவுகளைத் தேடி அலைகிறோம் வட இந்தியாவின் கடற்கரை யோரத்தில் குடியிருந்த மக்கள் மிக நீண்ட காலம் உயிர் வாழ்ந்தனர் எனக் கூறப்படுகிறது. அவர்களது உணவாக வேட்டையாடிய மிருகங்களின் இறைச்சியும், தாவர உணவுகளும் அமைந்திருந்தது. உணவெனப்படுவது நிலத்தோடு நீரே... என்கிறது புறநானூறு எனவே நிலமும் நீரும் சுத்தமாக இருக்க வேண்டியதும். அவற்றினால் உருவாகும் உணவுகளுமே ஆரோக்கியமானது. எம் நடைமுறை வாழ்வில் பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுகளுக்கு முதலிடம் கிடைக்கிறது. கவர்ச்சிகரமான பைக்கற்றுகளில் மனதை கொள்ளை கொள்ளும் விளம்பரங்களில் விற்பனை யாகும் உணவுப் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி உண்கிறோம். அதுவே மதிப்பார்ந்த கௌரவமாக கருதுகிறோம்.


பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுகளை நாம் நோக்கின் பலவித தொழில்நுட்பங்களுக்குள்ளாகி மிகக் கூடுதலான வெப்பத்தை தாங்கி இரசாயனக் கலவைகள் சேர்க்கப்பட்டு பதப்படுத்தப்படுகிறது. உணவின் போசணைச் சத்துக்கள் நீரினால் காற்றால் வெப்பத்தால் மிக மிக விரைவில் அழிந்து விடும் தன்மையுடையன. இவ்வாறு பல படிமுறைகளைத் தாண்டி பொதியில் அடைக்கப்படும் உணவுகளில் நாம் எதிர்பார்க்கின்ற உடலுக்குத் தேவையான சத்துக்கள் ஏதாவது கிடைக்குமா? என்பதை சிந்திக்க வேண்டியது எமது கடமை. அது மட்டுமல்ல உணவை எடுத்துக் கொண்டபின் வெற்றுப் பொதிகளை மண்ணிலே வீசி விடுகிறோம். அவை உக்கல்நிலை அடைய பல வருடங்கள் ஆகின்றன. அவற்றை எரித்து அழிக்க முற்படும் போது வெளிவரும் வாயு எம்மை மட்டுமல்ல எம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் வளிக்கும் நஞ்சாக மாறுகின்றது.


**குதிரைக்கான உணவு**

ஓட்ஸ் என்னும் தானிய உணவுக்கான விளம்பரம் நம்மவரை அவற்றை நுகர வைக்கின்றது. ஓட்ஸ்ட் மேலை நாடுகளில் குதிரைக்கு உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஓட்ஸை விட தரமான சத்துக்கள் மிகச் செறிந்துள்ள தானியங்கள் நம்மிடம் உண்டு. அவற்றை நாம் ஓரங்கட்டிவிட்டு விளம்பரத்துக்க அடிமையாகி பணத்தை விரயம் செய்து நவீனத்துக்குள் பிரவேசிக்கிறோம். இதனால் எமது ஆரோக்கியம் காவு கொள்ளப்படுகிறது. பழங்களில் கூட மேலை நாட்டுப் பழங்களையே நாம் விரும்பி உண்கிறோம். எமது நாட்டில் கிடைக்கின்ற வாழைப்பழம், மாம்பழம், பப்பாசி, தோடை, எலுமிச்சை, தக்காளி என்பன போதியளவு நீர்ச்சத்தும் உயிர்ச்சத்துக்களும் கொண்டவையாக உள்ளன. போத்தல்களில் அடைக்கப்பட்ட மென்பானங்களை அதிக விலை கொடுத்து வழங்குவதை விட குறைந்த செலவில் நிறைந்த சத்துக்களை கொண்ட எமது நாட்டுப் பழங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் பழச்சாறு உடல் நலத்தை மேம்படுத்தும்.

**மூன்று வேளையும் அதிக மருந்துகள்**

சிலர் ஓயாது நோய்களையே சொல்லிக் கொண்டிருப்பார்கள். மூன்று வேளையும் கொத்துக் கொத்தாக மாத்திரைகளை உட்கொள்வர். வைத்தியசாலைகளில் கிளினிக் வாங்கில் வரிசையில் முண்டியடிப்பர். இவையெல்லாம் ஏன்? முதலில் உணவை மருந்தாகக் கொள்ள வேண்டும். மருந்து பாவிக்க வேண்டிய முக்கிய தருணங்களில் விபத்து , பிரசவம், வயோதிபநிலை நோய்கள் கட்டாயமாக மருந்துகளை உட்கொள்ளலாம். நோய்க்கிடங்கொடேல் என்கிற ஔவை மொழிக்கேற்ப நோயை வெறுத்து ஒறுத்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட வயதின் பின்னர் நோய்தான் வாழ்க்கை என விரக்தியில் வாழும் ஏராளமானோரை இன்று எம் சமூகம் கொண்டுள்ளது. காரணம் தப்பானவற்றை தவறானவற்றை வாழ்க்கைக்கு ஒவ்வாத பலவற்றை ஆதாரமாக்கி அவையே கௌரவம் என வாழும் நிலைக்கு நாம் ஆளாகி விட்டோம் என்கிற கசப்பான உண்மையை யாவரும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.





பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வாழ்ந்த மனிதன் இன்று பணத்துக்காக வாழத் தொடங்கியதால் எதிலும் பணத்தையே முதன்மைப்படுத்துகிறான். விவசாயி குறுகிய காலத்தில் அதிக விளைச்சலை பெறுவதற்காக வீரியம் கொண்ட கிருமி நாசினிகள் உரங்கள் என்பவற்றை விளைச்சலுக்கு பயன்படுத்துகிறான். வியாபாரிகள் பழங்களை பழுக்க வைக்க மருந்துகளை பயன்படுத்துகின்றனர். முன்னர் வேப்பிலையிலும் வைக்கோலிலும் பழுத்த பழங்கள் மருந்து விசிறல் மூலம் பழுக்கின்றன. இவையெல்லாம் புற்றுநோயை தோற்றுவிக்க காரணமாகின்றன. டி.டி.ரி என்கிற எறும்பு கொல்லியே பிரிகையடைவதில்லை. கிருமி நாசினிகள் மனித உள்ளுறுப்புகளை எப்படி சிதைக்கும் என்பத்தை சிந்திக்க நாம் மறக்கலாமா?

சூப்கள் விற்பனை செய்கிற உணவுவிடுதிகள் ஆங்காங்கு முளைத்துள்ளன. வகையான சூப்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. நம்பண்பாட்டில் உள்ள ஒடியற்கூழ் மரவள்ளிக் கூழ், கடலுணவுக்கூழ் என்பனவே சில நிறமூட்டிகள் சுவையூட்டிகளின் கலப்படத்தில் சூப் என பெயர் பெறுகின்றன.

இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். நமது பிரதேசம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஏற்ற அத்தனை வளங்களும் கொண்டதாக உள்ளதை முதலில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். சுத்தமான சுவையான நீர் பச்சை இலைவகை காய்கறிகள் பழங்கள் என்பன உடனடியாக தாராளமாகக் கிடைக்கின்றன. வேலிகளில் படர்கின்ற பச்சைக் கொடிகள் தரும் ஆரோக்கியத்தை பைக்கற் உணவுகள் தருவதில்லை. வேலிகள் மதில்களாக மாறிவிட்டன. தாவரங்கள் கொடிகள் வளர்ச்சிக்கு வீட்டின் ஓரங்களை மரங்களை நாட்டிச் செப்பனிட்டு தாவரங்களை வளர்த்து உணவுக்குப் பயன்படுத்துவது சிறந்தது.

ஆக மனிதா ஆரோக்கியம் விளம்பரங்களால் காவு கொள்ளப்படுவதா? நீரிழிவு புற்றுநோய் மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் என்னும் நோய்கள் சமுதாயத்தில் இருந்து விரட்டி பழக்க இன்றே இந்த நிமிடமும் உன் ஆரோக்கியத்தைத் தக்க வைத்துக்கொள். சட்டைப்பைகளில் அழகாக சுற்றி வைத்திருக்கும் மாத்திரைப்பொட்டலங்களை உன்னை விட்டு மட்டுமல்ல சமூகத்தை விட்டும் தூர வீசி யெறி. சத்துணவுகளைத் தேடி உண்டு ஆரோக்கியத்தோடு வாழ முனைந்திடு. நோய்களாலும் ஆரோக்கியமின்மையாலும் பொலிவிழந்து நிற்கும் எம் சமூகம் போசாக்கினால் உருண்டு திரண்டு வாழ இன்றே உன்னை நீ செப்பனிட்டு ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பு. அதுவே மனிதம் வாழும் கோயில் உணர்வாயா? திருந்துவாயா?

மனிதர்களின் ஆரோக்கியம் விளம்பரங்களால் காவு கொள்ளப்படுவதா? நீரிழிவு, புற்று நோய் மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் ஆகிய நோய்கள் சமுதாயத்தில் இருந்து விரட்டியடிக்கப்படுவதற்கு இன்றே, இந்த நிமிடமும் உன் ஆரோக்கியத்தைத் தக்க வைத்துக்கொள். சட்டைப்பைகளில் அழகாகச் சுற்றி வைத்திருக்கும் மாத்திரைப்பொட்டலங்களை உன்னை விட்டு மட்டுமல்ல சமூகத்தை விட்டும் தூர வீசியெறி. சத்துணவுகளைத் தேடி உண்டு ஆரோக்கியத்தோடு வாழ முனைந்திடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




## மகரம்

உத்திராடம் 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

அதர்மங்களை எதிர்த்து நிற்பவர்களே! உங்களுக்கு இந்த மாதம் 27 ஆம் திகதி முதல் 13.2.19 வரை, ராகு ஏழிலும் கேது ராசியிலும் அமர்ந்து பலன் தரப் போகிறார்கள்.

**ராகுவின் பலன்கள்:** ராகு பகவான் ராசிக்கு ஏழாம் வீட்டில் வந்து அமர்வதால், உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உற்சாகம் கூடும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். முக்கியஸ்தர்களின் நட்பால் சில விடயங்களைச் சாதிப்பீர்கள். எனினும், களஸ்திர ஸ்தானமான 7ஆம் வீட்டில் ராகு அமர்வதால் கணவன் மனைவிக்கு இடையே பரஸ்பரம் விட்டுக்கொடுத்துப் போகவும். மனைவியின் உடல்நலனில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்துகளைப் பராமரிப்பீர்கள். வயதில் குறைந்தவர்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். மறதியால் பொருள் இழப்பு நேரிடும்.

உங்களின் பாக்யாதிபதியான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் இந்த மாதம் 27ஆம் திகதி முதல் 4.4.18 வரை ராகு பகவான் செல்வதால், இந்தக் காலக்கட்டங்களில் தந்தையாரின் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வீடு, மனை வாங்குவீர்கள். திடீர் பயணங்களால் அனுகூலம் உண்டாகும். செல்வாக்குக் கூடும். 5.4.18 முதல் 10.12.18 வரை ராகு பகவான் உங்களின் ராசிநாதனும், தனாதிபதியுமான சனி பகவானின் பூசம் நட்சத்திரத்தில் செல்வதால், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வழக்கு சாதகமாகும். அரசால் ஆதாயம் உண்டு. நிர்வாகத் திறமைக் கூடும். உங்களின் [illegible]யஸ்தானாதிபதியும், விரயாதிபதியு மான குரு பகவானின் புனர்பூசம் நட்சத்திரம் 4ஆம் பாதம் கடக ராசியில் 11.12.18 முதல் 13.2.19 முடிய ராகு பயணிப்பதால் புது முயற்சிகள் பலிதமாகும். இளைய சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முழுக்கவனம் செலுத்த வேண்டும். பெண்களுக்குத் திருமணப் பேச்சுவார்த்தையில் தாமதம் ஏற்படும். கலைத் துறையினரே! சம்பள விடயத்தில் இறுக்கமாக இருங்கள். சின்னச்சின்ன வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் இலாபம் மந்தமாக இருக்கும். இயன்ற வரையிலும் கூட்டுத் தொழிலைத் தவிர்க்கவும். கடையை மாற்றுவதில் அவசரம் வேண்டாம். உத்தியோகத்தில் உங்களின் கருத்துகளை மேலதிகாரியிடம் பதிவு செய்யவும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுமுன் படித்துப் பாருங்கள்.

**கேதுவின் பலன்கள்:** கேது பகவான் உங்கள் ராசியிலேயே வந்து அமர்வதால், இனிய பேச்சால் காரியம் சாதிப்பீர்கள். எனினும் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. எவருக்காகவும் பிணைக் கையெழுத்திட வேண்டாம். வெளியூர் பயணங்களில் பாதுகாப்பு முக்கியம். ஆவணங்களைப் பத்திரப் படுத்துங்கள். இரவுப் பயணங்களைத் தவிர்க்கவும். 27.7.17 முதல் 29.11.17 வரை உங்களின் சுக லாபாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரம் 1, 2ஆம் பாதம், உங்கள் ராசியிலேயே கேது பகவான் செல்வதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாருடன் கருத்து மோதல்கள், மூத்த சகோதரர் வகையில் அலைச்சல்கள் வந்து போகும். வீடு வாங்கும்போது கவனம் தேவை. உங்களின் சப்தமாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது செல்வதால் மனைவிவழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். புது நகை வாங்குவீர்கள். அரசாங்க அதிகாரிகளின் ஆதரவு உண்டு. பங்குதாரர்களை அனுசரித்துச் செல்லவும். இக்காலக் கட்டத்தில் திருவோணம் நட்சத்திரக்காரர்கள் ஆரோக்கியத்தில் அக்கறைக் காட்டுவது நல்லது. 7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் பூர்வ புண்ணியாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ஆம் பாதம். மகர ராசியில் கேது செல்வதால் திட்டமிட்ட காரியங்கள் தாமதமாகும். குடும்பத்தில் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். ஆரோக்கியக் குறைவு ஏற்படும். மற்றவர்களுக்காக பிணையில் கையெழுத்திட வேண்டாம். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் அதிகமாகும். வேலையாள்களின் பொறுப்பின்மையை நினைத்து வருந்துவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். உரிமையை தக்கவைத்துக்கொள்ள நீதிமன்றம் செல்ல வேண்டிவரும். மொத்தத்தில் இந்த ராகு கேது பெயர்ச்சி, ஆன்மிகப் பலத்தால் உங்களுக்கு நிம்மதியை அளிப்பதாக அமையும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

- 472-மேற்கு உரோமப் பேரரசர் அந்திமியஸ் அவரது சொந்த ஜெனரல்களால் சிறைப்பிடிக்கப்பட்டு சென். பீற்றர்ஸ் பசிலிகாவில் சாவுத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.
- 1174 -நாலாம் போல்ட்வின், ஜெருசலேமின் அரசரானார்.
- 1740-லிற்றில் ரஷ்யாவிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1848 -லண்டனில் வோட்டர் லூ ரயில் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
- 1882-ஆங்கில எகிப்தியப் போரின் ஒரு பகுதியாக, பிரித்தானிய மெடிற்றோனியன கடற்படைக் கலங்களால் எகிப்திய அலெக்ஸாண்டரியா குண்டுத்தாக்குதல்களுக்கு உள்ளானது.
- 1895-சலனப்பட தொழில் நுட்பம் பற்றி விஞ்ஞானிகளுக்கு அகஸ்ரி மற்றும் லூயிஸ் சகோதரர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.
- 1921 -ஜரிஸ் சுதந்திரத்துக்கான போராட்டத்தின் போது போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.
- 1921 -அமெரிக்க முன்னாள் அரச தலைவர் வில்லியம் ஹவாட் ராப்ட் அமெரிக்க சுப்ரீம் நீதிமன்றத்தின் பத்தாவது பிரதம நீதியரசராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இரண்டு பதவிகளையும் அலங்கரித்த ஒரேயொருவர் இவர் மட்டுமே.
- 1947-உயிர் தப்பிப்பிழைத்த பெருமளவு யூதர்களைச்சுமந்தவண்ணம், பிரான்சிலிருந்து பலஸ்தீனம் நோக்கி எக்சோடஸ் 1947 கப்பல் புறப்பட்டது
- 1950-பாகிஸ்தான் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் பன்னாட்டு வங்கியில் இணைந்து கொண்டது.
- 1960-கொங்கோ ஜனநாயகக் குடியரசிலிருந்து கடங்கா மாநிலம் பிரிந்து சென்றது
- 1962-கண்டங்களுக்கிடையேயான முதலாவது தொலைக்காட்சி, உபகிரகமொன்றின் (சற்றலைற்) ஊடாக ஒளிபரப்பப்பட்டது.
- 1971-சிலியிலுள்ள செப்புச் சுரங்கங்கள் தேசிய உடமையாக்கப்பட்டன.
- 1973-பிரான்ஸ் பரிஸ் ஓர்லி வானூர்தி நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளை, வேரிங் வானூர்தி சேவை வானூர்தி 620 விபத்துக்குள்ளாகியதில் அதிலிருந்த 134 பேரில் 123 பேர் உயிரிழந்தனர்.

**நாளை**

**ஆனி - 28**
புதன்கிழமை -12.07.2017
திதி:திருதியை பி.ப.01.09 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.10.17 வரை
சுபநேரம்:04.29-05.59 வரை
ராகுகாலம்:11.59-01.29 வரை
சங்கடஹர சதுர்த்தி

# மோசூல் நகர மீட்பு வரலாற்றுச் சாதனையே

ஈராக் நாட்டின் இரண்டாவது பெரியதும், முதலாவது முக்கியத்துவம் பெற்ற மோசூல் ஐ.எஸ் ஆயுததாரிகளிடம் இருந்து மீட்கப்பட்டமை ஒரு வரலாற்றுச் சாதனை என்று கூற வேண்டும். ஐந்து வருடங்களாக இடம்பெற்ற போராட்டத்தின் பின்னரே இதனைச் சாதிக்க முடிந்துள்ளது. ஐ.எஸ்.ஆயுததாரிகள் பெருமளவு பொது மக்களைப் பிடித்து வைத்து மனித கேடயங்களாகப் பயன்படுத்தி வந்ததால் இந்த நகரத்தை மீட்டெடுப்பதில் அதிக சிரமமும், காலதாமதமும் ஏற்பட்டுள்ளன.

ஐ.எஸ் ஆயுததாரிகள் சிரியா மற்றும் ஈராக்கின் ஒருபகுதி நிலப்பரப்பை ஆக்கிரமித்து இஸ்லாமிய தேசம் என்ற பெயரில் தனி நாடு ஒன்றை உருவாக்கித் தமது பயங்கரவாதச் செயல்களை அரங்கேற்றி வந்தனர். இவர்கள் தமக்குப் பிடிக்காதவர்களைக் கொலை செய்வதற்குக் கடைப்பிடித்த வழிமுறைகள் மிகக் கொடியன. மனித சமுதாயத்தால் ஏற்க முடியாதன. இவர்களின் கொடூரமான நடவடிக்கை காரணமாகப் பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து மேற்குலக நாடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர். ஆனால் ஐ.எஸ். ஆயுததாரிகள் அங்கும் அவர்களை நிம்மதியாக வாழவிடவில்லை. பயங்கரவாதத் தாக்குதல்களை அந்த நாடுகளிலும் மேற்கொண்டனர். இதனால் அந்த நாடுகளில் அகதிகள் மீது வெறுப்புணர்வு அதிகமானது. அவர்கள் மீது இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில் மோசூல் நகரம் ஐ.எஸ்ஸின் பிடியிலிருந்து மீட்கப்பட்டமை அந்த அமைப்பின் அத்திபாரத்தையே ஆட்டம் காண வைத்துவிட்டது. தற்கொலைக் குண்டுதாரிகளாக மாறுவதற்குத் தயார் நிலையில் நின்ற சுமார் 200 ஆயுததாரிகள் கொல்லப்பட்டமை பன்னாட்டுப் படைகளுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். ஐ.எஸ். ஆயுததாரிகளால் பெருமளவு மக்கள் பணயமாக வைக்கப்பட்டிருந்ததால் மோசூல் நகரின் ஒரு மீற்றர் நீளமான தூரத்தை மீட்பதற்கு ஒரு மணித்தியாலம் எடுத்ததாகக் கூறப்படுகின்றது. மேலும் மோதல் காரணமாக இங்கு 80 ஆயிரம் வீடுகள் அழிவடைந்துள்ளன. சுமார் 700 வர்த்தக நிலையங்கள் நாசமடைந்துள்ளன. மீட்டெடுக்கப்பட்ட மக்களின் உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் சுமார் 20 ஆயிரம்கோடி ரூபாவும், மோசூல் நகரைத் திரும்பவும் கட்டியெழுப்புவதற்கு ஐந்து இலட்சம் கோடி ரூபாவும் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெரிய அளவிலான நிதியைத் தேடுவது இலகுவான காரியமல்ல. ஐ.எஸ். போன்ற ஆயுதக் குழுக்களை களையெடுக்க வேண்டியது உலக நாடுகளின் முக்கிய கடமையாகும். உலகத்தின் எந்த மூலையிலும் தீவிரவாதிகள் நடமாடுவதை அனுமதிக்கக் கூடாது மக்கள் அமைதியான வாழ்வுக்காகவே ஏங்கி நிற்கின்றனர். இதைக் குழப்புவதற்கு எவருக்குமே உரிமை கிடையாது. ஐ.எஸ்ஸின் இறுதித் தருணம் நெருங்கிவிட்டது. அவர்களது ஆட்டம் விரைவில் முடிவுக்கு வந்துவிடும். அப்போது முழு உலகும் குதூகலித்து மகிழும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினிமா உலகில் போட்டி அதிகம்

## தமன்னா சொல்கிறார்

சினிமாவில் போட்டி அதிகமாகி விட்டது என்று நடிகை தமன்னா தெரிவித்துள்ளார்.

சினிமா என்பது கவர்ச்சி உலகம். இங்கு நடிகைகளை ரசிகர்கள் அழகு, கவர்ச்சியில் பார்க்கவே ஆசைப்படுகிறார்கள் என்று சிலர்பேசுகின்றனர். அழகு, கவர்ச்சியை மட்டும் வைத்து சினிமாவில் சாதித்து விட முடியாது. திறமை வேண்டும். காதல் காட்சிகளில் வந்து போவது மட்டும் நடிப்பு இல்லை. அதையும் தாண்டி தனித்தன்மையான நடிப்பால் ரசிகர்கள் மனதில் இடம்பிடிப்பவர்களால் மட்டுமே திரையுலகில் நீடிக்க முடியும். நான் 10 வருடங்களுக்கு மேல் சினிமாவில் இருக்கிறேன். திறமையான நடிகை என்று பெயர் வாங்கியிருக்கிறேன். நல்ல கதைகள் எனக்கு அமைந்ததால்தான் எனது திறமையை வெளிப்படுத்த முடிந்தது. பாராட்டு, புகழ் கிடைக்கும்போது சில நடிகைகளுக்கு தலைக்கனம் வந்துவிடுகிறது. அப்படிபட்டவர்கள் சில நாட்களிலேயே ஓரம் கட்டப்பட்டு விடுவார்கள். தினமும் காலையில் படுக்கையில் இருந்து எழும்போது நான் யார்? பணம் புகழ் எல்லாம் என்ன? என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டு சிறிது நேரம் தியான நிலையில் இருப்பேன். அப்போது இவையெல்லாம் நிரந்தரம் இல்லை என்ற எண்ணம் எனக்குள் ஏற்படும். அதை உணர்ந்ததால்தான் படங்கள் வெற்றி பெற்று பாராட்டுகள் குவியும்போது தலைக்கனம் வராமல் இருக்கிறது. ஒவ்வொருவரும் நீங்கள் யார் என்பதை உங்களுக்குள்ளேயே கேளுங்கள். வாழ்க்கை என்ன என்பது புரியும். இதற்காக எவரிடமும் பயிற்சி எடுக்கத் தேவை இல்லை. சினிமாவில் போட்டி அதிகமாகி விட்டது. இங்கு திறமையான புதிய நடிகைகள் நிறையபேர் தினமும் வந்து கொண்டு இருக்கிறார்கள். திறமையை வளர்த்துக்கொள்பவர்கள் மட்டும் தாக்குப்பிடித்து நிற்கிறார்கள்.' என தமன்னா மேலும் தெரிவித்தார்.

**எனக்கொரு டவுட்டு**

இருப்பதை வைத்து வாழ்பவரே இவ்வுலகில் நிரந்தரப் பணக்காரர்.

2 12 9

**குரு பாக்க கோடி நன்மைனு சொல்றாங்க...**



**பிறந்து இத்தன வருசம் ஆச்சு இன்னும் நம்மள பாத்த பாடில்லை... ஒருவேளை நாம பிறந்ததே அவருக்கு தெரியாமப் போயிருக்குமோ...?**

**தன் ஒருத்திக்கு மட்டும் தான் சமைக்க வேண்டுமெனில்...**



**பசியே எடுப்பதில்லை பெண்களுக்கு... ஆய்வில் தகவல்...**

**பசங்களுக்கு மேளங்கொட்டி கல்யாணம் நடக்குதோ இல்லையோ...**



**தலைமுடி கொட்டினதுக்கப்புறம் தான் கல்யாணம் நடக்குது...**

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 9 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 9 | 7 | 4 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**மேடம்:** பேச்சிலும், செயலிலும் திறமை வெளிப்படும். எதிரி இடம்மாறிப் போகிற சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** மனதில் இனம் புரியாத தயக்கம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம் கவனம். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். வீட்டுச் செலவுக்கு சேமிப்பைக் கரைப்பர்.

**கடகம்:** பொதுநல நோக்குடன் செயற்படுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறும். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**சிங்கம்:** சுய நலம் கருதாமல் செயற்படுவீர்கள். அவமதித்துப் பேசியவரும் அன்பு பாராட்டி வருவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு விலகும். இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு இஷ்டதெய்வ வழிபாடு நிறைவேறும்.

**கன்னி:** உங்களின் நியாயமான பேச்சை சிலர் ஏற்கத் தயங்குவர். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமார். இரவலாக நகை, பணம் கொடுக்க வாங்க வேண்டாம்.

**துலாம்:** திட்டமிட்டுச் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தெய்வ அருள் பலம் துணை நிற்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக பயணம் மேற்கொள்வர். பெண்களுக்கு உடல்நலனில் அக்கறை தேவை. சுப விடயத்தில் தாமதம் உண்டாகும்.

**மகரம்:** வாழ்வில் இனிய அனுபவம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** குடும்பத்தினரின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**மீனம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இட, பணிமாற்றம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் நாடு காத்த தனயன்

ஐரோப்பாக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் சமுத்திரப் பக்கமாக ஒல்லாந்து என்னும் சிறிய தேசம் இருக்கிறது. இது குன்றுகளற்ற சம பூமி. இந்த நாட்டின் சில பகுதிகள் கடல் மட்டத்திலும் பார்க்கத் தாழ்ந்திருக்கின்றன. இதனால் கடல் நீர் நாட்டுக்குள் புகுந்து விடாமல் ஒல்லாந்தர் கடற்கரையில் பலம் வாய்ந்த அணையைக் கட்டியுள்ளார்கள். அப்படியிருந்தும் சில சமயம் கடல் கொந்தளிக்கும் போது அணை தாக்கப்பட்டு உடைப்பெடுக்க கடல் நீர் நாட்டுக்குள் புகுந்து பெரும் சேதம் விளைவிக்கும். இதனால் ஒல்லாந்து நாட்டு மக்கள் இந்த அணையைக் கண்ணை இமைகாப்பது போல காத்து வருகிறார்கள்.



கடற்கரையோரம் ஒரு கிராமம். அங்கு கான்சு என்ற பெயருள்ள சிறுவன் தன் பெற்றோருடன் வாழ்ந்து வந்தான். அவன் தனது நாட்டின் மீது மிகுந்த பற்றுள்ளவன். அவனது கிராமத்தில் பாடசாலை இல்லாமையால் கல்வி மீதுகொண்ட பற்றினால் அயற் கிராம பாடசாலை சென்று படித்து வந்தான்.

ஒரு நாள் மாலை வேளை பாடசாலை விட்டு தன் கிராமத்துக்குதிரும்பிக் கொண்டிருந்தான் கான்சு. அது மாரி காலமாதலால் வழக்கத்திலும் மாறாக முன்னதாகவே இருள் சூழ்ந்து விட்டது. பெருங்காற்று வீச ஆரம்பித்தது. பெரும்புயல் வீசுவதற்கான அறிகுறி தென்பட்டது. கடல் பயங்கரமாகக் கொந்தளித்துக் கொண்டருந்தது. இருள் நிறைந்த வீதி வழியே சென்றவன் திடீரென ஓரிடத்தில் நின்றான். அங்கே பாதுகாப்புக்காக கட்டப்பட்ட அணைக்கட்டில் ஏற்பட்ட சிறிய துவாரத்திலிருந்து ஊருக்குள் குபு குபு என நீர் பாய்வதைக் கண்டான். அதை அப்படியே விட்டு விட்டால் துவாரம் பெருத்து விடும் என்பதை உணர்ந்தவன், அணைக்கட்டின் துவாரத்தைத் தன் கையால் பலமாக அடைத்தான். கடல் நீர் வருவது நின்றது. அப்படியே அந்த இருட்டில் அந்த இடத்திலேயே இருந்து விட்டான். குளிரால் அவன் உடல் விறைத்தது. பசியால் கண்கள் பஞ்சடைந்தன. உதவிக்கு குரல் கொடுத்தும் எவரும் வருவாரில்லை. "என்ன ஆனாலும் தான் இறந்தே போனாலும் அந்த இடத்தை விட்டு செல்வதில்லை" என உறுதி பூண்டு அங்கேயே இருந்து விட்டான்.

இருட்டி வெகு நேரமாகியும் வீடு வராத தம் மகனை தெரிந்தவர்கள், நண்பர்களிடமெல்லாம் பெற்றோர் தேடிஅலைந்தனர். பின்னர் அவன் தந்தை மங்கலான லாந்தர் விளக்கொன்றை எடுத்துக் கொண்டு வீதியில் இறங்கி நடந்தார். கொஞ்சத் தூரம் சென்றிருப்பார். அணைக் கட்டின் அருகில் ஒரு உருவம் படுத்திருப்பதைக் கண்டார். அது தன் மகன் என இனம் கண்டு தந்தை பதறிப்போனார். தன் கையினால் அடைத்தும் துவாரம் பெருத்து விட்டதால் தன் முதுகால் துவாரத்தை அடைத்துக் கொண்டு அணையோடு சாய்ந்தபடி ஈரத்துள் நடுங்கியபடி கிடைந்தான் கான்சு.

மகனின் நிலை கண்டு தந்தை மனம் வருந்தினும் அவன் செயல் கண்டு மனதுள் பெருமிதம் அடைந்தார். உடனடியாக கிராமத்துள் சென்ற தந்தை உடைப்பை அடைப்பதற்கு ஆட்களையும் அழைத்து கொண்டு பொருள்களையும் எடுத்து வந்தார். அணை சீர்ப்படுத்தப்பட்டது. மறுநாள் சிறுவனின் இந்த துணிச்சலான, தியாகமான செயலைப் பாராட்டிபலர் அவர்கள் வீட்டு முன்றிலில் கூடினர். அவனைப் பாராட்டியவர்கள். அன்புப் பரிசாக ஒரு அரிய நூலையும் பரிசளித்தனர். அதில் "தனது நாட்டை அபாயத்தில் நின்று காத்த வீரச் சிறுவன் கான்சுவுக்கு எமது அன்புப் பரிசு" என எழுதப்பட்டிருந்தது.

கான்சுவின் தாயோ தன் மகனின் வீரச் செயலை அறிந்து அவனைக் கட்டி உச்சிமோந்தாள்.


**ஈன்ற பொழுதிற் பெரி(து)உவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக் கேட்டதாய் (குறள்–69)**

***பொருள் : தன் மகனைக் கல்வி கேள்விகளால் உயர்ந்தான் என்று மற்றவர்கள் சொல்லக் கேட்ட தாயா னவள் அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியிலும் பார்க்க பெரு மகிழ்ச்சி அடைந்தாள்***

**மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என் நோற்றான் கொல் எனும் சொல் (குறள்–70)**

***பொருள் :தந்தைக்கு மகன் செய்யும் உதவியானது இவனது நல் அறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர்கள். இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவத்தைச் செய்தானோ என்று கூறுமாறு செய்தல் ஆகும்.***

# யானை



- நிலத்தில் வாழும் அதிக எடையுள்ள பாலூட்டி ஆபிரிக்க யானை.
- இது மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக் கூடியது.
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
- கறுப்புத் தந்தமுள்ள யானைகள் ஆபிரிக்காவில் உள்ளன.
- யானையின் துதிக்கை அதன் வாழ்நாள் முழுவதும் வளர்ந்து கொண்டே இருக்கும்.
- யானை 3 மைல் தொலைவில் தண்ணீர் இருந்தாலும் அதனைக் அறிந்து கொள்ளும் சக்தி மிக்கது.
- யானையின் கர்ப்ப காலம் 22 மாதங்களாகும்.
- யானை தனது துதிக்கைக்குள் ஒன்றரைக் கலன் வரையிலான நீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும்.
- யானைக்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. உடல் வெப்பத்தைக் குறைப்பதற்காக அது தனது காதுகளால் விசிறிக் கொண்டிருக்கும்.

## புள்ளிகளை இணைத்து உருவத்தை முழுமை செய்வோம்



# உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள் 3 பிரிவுகளாக வகுக்கப் பட்டுள்ளன.

அவை

I - பண்டைய உலக அதிசயங்கள்
II - இடைக்கால உலக அதிசயங்கள்
III - நவீன உலக அதிசயங்கள்

**I பண்டைய உலக அதிசயங்கள்**

- எகிப்தின் பிரமிட்டுக்கள்
- எஃபிஸ்ஸில் உள்ள ஆர்ட்டிமிஸ் ஆலயம்
- ஹேலி கார்ன ஸிஸ்ஸில் உள்ள கல்லறை மாடம்
- அலெக்ஸ்ஸாந்திரியாவில் உள்ள ஃபாரோஸ் கலங்கரை விளக்கம்.
- பாபிலோனியாவின் தொங்கும் தோட்டம்
- ஒலிம்பஸ்ஸிலிருந்த ஜியூஸ் சிலை
- ரோட்ஸில் உள்ள பேருருவச் சிலை

**II இடைக்கால உலக அதிசயங்கள்**

- உரோமின் கொல்லோசியம் அரங்கம்
- நான் கிங்கின் பீங்காய் கோபுரம்
- பிரிட்டனின் ஸ்டோன் ஹெஞ்சல் எனப்படும் மனிதப் புதைவிடக் கற்கள்
- பைசா நகரத்து சாய்ந்த கோபுரம்.
- சீனப் பெருஞ்சுவர்
- கான்ஸ்டாண்டி நோபிளின் புனித சோபியா மசூசி
- அலெக்ஸாண்டிரியாவின் அடிநிலக் குடைவுக் கல்லறை கள்

**III நவீன உலக அதிசயங்கள்**

பெர்னார்ட் வெப்பர் என்பவரால் நிறுவப்பட்ட சுவிட்சர்லாந்து அமைப்பு சர்வதேச வாக்கெடுப்பை 2007இல் நடாத்தியதன் மூலம் நவீன கால உலக அதிசயங்கள் தெரிவு செய்யப்பட்டன.

**எகிப்து பிரமிட்** :- மாயன் கலாசாரத்தைப் பிரதி பலிக்கும் மெக்ஸிக்கோ நாட்டில் உள்ள பிரமிட் இதுவாகும்.

**சீனப் பெருஞ்சுவர்** :- சீனாவின் பாதுகாப்புக் கருதி கி.மு. 200ஆம் ஆண்டில் கிழக்கு ஷங்காய் கணவாய்முதல்மேற்கேலோப்னர்வரை 6ஆயிரத்து330 கிலோமீற்றர் நீளத்தில் கட்டப்பட்டதாகும் (1500 மைல்கள்)

**தாஜ்மகால்** :- டெல்லியை அடுத்து ஆக்ராவின் ஜமுனை நதிக்கரையில் மொகலாய மன்னர் ஷாஜனானால் தன் காதல் மனைவியான மும்தாஜீக்காக கட்டிய பளிங்கு மாளிகை.

**மாச்சுபிச்சு** :- இதன் பொருள் மலையுச்சியின் அதிசய நகரம் என்பதாகும். பேரு நாட்டில் உருபாம்பாசம் வெளியின் உச்சியில் கடல் மட்டத்திலிருந்து 2ஆயிரத்து350 கிலோமீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது.

**இரட்சகர் இயேசு** :- இது பிரேஸில் நாட்டில் றியேடிஜெனிரோ நகரில் உள்ளது. டிஜ்ஜிக தேசிய பூங்காவில் கோர் வோடோ மலையுச்சியில் உள்ள இந்தச் சிலை 38 மீற்றர் உயரமும் 700 தொன் எடையும் கொண்டது.

**உரோமின் கொலாஸியம்** :- புராதன உரோமாபுரி நகரத்தின் பொது அரங்கம் இது. இத்தாலியின் தலைநகர் உரோம் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது.

**பெட்ரா** :- ஜோர்தான் நாட்டின் சாக் கடலுக்கு அருகேயுள்ள மலைத் தொடரில் செதுக்கி உருவாக்கப்பட்ட ஒரு மாளிகை. இங்கே கோவில்கள், வளைவுகள், கோபுரங்கள் என 800 இற்கும் அதிகமான நினைவிடங்கள் உள்ளன.

**சுதந்திர தேவி சிலை** :- அமெரிக்க நாட்டின் தேசிய நினைவுச்சின்னமான சுதந்திரதேவி சிலை பிரான்ஸ் நாட்டினரால் 1886.10.28இல் நியூயோக்கில் நிறுவப்பட்டது. 2011 ஒக்ரோபரில் 125 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

**அழும் சுவர்** : - யூதர்களின் புனித இடமான The waing wall அல்லது Westen hall ஐக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி சீதாலட்சுமி பாலசுப்பிரமணியம்



திருநெல்வேலி சைவப் பாட சாலை வீதியைப் பிறப்பிடமாகவும் 22/01, இராமலிங்கம் வீதி, திரு நெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலட்சுமி பால சுப்பிரமணியம் கடந்த (08.07. 2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான இராமலிங்கம் சரஸ்வதி தம்ப தியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சுந்தரம் அம்மாப் பிள்ளை தம்பதியரின் அன்பு மரும களும் காலஞ்சென்ற சுந்தரம் பால சுப்பிரமணியத்தின் அன்பு மனை வியும் விஜயலட்சுமி (லண்டன்), புஸ்பமலர் செல்வரட்ணம் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (ஜேர்மன்), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், பாலரட்ணம் (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (லண்டன்), தவமணி (ஜேர்மன்), தவராசா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற செல்வராசா, செல் லத்துரை, சாந்தகுமாரி, பரமானந்தன், மதிவதனி, விமலாதேவி, காலஞ் சென்ற மகேந்திரன, கனியமுது ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2017) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் பி.ப.3.00 மணியளவில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக பாற்பண்ணை, திருநெல்வேலி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**22/01, இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி.**
**0212221679,**
**076 972 2835 (பாலரட்ணம்)**

தகவல்: குடும்பத்தினர்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### விஞ்ஞானபீடம்

**விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு - 2016 நிலை 1G, 2G, 3G**
**கணனி விஞ்ஞான பட்டத் தேர்வு - 2016 நிலை 1S, 2S, 3S, 4S**
**விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு - 2016 நிலை 3M 4M**

**முதலாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு**

முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கை நெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) ஆவணி 2017 இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் **2017 ஆடி 21** ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப் படுகின்றனர்.

**07-07-2017** **பதிவாளர்**

---

### FACULTY OF SCIENCE
### UNIVERSITY OF JAFFNA

**General Degree Examination in Science – 2016 Levels 1G, 2G, 3G**
**Bachelor Degree Examination in Computer Science - 2016 Levels 1S, 2S, 3S, 4S**
**Special Degree Examination in Science – 2016 Levels 3M, 4M**

**END OF COURSE EXAMINATION IN FIRST SEMESTER**

End of Course Examinations of the Course Units conducted in the First Semester will commence in **August 2017.**

Students who wish to sit for the above End of Course Examinations as Repeat Candidates are requested to submit their duly filled Examination Entry Forms along with receipt of payment for examination fee at the Office of the Dean/Science on or before **21st July 2017.** Examination Entry Forms could be obtained from the Office of the Dean/ Science.

07-07-2017 Registrar

---

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினபூபதி (கிளி அக்கா) சற்குணநாதன்



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினபூபதி சற்குணநாதன் நேற்று (10.07.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பாக்கியம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சற்குண நாதனின் (TA) அன்புமனைவியும் விஜயரஞ்சினி (லண்டன்), நவரஞ்சினி (லண்டன்), நந்தினி (கனடா) காலஞ்சென்ற நந்தகோபன், வேணுகோபன் (லண்டன்), சிவறஞ்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகுதாயும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சிவபாக்கியம் மற்றும் பரமேஸ்வரி, நாகராஜா (நடராஜா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரட்ணகுமார் (லண்டன்), சோதீஸ்வரன் (லண்டன்), சிறீகாந்தன் (கனடா), மைதிலி (லண்டன்), யஜீசன் (லண்டன்) ஆகி யோரின் அன்புமாமியும் சரஸ்வதி (லண்டன்) காலஞ்சென்றவர்களான யோகசுந்தரம், சுப்பிரமணியம், ராஜேஸ்வரி, துரைராசா மற்றும் சிவனேசமணி காலஞ்சென்றவர்களான குணரட்ணம், தேவராஜா மற்றும் செல்வராஜா காலஞ்சென்றவர்களான செகராஜா, தியாகராஜா மற்றும் சிவஞானமணி, செல்வராணி, சிவராஜா, றஜனி, சாந்தினி, அமுதினி ஆகியோரின் மைத்துனியும் தஷாந்தி, விஷாந்தி, மேனன், கார்த்திகா, மானசி, மாசிலன், நிதுஷன், சாருஷன், விஷாலி, வைஸ்ணவி, திவ்வியா, வெங்கரேஷ், தாரகன், திருஷகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அவய்யா வின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2017) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு மு.ப. 11 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"பிருந்தாவனம்"**
**சோதிஅம்மா வீதி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 666 0199, 076 574 6080**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவநாயகம் யோகநாதன்



மீசாலை வடக்கு கொயிலாமனை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட திருமதி சிவநாயகம் யோகநாதன் 09.07.2017 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகநாதனின் அன்புமனைவியும் இந்திரை திசைநாயகம் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் கனகலிங்கம் காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் தசநாயகம். யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகசிங்கம். கனகரட்ணம். அம்பலவாணர். செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் தவரூபியின் (சிறுவர் நீதிமன்றம் யாழ்ப்பாணம்) பாசமிகு தாயாரும் கஜேந்திரனின் (வவுனியா நீதிமன்றம்) அன்பு மாமியாரும் துஷாந்தின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2017) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைப்பறிச்சான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொயிலாமனை, கொடிகாமம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அருளம்பலம் இராஜன்
### (சித்தப்பா)



குருணாகலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் இராஜன் (சித்தப்பா) கடந்த (08.07.2017) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக்கணவரும் சிறீஸ்காந்தன் . செல்வமயூரன் . நீலஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவதர்சினி . கிருபா. கிருஷ்ணகுருபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் .உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**021 491 5597**

### திருமதி
## நகுலேஸ்வரி தவயோகநாதன்



**தோற்றம் 27.09.1958 மறைவு 07.07.2017**

ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி தவயோகநாதன் கடந்த (07.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - பாலஞானமணி தம்பதி யரின் அன்புமகளும் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னம்மா தம்பதி யரின் அன்புமருமகளும் தவயோகநாதனின் பாசமிகு மனைவியும் நந்தனின் (சிவசங்கரி அகம், ஆவரங்கால்) பாசமிகு சிறிய தாயும் கவிதா (ஜேர்மனி), சத்தியசீலன், சிவசீலன், வனிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்காலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (11.07.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி,**
**ஆவரங்கால், புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 304 2961**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நேசம்மா அப்புத்துரை

மண்ணில் 15.04.1933 விண்ணில் 03.07.2007

ஆண்டுகள் பத்து சென்றாலும்
மாறாது உங்கள் நினைவுகள்

**அம்பகர் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரிசுப்பிரமணியம்நேற்று (10.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் சிவஞானம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரியும் திருமதி நாகரத்தினத்தின் (ராணி) அன்பு மைத்துனியும் நாகேந்திரா (UK). ரவீந்திரன் (USA). வசந்தரூபா. புவனேந்திரன். திருக்கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவநிதி (UK). நடேசன் (இளைப்பாறிய ஆசிரியர். Royal College). கலாநிதி (ஆசிரியர். Vaddu west. A.M.T.S ). கணேசநாதன் (திருநெல்வேலி வாலை அம்மன் கோயில் Manager) ஆகியோரின் அன்பு மாமியும் ஜீவநாத்(UK)-சுமித்தா(UK). மயூரதன்(UK)-தோமிளா(UK). அபிராமி (USA). ஜனனி (USA). திருமாதவன் (USA). அமர்நாத். திவ்யா (UK) - கிஷோக்குமார் (UK). ரம்யா - சுஜித். சாருஜன். பிருந்தாபன். பகீரதன். கோபிகா. கோகுலன் (Bharain) மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அயத்தி. ஆர்ணவி. ஆர்த்திகா. அஷ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2017) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி றோட்,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 222 8752, 077 625 8752**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 11.05.1960 இறப்பு 11.06.2017

கடந்த 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்திய
எமது அன்புத்தாயார்

### அமரர் கலாராணி நாகரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (11.07.2017) செவ்வாய்க்கிழமை காலை 5 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**தர்மகுலசிங்கம் ச.ச. நிலையம்,**
**வல்வெட்டி, வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்.**

### காணாமற்...

சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசுகொண்டுவரவுள்ளகாணாமற்போனோர் சட்டவரைவு தொடர்பாகக் கருத்துக் கூறிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாரதூரமான காணாமற்போனோர் சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்த அரசு திட்டமிட்டுள்ளது. அந்தச் சட்டவரைவு தகவல் அறியும் சட்டத்தைக்கூடச் சவாலுக்கு உட்படுத்தக்கூடியது. இந்த நாட்டின் குடிமகனுக்கு இருக்கின்ற பாதுகாப்பு இல்லாமல் போகும். இந்தச் சட்டவரைவின் அடிப்படையில் வேறு ஒரு நாட்டில் இருந்து இந்த நாட்டுக் குடிமகனுக்கு எதிராக முறைப்பாடு செய்தால் அந்த முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அந்த நாட்டு அரசு எமது நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும்.

சர்வதேச நாடுகள் இந்தச் சட்டவரவுக்கு ஆதரவாகப் பேசினாலும்கூட அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் நோர்வே போன்ற நாடுகள் இந்தச் சட்டவரைவை நிறைவேற்றவில்லை. இந்தியா 2007ஆம் ஆண்டு இந்தச் சட்டவரைவை நிறைவேற்றினாலும்கூட இன்னும் அதை நடைமுறைப் படுத்தவில்லை.

இது அரசியல் காரணங்களுக்காகவே நிறைவேற்றப்படவுள்ளது. இந்தச் சட்டவரைவின் அடிப்படையில் அரசின் எதிரிகள் திட்டமிட்டுப் பழிவாங்கப்படவுள்ளனர். இது நிறை வேற்றப்பட்டால் இதன் கீழ் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவருக்கு ஆகக் குறைந்தது 20வருடச் சிறைத் தண்டனை வழங்கப்படும் - என்றார். (த-3)

**கருத்தரங்கு** பௌதிகவியல்
13.07.2017 (வியாழன்)
14.07.2017 (வெள்ளி)
8.00A.M - 12.00A.M
SCIENCE CORNER JAFFNA
"அனைவரும் பயன் பெறுவோம்"

**வீடு வாடகைக்கு**
இருபாலையில் சகல வசதியுடன் மேல் வீடு வாடகைக்கு உண்டு. German Shepherd நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
**077 790 6224**

**பணிப்பெண் தேவை**
யாழ். நகரிலுள்ள வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**தொடர்பு.077 990 7036**

**சேவை**
வீட்டில் சுத்தமாகவும், சுவையாகவும் தயாரிக்கப்படும். சைவ .அசைவமதிய உணவுப் பார்சல் நேரடியாக நிறுவனங்கள், வீடுகளுக்கு. நேரடி இலவச விநியோகம் (மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்)
**ஓடர் - காலை 9.30 முன்**
**தொடர்பு- 077 164 6745**

**கொக்குவில் இந்துக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான**
**அறிவுறுத்தல்**

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பாக பழைய மாணவர் சங்கத்தினால் முன் எடுக்கப்பட்ட கல்விப் பகிஷ்கரிப்பு பாடசாலை மாணவர்களின் பரீட்சையினை கருத்தில் கொண்டு இன்று 11.07.2017 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை பெற்றோர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**கொக்குவில் இந்துக்கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி...

தார். அவர் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றமையாலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

**நேரில் சென்று ஆய்வு**

இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்துக்கு பருத்தித்துறை நீதிவான் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். மந்திகை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவரின் சடலத்தையும் நீதிவான் பார்வையிட்டார். பருத்தித்துறைப் பொலிஸாரும், தடயவியல் பொலிஸாரும் (சோக்கோ) சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

**விளக்கமறியல்**

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களிடம் மூடிய அறைக்குள் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்பின்னர் அவர்கள் இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் அநுராதபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

**புதைக்கப் பணிப்பு**

நீதிமன்ற உத்தரவுக்கமைய உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுச் சோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டது. அதற்கான செலவீனங்களை பருத்தித்துறைப் பொலிஸார் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். சடலத்தைப் புதைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பாதுகாப்பான முறையில் இவற்றை நடைமுறைப்படுத்துமாறும் பணித்தார்.

**மனித உரிமைகள்**
**ஆணைக்குழு கரிசனை**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று யாழ். அலுவலக இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

"சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டோம். உயிரழந்தவரின் வீட்டுக்கும் சென்று தகவல்களைச் சேகரித்துள்ளோம். பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணிக்கின்றோம். இந்த விசாரணைகள் பக்கச்சார்பாக நடக்கக் கூடாது என்பதில் நாம் கரிசனையாக உள்ளோம். எம்மால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும்." என்று அவர் கூறினார்.

**பதற்ற நிலை**

துன்னாலைப் பிரதேசத்தில் நேற்றுக்காலை சற்றுப் பதற்றமான நிலமை ஏற்பட்டது. கலிகைச் சந்திக்கும் துன்னாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் சாலையில் ரயர்களைக் கொழுத்தி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் பருத்தித்துறை கொடிகாமம் சாலையூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

துன்னாலைப் பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றின் மீதும், இராணுவத்தின் பவல் கவச வாகனம் மீதும் சிலரால் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல்களால் அவை சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

**சடலம் ஒப்படைப்பு**

இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்று நள்ளிரவு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் நேற்று மாலை பருத்தித்துறைப் பொலிஸாரால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்டவைத்திய அதிகாரியிடம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனை நேற்றிரவு 10 மணியளவில் நிறைவடைந்து பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது. (ற-26)

## விசாரணை...

கையை, சிறப்புரிமையைக் காரணமாகத் தெரிவித்து வழங்காமல் விடுவது தவறு. இந்த விசாரணையில் மூன்றாம் தரப்பினரும் தொடர்புபட்டிருப்பதால், அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து அறிவிக்குமாறும், விசாரிணை அறிக்கை வெளியிடப்படுவதில் பொதுமக்கள் நலன் இருக்குமாக இருந்தால், ஆணைக்குழு அறிக்கையை வழங்கப் பணிக்கும் என்றும், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

வல்வெட்டித்துறை நகர சபை தொடர்பில் முதலமைச்சரினால் தனிநபர் விசாரணை ஆயம் நடத்தப்பட்டது. விசாரணை ஆயத்தின் முழுமையான அறிக்கயை வழங்குமாறு, வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சின் தகவல் அலுவலரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. விசாரணை அறிக்கையின் சாராம்சம் பதிலாக வழங்கப்பட்டது. முழுமையான விசாரண்ண அறிக்கை தேவை என்று, முதலமைச்சர் அமைச்சின் மேன்முறையீட்டு அலுவலரான முதலமைச்சரின் செயலாளரிடம் மேன்முறையீடு மேற்கொள்ளப்பட்டது.

'இது பகிரங்க விசாரணை நடவடிக்கை அல்ல. அந்த நகர மக்களின் நலன்சார்ந்த நல்லெண்ண அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. விசாரணை அறிக்கையை முழுமையாக வெளியிடுவது அப்போதைய சபை அங்கத்தவர்களது சிறப்புரிமைகளை மீறுகின்ற செயற்பாடாகும்' என்று மேன்முறையீட்டுக்கான பதில் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பதிலுக்கு எதிராகத் தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கான விசாரணை ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்றது.

முதலமைச்சரின் அமைச்சுச் சார்பில், தகவல் அதிகாரியும் மற்றுமொருவரும் கலந்து கொண்டனர்.

சிறப்புரிமையைக் காரணமாகக் குறிப்பிட்டு தகவலை வழங்க மறுக்கமுடியாது என்று ஆணைக்குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால் இதில், மூன்றாம் தரப்பினர் தொடர்புபட்டுள்ளதை ஆணைக்குழு கவனத்தில் கொள்வதாகத் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை நகர சபை தொடர்பான விசாரணையில் பலரும் சாட்சியமளித்துள்ளமையால் அவர்களிடம், இந்தத் தகவலை பகிரங்கப்படுவதற்குச் சம்மதமா எனக் கேட்டறிய வேண்டும். அவர்கள் தகவலை வெளியிடுவதற்கு இணங்கினால், விசாரணையின் முழுமையான அறிக்கை வழங்கப்படும். அவர்கள் தகவலை பகிரங்கப்படுத்துவதற்கு இணங்கவில்லையாயின், இந்த விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதில் பொதுமக்களின் நலன் மேலோங்கிக் காணப்படுமானால், தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழு முழுமையானவிசாரணை அறிக்கையை வழங்கப் பணிக்கும் என்று ஆணைக்குழு உறுப்பினர்கள் முறைப்பாட்டாளருக்கும், அமைச்சு அதிகாரிகளுக்கும் தெரிவித்தனர்.

முதலமைச்சர் அமைச்சின் தகவல் அதிகாரி, வல்வெட்டித்துறை நகர சபை தொடர்பான விசாரணையில் தொடர்புடையவர்களிடம், விசாரணை அறிக்கையை முழுமயாக வெளியிடுவது தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்து அறிவிக்குமாறு ஆணைக்குழு உறுப்பினர்கள் பணிப்புரை விடுத்தனர். (து-5)

## ராஜபக்ச...

அப்படியொரு மன்னிப்பு எங்களுக்கு வேண்டாம். எங்களுக்குத் தேவை நீதி மட்டும்தான். நான் ஏதாவது சொத்துக்கள் வாங்கி இருக்கின்றேனா? தேயிலைத்தோட்டம் வாங்கி இருக்கின்றேனா? இறப்பர் தோட்டம் வாங்கி இருக்கின்றேனா? தென்னந் தோட்டம் வாங்கி இருக்கின்றேனா? வீடு வாங்கி இருக்கின்றேனா? ஹோட்டல் வாங்கி இருக்கின்றேனா? ஏதும் வர்த்தகத்தில் பங்காளியாக இருக்கின்றேனா? இல்லை.

அப்படிச் செய்திருந்தால்தானே ஊழல், மோசடி என்று சொல்ல வேண்டும். அப்படி இல்லாமல் ஏன் எனக்குத் தொல்லை தருகிறீர்கள்? எனக்கு நீதியை வழங்குங்கள். மன்னிப்பு வழங்கினால் நான் குற்றம் செய்தவன் என்று அர்த்தமாகும்.

நாட்டில் 30வருடங்களாக இருந்த பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டுக்கு முழுச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தது தவறா? அதையா ஊழல் மோசடி என்று சொல்ல வருகிறீர்கள்? இந்த அரசு திட்டமிட்ட அடிப்படையில் என்னைப் பழிவாங்குகிறது. இது யாருடைய தேவையை நிறைவேற்றுவதற்கு என்று எல்லோருக்கும் தெரியும்.

நல்லாட்சி என்று கூறிக்கொண்டு இப்படி எம்மைக் கொடுமைப்படுத்தக் கூடாது. நான் அரசியல்வாதியல்ல அரசியலில் ஈடுபடவும் மாட்டேன். நல்லதோர் அரசியல்வாதியின்கீழ் அதிகாரியாக வேண்டுமென்றால் இருப்பேன் என்றார். (த-3)

## புதிய...

சியில் அரசு ஈடுபட்டிருக்கின்றது எனச் சுகாதார அமைச்சின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திலுள்ள ஏராளமான உறுப்பினர்கள் சங்கத்தின் நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்துள்ளனர் எனவும், எவ்வாறாயினும் தங்கள் அதிருப்தியை வெளிக்காட்ட அவர்கள் அஞ்சுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்துத் தெரிவித்திருக்கின்றார் எனவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்கள் உட்பட நாட்டின் பல மாகாணங்களில் பணிபுரியும் அரச மருத்துவர்கள் தற்போதைய சங்கத்தின் நடவடிக்கைகளில் பெரிதும் அதிருப்தியடைந்திருக்கின்றனர் எனவும், புதிய சங்கமொன்று உருவானால் ஏராளமானவர்கள் அதில் இணைந்துகொள்வார்கள் என்பது நிச்சயம் எனவும் சுகாதார அமைச்சர் எதிர்பார்ப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (த)

## கூட்டத்திலிருந்து...

கூட்டத்தில் இருந்து இடையே வெளியேறினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ் வரன்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் கூட்டம் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்குக் காணிகள் வழங்குவது தொடர்பாக அதில் ஆராயப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இணைத் தலைவர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. முஸ்லி மக்களுக்குக் காணிகள் வழங்குவது தொடர்பாக அரசதலைவரின் குழு காணிகளைப் பார்வையிட்டது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சுட்டிக் காட்டினார். அவரும் இணைத் தலைவரான ரிசாத் பதியுதீனும் இந்த விடயம் தொடர்பாக வாக்குவாதப்பட்டனர்.

கரைதுறைப்பற்றில் 548 முஸ்லிம் குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் தமிழ் மக்களுக்கான காணிகள் விடயத்தில் எந்த அக்கறையும் செலுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலையம் என்ற திட்டத்தின் கீழ்தமிழ் மக்களின் பூர்வீகக்காணிகளை கையகப்படுத்தல், சட்டவிரோத மீன் பிடித்தொழில் மற்றும் காடழிப்பு போன்ற விடயங்களுக்கு எந்தவித கரிசனைகளும் காட்டாத அமைச்சர் இந்த விடயத்தில் மாத்திரம் அக்கறை செலுத்துவது பொருத்தமற்றது என்று கூட்டத்திலிருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

வாக்குவாதம் தீவிரமடைந்ததை அடுத்து மற்றொரு இணைத்தலைவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டத்தின் இடைநடுவே வெளியேறினார். வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சரான அனந்தி சசிதரனும் அவருடன் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களுக்கு அடிப்படை உரிமைகள தொடர்பாகவும், அவர்களது வாழ்வாதாரத் தொழில்கள் தொடர்பாகவும் எந்தக் கரிசனையும் காட்டாத அரச தரப்பு அரசியல்வாதிகள், அதிகாரிகள் பெரும்பான்மையினருக்கு சலுகைகளை வழங்குகின்றனர். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பாரபட்சம் காட்டுவதை அதிகாரிகளும் அரச தரப்பு அரசியல் வாதிகளும் தவிர்த்து முஸ்லிம் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் காட்டுகின்ற கரிசனையை தமிழ் மக்களின் உரிமைகளுக்கு காட்டவேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மல நாதன், சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரும், மாகாண சபை உறுப்பினர்களான கந்தையா சிவனேசன், துரைராஜா ரவிகரன், புவனேஸ்வரன் ஆகியோரும் வலியுறுத்தினர். (ற-8)

## விகிதாசார...

னால் இரு இன மக்களுக்கும் சம நேரத்தில் விகிதாசாரத்தின் அடிப்படையில் அவை வழங்கப்படவேண்டும் என்று நீண்ட சச்சரவுக்குப் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட இணைத் தலைவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கூழாமுறிப்புப் பகுதியில் முஸ்லிம் மக்களுக்கான வீட்டுத் திட்டத்துக்குரிய காணி விடுவிப்பு அனுமதி தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை முன்வைத்தார். இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்களுற்குக் காணி வழங்குவது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் பெரும் சர்ச்சை நீடித்தது. இந்த விடயம் மட்டும் சுமார் ஒரு மணி நேரம் விவாதிக்கப்பட்டது. இதன்போது மக்கள் பிரதிநிதிகளுக்கிடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றன.

இணைத்தலைவர்களில் ஒருவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான விக்னேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில், இந்த மாவட்டத்தில் இரு இனங்களிலும் பல ஆயிரம் பேர் நிலம் அற்று காணப்படும் நிலையில் ஓர் இனத்துக்கான நிலமாகக் கோருவது மறு இனத்தின் மனதை ஒத்த விடயமாகின்றமையால் இரு இனங்களுக்கும் சம நேரத்தில் வழங்குவதானால் எனது ஒப்புதலை தெரிவிக்கின்றேன் என்றார். இவ்வாறு கூறிய பின்னர் அவர் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். இதன் பின்னரும் கடும் வாதப் பிரதிவாதங்களும் சர்ச்சைகளும் நீடித்தன.

முஸ்லிம் மக்களுக்குக் காணிகள் கொடுக்கும் போது தமிழ் மக்களுக்கும் காணிகள் கொடுக்கப்படவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கருத்துக்களை வெளியிட்டார். இதன் போது அமைச்சர் ரிசாத் பதியுதீன், மற்றும் மாகாணசபை உறுப்பினர் ஜனோபர் ஆகியோர் ரவிகரனுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். முஸ்லிம்களுக்குக் காணிகள் கொடுப்பதைத் தடுக்கவில்லை. ஆனால் தமிழ்மக்களுக்கும் காணிகள் வழங்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

விகிதாசாரப்படி காணிகள் வழங்குவதாகத் தீர்மானம் எடுத்த பின்னர் வீண் முரண்பாடு தேவையற்றது என மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார். அமைச்சர் ரிசாத் அதற்குச் சம்மதித்தார். நிறைவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்களுற்கு நிலம் வழங்குவதானால் இரு இன மக்களுக்கும் சம நேரத்தில் விகிதாசாரமான முறையில் வழங்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(து-21-101)

## தையிட்டியில்...

தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டில் கடந்த 27 வருடங்களாக இருந்த தையிட்டிப் பிரதேசத்தில் கடந்த ஏப்ரல் மாதம் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். எனிலும் அங்கு ஜெ 248 கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களுடைய வீடுகளில் இராணுவத்தினரால் அமைக்கப்படிருந்த விடுதிகளில் (ஹொட்டல்) இருந்து இராணுவத்தினர் வெளியேறாது தொடர்ந்து நிலை கொண்டிருந்தனர். தையிட்டிப் பகுதி விடுவிக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையில் நேற்றையதினம் இராணுவத்தினர் பொதுமக்களுக்கு சொந்தமான 7 வீடுகளையும் பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

இராணுவத்தினரால் கையளிக்கப்பட்ட மக்களின் வீடுகளில் இராணுவத்தினர் வெளியேறும் போது அவர்களுடைய தளபாடங்கள் மற்றும் பொருள்களைக் கொண்டு சென்றுள்ளனர். எனினும் 7 வீடுகளும் எந்தவித சேதங்களுக்கும் உட்படாது, புதிய வீடுகள் போன்று காட்சியளிக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

போர் முடிவடைந்த பின்பு 2012ஆம் ஆண்டு ஊறணி அந்தோனியார் தேவாலயம், மயிலிட்டி காணிக்கை மாதா தேவாலயம், மயிலிட்டி மருதடிப் பிள்ளையார் ஆகிய ஆலயங்கள் வழிபாடு செய்யவும் பார்வையிடவும் இராணுவத்தினரால் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மக்கள் அங்கு சென்ற போது, அந்தப் பகுதியில் இருந்த மக்களின் வீடுகள் அனைத்தும் இடம்பெயரும் போது இருந்த நிலையில் இருந்ததாகவும், 2012 ஆம் ஆண்டின் பின் திட்டமிட்ட வகையில் இந்தப் பகுதியிலுள்ள வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், காசநோய் வைத்தியசாலை என அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருந்ததாக அப்போது மக்கள் கவலை வெளியிட்டிருந்தனர்.

(த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 மீற்றர் ஓட்டத்தில் சதுர்ஜனுக்கு தங்கம்

## தசைப்பிடிப்புடன் சாதித்துள்ளார் என்று பயிற்சியாளர் பெருமிதம்


யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவு 100 மீற்றர் ஓட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வீரன் சதுர்ஜன் தங்கப்பதக்கம் வென்றார். அவர் போட்டிக்கு முன்னைய நாள் அதாவது நேற்றுமுன்தினம் இரவு தசைப் பிடிப்பால் அவதிப்பட்டார் என்ற தகவல் பயிற்சியாளரால் வெளிப்படுத்தப்பட்டது.



இது தொடர்பில் சதுர்ஜனின் பயிற்சியாளர் மயில்வாகனம் கருத்துத் தெரிவிக்கையில்: "நேற்றுமுன்தினம் நடைபெற்ற 200 மீற்றரில் சதுர்ஜன் தங்கம் வென்றார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 100 மீற்றர் தெரிவு மற்றும் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தெரிவுப் போட்டிகளில் பங்கு பற்றிய பின்னர் இடுப்பிலிருந்து முழங்கால் வரைக்கும் தசைபிடிப்பு ஏற்பட்டது. குறித்த மாணவனை இரவு மருத்துவமனைக்கு கொண்டுசென்று இன்று (நேற்று) போட்டிக்கு ஏற்ற வகையில் தயார் செய்தோம். சாதிக்க முடியுமா என்ற சந்தேகத்துடனும், கவலையுடனும் போட்டியில் கலந்து கொண்டார். அவர் தங்கப் பதக்கத்தைப் பெற்றபோது கண்ணீர்மேலிட்டது" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-422)





# யாழ். வலயம் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் கிண்ணம் வென்றது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 10ஆவது தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று வரை நடைபெற்றது. ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் 650 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணக் கல்விவலயம் கிண்ணம் வென்றது. மன்னார் கல்வி வலயம் 601 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. வலிகாமம் கல்வி வலயம் 545 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்த மூன்று வலயங்களுமே 500 இற்கும் மேல் புள்ளிகளைப் பெற்ற வலயங்களாகும். வடமராட்சி கல்வி வலயம் 346 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், வவுனியா தெற்கு கல்வி வலயம் 228 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயம் 190 புள்ளிகளுடன் 6ஆவது இடத்திலும், முல்லைத்தீவு கல்வி வலயம் 188 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திலும், தென்மராட்சி கல்வி வலயம் 157 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும், மடு கல்வி வலயம் 130 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலும், துணுக்காய் கல்வி வலயம் 109 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திலும் உள்ளன.

அடுத்த இரு இடங்களிலும் முறையே தீவகம், வவுனியா வடக்கு ஆகி கல்வி வலயங்கள் உள்ளன.

(ம-23-108-422)

## கந்தரோடை ஸ்கந்தாவுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 14 வயதுப்பிரிவு பெண்களுக்கான 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் சாதித்துக் காட்டியது கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 58.40 செக்கன்களில் ஓடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது. 58.90 செக்கன்களில் ஓடி முடித்த மன்னார் கற்கடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலை அணி வெள்ளிப் பதக்கத்தையும் 58.90 செக்கன்களில் ஓடிமுடித்த வவுனியா தர்மபால வித்தியாலய அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-108)

# மகாஜனக் கல்லூரி முதலிடம்



யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள், பெண்கள் என இருபால் பிரிவுகளிலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதலிடம் பிடித்தது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று வரை நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 129 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 128 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 117 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம் 112 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும், மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயம் 91 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரி 70 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தையும், நெல்லியடி மத்திய கல்லூரி 51 புள்ளிகளை பெற்று ஏழாமிடத்தையும், மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை 50 புள்ளிகளைப் பெற்று எட்டாமிடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி 48 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாமிடத்தையும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 44 புள்ளிகளைப் பெற்று பத்தாமிடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 110 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி 104 புள்ளிகளை பெற்று இரண்டாமிடத்தையும், [illegible] கல்லூரி 65 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், மன்னார் கற்கடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை 63 புள்ளிகளை பெற்று நான்காமிடத்தையும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 54 புள்ளிகளை பெற்று ஐந்தாமிடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி 51 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தையும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 41 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்தையும், மன்னார் கௌரி அம்பாள் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை 40 புள்ளிகளை பெற்று எட்டாமிடத்தையும், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் 37 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாமிடத்தையும், பளை மத்திய கல்லூரி 36 புள்ளிகளைப் பெற்று பத்தாமிடத்தையும் பெற்றன. (ம-422)

# வடக்குத் தடகளத்தில் 80 பேருக்கு உபாதை

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் சுமார் 80 வீர,வீராங்கனைகள் உபாதைக்கு உள்ளாகினர் என்று தெரியவருகிறது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலா தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று வரை நடைபெற்றது. சுமார் 80 வீர வீராங்கனைகள் உபாதைக்கு உள்ளாகினர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இயன் மருத்துவர் ரி.சஞ்சீவன் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்: "வீரர்கள் பலர் தசைபிடிப்பு, மயக்கம், மூச்சுத் திணறல் போன்ற விபத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதற்குக் காரணம் அவர்கள் பயிற்சியின் போதும் விளையாட்டில் பங்குபற்றும் போதும் சரியான உஸ்ணப்படுத்தும் முறையைக் கடைப்பிடிக்காமை முக்கிய காரணமாக அமைகிறது. பயிற்சியில் ஈடு படும் போது போதிய உடற்பயிற்சி செய்த பின்னரே போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். அதே போல் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட நேரத்தில் உடற்பயிற்சி செய்திருக்க வேண்டும். அத்தோடு போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் தமது போட்டி தொடர்பாக முன்கூட்டியே பயிற்சி எடுப்பது சிறந்தது. அதாவது நெடுந்தூர வீரர்கள் குறிப்பிட்ட தூரத்தை ஓடி பயிற்சி எடுத்திருக்க வேண்டும். இவ்வாறான பயிற்சிகள் இல்லாமல் களமிறங்கிய வீரர்கள் மற்றும் வீராங்கனைகளே உபாதைக்கு உள்ளாகியமை அதிகம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

# சாவகச்சேரி இந்துவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகள தொடரில் 20 வயது ஆண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கம் கிடைத்தது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விதுசன் தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.செந்துர்ஜன், வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.அபினஸ் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்றிமா மத்திய ம.வித்தி வென்றது தங்கம்

கரணவாய், ஜூலை 11
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 18 வயது ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்துக்கு வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என். நிசத்ஹான் 59 செக்கன்களில் ஓடி வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கத்தையும், மன்னார் சென். ஜோசவ்வாஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 59.60 செக்கன்களில் ஓடி வர்ணசான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.கவிநிலவன் 1.40 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (ம-108)


## ரேஞ்சர்ஸ் நவஜீவன்ஸ் அணிகள் காலிறுதியில்

உதயதாரகையின் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன காலிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

உதயதாரகையின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பொற்பதி சென். பீற்றர் விளையாட்டுக் கழகமும் மோதின. சமநிலைத்தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல்கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-108)

# இலங்கையை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது சிம்பாப்வே அணி




இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கையில் வைத்து 3:2 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது சிம்பாப்வே அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நேற்று முடிவுக்கு வந்தது. முதலாவது மற்றும் நான்காவது ஆட்டங்களில் சிம்பாப்வேயும், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆட்டங்களில் இலங்கையும் வெற்றிபெற்ற காரணத்தால் நேற்று நடைபெற்ற ஐந்தாவது ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் குணதிலக. மூன்றே ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார் டிக்வெல்ல. மெண்டிஸ் ஓர் ஓட்டத்துடனும், தரங்க 6 ஓட்டங்களுடனும் ரசாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். குணதிலகவுடன் இணைந்து மத்தியூஸ் ஓரளவு நிதானித்தார். 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மத்தியூஸ். மறுமுனையில் போராட்டகரமான அரைச்சதத்தை நிறைவுசெய்தார் குணதிலக. அவர் 52 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். குணரத்ன மத்திய வரிசையில் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சிம்பாப்வேயை எதிர்த்துப் போராடத் தவறினர். முடிவில் 8 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு ஆரம்ப வீரர்களான மிரி, மசகட்சா இணை சிறந்த ஆட்டத்தை வழங்கியது. பந்துப்பரிமாற்றத்துக்கு 6 ஓட்டங்களுக்கும் அதிகமான சராசரியில் ஓட்டங்கள் ஏறிக்கொண்டே இருந்தன. இணைப்பாட்டம் 92 ஓட்டங்களை எட்டியிருந்த நிலையில் 43 ஓட்டங்களுடன் மிரி ஆட்டமிழந்தார். எனினும் மறுமுனையில் மசகட்சா அரைச்சதம் கடந்தார். முசகன்டாவும் சிறந்த ஆட்டத்தை வழங்கினார். அணி 137 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மசகட்சா ஆட்டமிழந்தார். எர்வின், வில்லியம்ஸ் இருவரும் தலா 2 ஓட்டங்களுடன் தனஞ்சயவின் பந்துவீச்சில் சிக்கினர். வோலரும் ஆட்டமிழக்க சிறிது பதற்றம் அதிகரித்தது. எனினும் ரசா தொடர்ந்தும் நிலைத்து நின்று சிக்சருடன் ஆட்டத்தை முடித்து வைத்தார்.

ஆட்டநாயகனாக ரசாவும் தொடராட்ட நாயகனாக மசகட்சாவும் தெரிவாகினர். (ம)

## ரி-20 கிண்ணம் தீவுகளிடம்

இந்தியாவுக்கு எதிரான ரி-20 ஆட்டத்தை மிகமிக இலகுவாக வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

நேற்றுமுன்தினம் இரவு இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. கோக்லி, தவான் ஆரம்ப இணை சிறந்த தொடக்கம் கொடுத்தது. அணி 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி. தவான் 23 ஓட்டங்களுடன் ரண் அவுட் செய்யப்பட்டார். பன்ட், டினேஸ் கார்திக் இணை சராசரியை சரிவரப் பேணியது. பன்ட் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டினேஸ் கார்திக் 48 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். 190 ஓட்டங்களில் 6 இலக்குகளை இழந்தது இந்தியா.

பந்துவீச்சில் ரெய்லர், வில்லியம்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும்; சாமுவேல்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்ப வீரர் கெய்ல் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினாலும் சக ஆரம்பவீரரான லூயிஸ் தொடர்ந்து விளாசித்தள்ளினார். அவர் 24 பந்துகளில் அரைச்சதம் கடந்து 53 பந்துகளில் சதம் கடந்தார். அதிரடி தொடர்ந்தது. முடிவில் பிறிதொரு இலக்கை இழக்காமல் 9 பந்துகள் மீதமிருக்க 9 இலக்குகளால் வென்றது மேற்கிந்தியத் தீவுகள். (ம)

## இங்கிலாந்து வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது.

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் கடந்த 6ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 458 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரூட் 190 ஓட்டங்களையும், மொயின் அலி 87 ஓட்டங்களையும், புரோட் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மோர்கல் 4 இலக்குகளையும், பிளன்டர், ரபாடா இருவரும் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 361 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பவுமா 59 ஓட்டங்களையும், எல்கர் 54 ஓட்டங்களையும், பிளன்டர் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 4 இலக்குகளையும், அன்டர்சன், புரோட், டவ்சன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

97 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 233 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அலிஸ்டர்குக் 69 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 51 ஓட்டங்களையும், பலன்ஸ் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாராஜ் 4 இலக்குகளையும், மோர்கல், ரபாடா இருவரும் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

331 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு பவுமாவைத் தவிர எவரும் பதின்மத்தைத் தாண்டாத நிலையில் அந்த அணி 119 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பவுமா பெற்ற 21 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் மொயின் அலி 6 இலக்குகளையும், டவ்சன் 2 இலக்குகளையும், அன்டர்சன், வூட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். மொயின் அலி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ம)

## வவு. பூந்தோட்டம் ம.வி. வென்றது தங்கம்




யாழ்ப்பாணம், ஜூலை 11
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 14 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு குண்டு எறிதலில் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கஜனி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரின் இறுதி நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது. 14 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு குண்டு எறிதலில் 7.49 மீற்றர் தூரத்துக்கு எறிந்தே எஸ்.கஜனி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.கே.தாரணி 7.28 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், நெடுந்தீவு சீக்கிரியம் பாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த ஏ.நிரோஜினி 7.25 மீற்றரர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகுருசா அபாரம்



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் முன்னணி வீராங்கனை யான முகுருசா. நேற்று நடை பெற்றபெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து ஏஞ்சலிக் கெர்பர் மோதினார். ஆட்டத்தின் ஆரம்பம் கெர்பருக்குச் சாதகமானதாக அமைந்தது. முதல் செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கெர்பரின் வசமானது. அதன் பின்னர் முகுருசா அபார மான ஆட்டத்தை வெளிப்படுத்தி னார். அடுத்த இரண்டு செற்க ளையும் முறையே 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)


## வாலிப கிறிஸ்தவசங்கம் - யாழ்ப்பாணம்

### ஆசிரியருக்கான ஆறுமுக நாவலர் விருது

15 வருடங்களுக்கு மேலாக மிகக் கூடியகாலம் கஷ்ட பிரதேசத்தில் சேவையாற்றி கடந்த ஆண்டு (2016) இளைப்பாறியவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய ஆசிரியர்கள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் 20.07.2017 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தெரிவுகள் யாவும் நிதி வழங்குனரால் மேற்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு : 109. கண்டி வீதி. யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகில்)
தொ.பே: 021 222 2499 மின்னஞ்சல் : jaffnaymca@gmail.com

பொற்கிளி 50,000/=

பொதுச்செயலாளர்
YMCA
யாழ்ப்பாணம்.



சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2901 திகதி 10.07.2017

| வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து | | | | | போனஸ் இல. | புதன் கிழமை ஜக்பொட் |
|---|---|---|---|---|---|---|
| 13 | 51 | 61 | 65 | E | 48 | 30, 582, 630/- |

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 39 45 52 72

ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.07.12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS; DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk


## 26 ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்

தோற்றம் 25 . 02 . 1935



மறைவு 30 . 06 . 1991

அமரர்

### வேலாயுதபிள்ளை செல்வரட்ணம்

(பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)

திதி : 11.07.2017

அப்பா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் இருபத்து ஆறு போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

புகையிரத நிலைய பக்கம், எழுதுமட்டுவாழ்,
த.முகவரி: காளிகோயிலடி, திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.


உங்கள் முதல்நிலை ஆங்கிலப் பயிற்சி மையம்

SAAMSON
Experts in English Training

இப்போது
குளிரூட்டப்பட்ட விசாலமான வகுப்பறைகளுடன்
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்
எனும் புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கான
ஆங்கிலம்

O/L ஆங்கிலப் பரீட்சையினை மையமாகக்கொண்ட இப் பயிற்சிநெறியில் தரம்-8,9,10,11 மாணவர்கள் மட்டுமே இணைந்துகொள்ள முடியும்.
பதிவுசெய்யவேண்டிய இறுதி திகதி 16.07.2017

புதன் & வெள்ளி பிரிவுகள்
பிரிவு 1. மாலை 3-4 பிரிவு 2. மாலை 4-5

SPOKEN ENGLISH

இளைஞர் யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், உயர்கல்வி மாணவர்கள் இணையமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 15.07.2017 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோவில் அருகில்
யாழ்நகர்
021 320 3313
077 1570 486


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவு
அண்ணா சனசமூக நிலைய உறுப்பினர்
ஸ்ரீகிருஸ்ணன்
அவர்களின் புதல்வி **துயாழினி**
நயினாதீவு
ஸ்ரீகணேச கனிஷ்ட மாகவித்தியாலய மாணவி



12 வயதுக்கு உட்பட்ட உயரம் பாய்தல்
போட்டியில் மாகாணமட்டத்தில்
முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்தில்
தெரிவாகியுள்ள சாதனை மங்கையை
பாராட்டுவதுடன் மேன்மேலும் உயர்வடைய
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
அண்ணா சனசமூக நிலையத்தினர்
நயினாதீவு


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1379 சீட்டிழுப்பு திகதி 2017.07.10

வெற்றி இலக்கங்கள்: 12 15 48 60 X
03 06 21 37
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 14,841,820/-

தொ.பே: 011 4062002 / 0114062062 - Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.



SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▸ 674
சீட்டிழுப்பு திகதி ▸ 10.07.2017 திங்கட்கிழமை

| எழுத்து | இலக்கம் | இலக்கம் | இலக்கம் | இலக்கம் |
|---|---|---|---|---|
| I | 23 | 26 | 43 | 67 |

சுப்பர் ஜக்பொட் ரூ. 51,745, 364/=
வெல்லப்படவில்லை

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 01 35 55 68

பச்சை நிறடிக்கட்டுகள் 13.07.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்


## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



ஒலுமடு, நெடுங்கேணியை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

### கிரிதரன் கஜிதன்

(யாழ்ப்பாணம் பல்கலைக்கழக
வர்த்தகப் பிரிவு மாணவன்)



தோற்றம்
23.04.1991

மறைவு
11.07.2015

**எங்கள் கஜிதனே !**

பார்போற்றும் மைந்தன் கஜிதனே
பட்டதாரியாய் வருவாய் என
காத்திருந்தவேளை
கனவுகள் கலைந்திட
கற்பனைகள் சிதைந்திட
உயிரே உறைந்திட
காலனவன் செய்த சதி கோலம்
உன் செய்தி கேட்டு
கலங்கி நிற்கின்றோம்
யுத்தம் இருவரைக் காவுகொண்டிட
உன் தந்தையும்
யுத்தத்தின் கோரத்தால்
உடல் ஊனமுற்றிட
உற்றதுணையாய் எமை காக்கும்
ரட்சகனாய் இருந்திட்ட வேளை
உற்ற துணையற்று
நிர்க்கதியாய் நிற்கின்றோம்
பிரிவை எமக்கு பரிசாய்த் தந்து
நட்பின் ஆழத்தை எமக்குணர்த்தி
மீளாத்துயரில் எமையாழ்த்தி
மீளமுடியாத இடம்தனை
சேர்ந்தாயோ !

குடும்பத்தினர்.
ஒலு மடு, நெடுங்கேணி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org